தனிச்சுற்றுக்கு மட்டும்

காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

மாசி - 2025

காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

மாசி - 2025

படைப்புக்கள் அனுப்ப :
Mullaiamuthan1954@hotmail.com
mahendran1954@hotmail.com

படைப்புகளின் கருத்துக்களுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.

- ஆசிரியர் : சோபா
- வடிவமைப்பு : நெகிழன்
- நூல் அனுப்ப :
  R.Mahendran,
  34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk
- வருட சந்தா : 10.00 பவுண்ட்
- வங்கி இலக்கம் :
  R.Mahendran,
  A/C No : 90759821
  Sort.Code : 20-67-88,
  SWIFTBIC BUKBGB22
  IBAN GB80 BUKB 2067 8890 7598 21
  BARCLAYS BANK (PLAISTOW BRANCH)

வணக்கம்,

காற்றுவெளி மின்னிதழின் மாசி மாத(2025) இதழ் தங்களின் பார்வைக்கு வருகிறது.புத்தாண்டின் தொடக்கத்தில் புதிய நம்பிக்கைகளுடன் நாம் நின்றாலும் சிற்றிதழின் தொடர்வருகை என்பது வாசகர்களின் பங்களிப்பிலேயே தங்கியுள்ளது.பாரிய நம்பிக்கைகளுடன் ஈழத்து நூல் கண்காட்சியினை தொடர்ந்து நடத்த முனைந்தபோது சிற்றிதழின் அவசியம் நம்முள் உணரப்பட்டதன் விளையே காற்றுவெளியின் வருகை.

நினைத்த போது வரும் இதழாக முன்னர் வெளிவந்திருந்தாலும் நம்மைச் சுதாகரித்தபடி பயணிக்கவேண்டிய தேவையும் ஏற்பட்டது.பல்வேறு தளங்களிலும் இணைய இதழாகவும் தொடர்ந்து பயணித்து 2025இல் வந்து நிற்கிறோம்.படைப்பாளர்கள் தங்களின் படைப்புக்கள் ஊடாக இணைந்ததன் விளைவும் நம்பிக்கையுடன் கூடிய காற்றுவெளியின் இதழ் உலகப்பரப்பெங்கும் வியாபித்தபடி வேரூன்றி நிற்பதாக உணர்கிறோம்.

வாசகர் பரப்பை இன்னும் விரிவாக்கவே முனைகிறோம். இவ்வாண்டில் சாத்தியமாகவேண்டும்.

ஆங்காங்கே படைப்பாளர்களின் வருகையும்,புதிய சிந்தனைகளுடன் படைப்புகள் வெளிவரும் நம்பிக்கை தருவனவாக இருப்பதற்கேற்ப அப்படைப்பாளர்களுக்கேற்ப இணைய,அச்சு ஊடகங்களின் தேவையும் அதிகமாகவே எதிர்ப்பார்க்கப்படுகின்றன.பரிசுகளும்,விருதுகளும் படைப்பாளர்களை நோக்கி வந்தாலும் அவை உற்சாகம் தருவதற்குரிய ஆர்வங்கள் மேலோங்கிவருவதுடன்,அவை பற்றிய விமர்சனங்களும் எழாமல் இல்லை.யாவற்ரையும் கடந்து ஆத்மார்த்தமாக படைப்பளர்கள் பாகுபாடின்றி போற்றி மதிப்பளிக்கபடல் வேண்டும் என்பதே நமது விருப்பமுமாகும்.

காற்றுவெளி இதுவரை இலவசமாகவே வாசகர்களைச் சென்றடைந்திருக்கிறது.வாசகர்கள் சந்தா,அன்பளிப்புகளை தருவதன் மூலம் மேலும் இதழ் மெருகுற நமக்கு உதவலாமே.

புத்தாண்டிலும் போரின் அச்சுறுதல்கள்,நோயின் எச்சரிக்கைகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

எதிர்காலத்தில் அமைதியும்,சமாதானமும் அனைத்து மக்களும் பெறவும்,போராடும் இனங்கள் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய விடுதலையை பெற்றுக்கொள்ள நாமும் பிரார்த்திப்போம்.

நட்புடன்,
சோபா
01/02/2025

படைப்பாளர்கள்

கவிதைகள்

1. *மீ.யூசுப் ஜாகிர்*
2. *DR. ஜலீலா முஸம்மில்-ஏறாவூர்*
3. *வட்டக்கச்சி வினோத்*
4. *சா.நாகூர் பிச்சை -துபாய்*
5. *மு. பிரபு*
6. *ஸ்ரீவாரி மஞ்சு- திண்டுக்கல்*
7. *அம்பலவன்புவனேந்திரன் -யேர்மனி*
8. *சே கார்கவி கார்த்திக்*
9. *அலெக்ஸ்பரந்தாமன் -புதுக்குடியிருப்பு*
10. *யாழ் எஸ் ராகவன்*
11. *கி. கவியரசன்*
12. *இரா.வெங்கடேஸ் குமார்*
13. *கவிஞர் ரஜிதா அரிச்சந்திரன்*
14. *வில்வரசன்(இலங்கை)*
15. *ரா.சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன்(தென்காசி)*
16. *க. புனிதன்*
17. *கீழை.நிலாபாரதி*

சிறுகதைகள்

1. *க.கலாமோகன்(பாரிஸ்)*
2. *குந்தவை(இலங்கை)*
3. *மழைக்குருவி*
4. *டீன் கபூர்*
5. *பிரான்சிஸ் திமோதிஸ் (இலங்கை-மலைநாடு)*

கட்டுரைகள்

திரு.சமயக்கண்ணு -மதுரை

அமரர்.செம்பியன் செல்வன்(இலங்கை)

மொழிபெயர்ப்பு

தமிழில்: விஜி பிரகாஷ்

பாவம்... தாமஸ் அப்பா

தமிழில்: விஜி பிரகாஷ்



அடர்ந்த மரச்செறிவுகளும், காட்டுச்செடிகளும் நிறைந்த பரந்த தோட்டம். அதில் கூச்சலும் கும்மாளமுமாய் குழந்தைகள் விளையாடும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. கிழிந்த உடைகளோடு, அழுக்கு அப்பிய தோற்றத்தோடு தாத்தா ஒருவர் அடர்ந்த மரங்களுக்கு இடையே வருவது தெரிந்தது. விளையாடிக் கொண்டிருந்த சிறுவர், சிறுமியர் கண்களுக்கு இப்போது தென்படும் தொலைவில் வந்து தென்பட்டார். அவரைப் பார்த்தவுடன் குழந்தைகள் மனதில் வேடிக்கையான ஒரு உணர்வு ஏற்பட்டது, கிழிசல் உடை போட்டிருந்தாலும் வயது முதிர்ந்த கனவான் போல் தெரிந்தார். ஏனோ தெரியவில்லை, குழந்தைகளுக்கு அவரைப் பார்த்தவுடனே பிடித்து விட்டது. அதிலும் அவர் குழந்தைகளுக்கு முன் தன் பையிலிருந்து இனிப்புகளை எடுத்து நீட்டியதும், தங்களுக்கு விருப்பமானவற்றை எடுத்து சாப்பிடவுடன் அவர்களுக்கு உற்சாகம் கரை புரண்டது.

அவர்கள், தங்கள் விளையாட்டை முடித்துக்கொண்டு பிரிய மனமில்லாமல் சிறிய கிளைகளிலும், மண்ணிலிருந்து வேர் கிளம்பும் முகடுகளிலும் உட்கார்ந்து சிரித்து மகிழ்ந்திருந்த நேரத்தில் சற்றே அருகாமையில் அவர் வந்து அமர்ந்தார். குழந்தைகளிடம், "உன் பேர் என்ன? " என்று ஒவ்வொருவராக ஆசையோடு கேட்டார்.

மூத்தவனாக தோன்றிய சிறுவன், "என் பெயர் ஹக், அப்பா போலவே " என்றான். மேலும் தொடர்ந்து, " இவள் லில்லி, அவன் பேர் டாம்" என்றான்.

முதியவர் டாம் என்னும் குட்டிச் சிறுவனை சட்டென்று பார்த்தார்.

"டாம் என்ற பெயர் எதற்காக வைக்கப்பட்டது?" என்று ஆவலுடன் கேட்டார்.

குழந்தைகள் முகத்தில் சற்றே ஒரு சோகம் கப்பியது.

லில்லி மெதுவான குரலில் சொன்னாள்- "அவனுக்கு பாவம், அந்த டாம் சித்தப்பா பேரை வைத்திருக்கிறார்கள்", "கடலுக்கு போன சித்தப்பா மூழ்கி விட்டார் இல்லையா, அதனால் அவர் திரும்ப வரவேயில்லை, அந்த சித்தப்பா பேரைத்தான் அவனுக்கு வச்சிருக்கோம்" என்று கவலையோடு கூறினாள்.

சற்றே அமைதி நிலவியது. ஒரு நிமிட மௌனத்தைக் கலைத்தபடி முதியவர் பேசினார். "அப்படியானால் டாம் சித்தப்பா நீரில் மூழ்கி போய்விட்டார், அப்படிதானே,"

"ஆமாம் " என்று ஹக் பதில் சொன்னான். "டாம் சித்தப்பா போன கப்பல் கடலில் மூழ்கிவிட்டது. அவரும், இன்னும் பலரும் மூழ்கிவிட்டனர். தப்பித்துக் கொண்ட இரண்டு, மூன்று பேர் படகில் ஏறி ஊர் வந்து சேர்ந்தனர். ஆனால் தப்பித்து வந்தவர்களில் எங்க சித்தப்பா இல்லை. அப்பாவும் பல காலம் வரை அவர் திரும்பி வந்துருவார் என்று காத்திருந்து, காத்திருந்து பார்த்தார். ஆனால் அது மட்டும் நடக்கவேயில்லை. அப்பாவும் தேவாலயத்தின் உள்ளே ஒரு கல்லறை எழுப்பி நாங்கள் உட்கார்ந்து ஜபம் செய்யும் இடத்திலிருந்து அதைப் பார்க்கும்படி அமைத்திருக்கிறார்".

"நாங்கள் எல்லோருமாகச் சேர்ந்து தேவதூதர்களின் பாடல்களை அவருடைய பிறந்த நாளில் பாடுவோம்," என்றாள் லில்லி, தொடர்ந்து.

"அப்பாதான் கொஞ்சம் அழுது விடுவார்".

இந்த பேச்சில் எதிலும் கலந்து கொள்ளாமல் குட்டி பயல் டாம் மட்டும் மரத்தில் ஏதோ எழுதிக் கொண்டிருந்தான்.

ஹூக் கோபமாக, "இல்லை இல்லை அப்பா அழுததில்லை,"

"ஆண்கள் அழ மாட்டார்கள் " என்று உறுதியாக கூறினான்.

"ஆனால் அவர் அழுதார் "என்று லில்லி தொடர்ந்தாள். அவர் கன்னத்தில் மெல்லிய கண்ணீர் உருண்டோடுவதை நான் காலையில் பார்த்தேன். ஏனென்றால், இன்று டாம் சித்தப்பாவின் பிறந்தநாள். அப்பாவின் குரல் உடைந்து சோகமாக இருந்தது. "டாம் சித்தப்பா அப்பா அவ்வளவு நல்ல மனிதர்" என்று சொன்னார்.

முதியவர் அமைதியாக, மண்ணை வெறித்து உட்கார்ந்து இருந்தார். கடைசியாக "டாம் சித்தப்பா சென்று அவ்வளவு

நீண்ட நாட்கள் ஆகிவிட்டதா'' என்றார்.

இப்பொழுது பத்து வருடங்கள். நான் பிறந்த வருடம் '' என்றான் ஹக்.

''ஓ. ஆமாம், பத்து வருடங்கள், நீண்ட காலம்தான், முணுமுணுத்தார் முதியவர். ''பத்து வருடங்கள்தான், ஆனால் நூறு வருடங்கள் போல இருக்கிறது'' என்று மெதுவாக முனகினார்.

குழந்தைகள் வியப்பில் விழிகளை விரித்து ஒன்றையொன்று ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டனர்.

ஹக் ஆர்வத்துடன் ''அப்பபடியானால், உங்களுக்கு தாமஸ் அப்பாவை முன்பே தெரியுமா'' என்றான்.

''ஆமாம், எனக்கு நன்றாகத் தெரியும்,,,நானும் அதே கப்பலில் தான் இருந்தேன் ''என்றார்.

லில்லி கூச்சலிட்டாள், ''ஆனால் நீங்கள் மூழ்கவில்லையா?''

முதியவர் லேசாக புன்னகைத்தார். 'இல்லை, நான் மூழ்கவில்லை, நான் அதில் இருந்து தப்பிவிட்டேன். என்னிடம் டாம் தன் பழமையான வீடு, கிராமம் பற்றி எல்லாம் பேசுவார். அப்படி பேசும்போது ஒருநாள், கிராமத்தில் அவர் வீட்டின் பக்கத்தில் உள்ள சோலையின் ஒரு மரத்தில் அவருடைய பெயரை செதுக்கி வைத்ததாக சொன்னார். அதைத்தான் நானும் தேடுகிறேன், பார்க்க வேண்டும்'' என்றார்.

''ஓ.. அதையா தேடுகிறீர்கள், நான் காட்டுகிறேன், இங்கேயிருந்து பக்கத்தில்தான் ஒரு பீச் மரத்தில், இதோ... இங்கேயேதான்... வாங்க காட்டுகிறேன்''. என்றான் குட்டிப்பையன் டாம்.

அவன் காட்டிய இடத்தில் நின்ற பெரிய மரத்தின் காய்ந்த பட்டையில் ஏதோ பெயரில் முதலெழுத்துக்களும், தேதியும் நன்கு ஆழமாக செதுக்கப்பட்டு தெரிந்தன முதியவர், '' இவ்வளவு நாளாகியும் புதிதாக செதுக்கியது போல் இருக்கிறதே, இவ்வளவு நாட்களுக்கு அது மறைந்து போயிருக்கும் என்று நினைத்தேன்,''என்றபடி பெருமூச்சு விட்டார்.

டாம் தொடர்ந்தான், ''அப்பா எப்போதும் டாம் சித்தப்பாவின் பிறந்தநாளன்று இங்கு வந்து இதை துடைத்து, ரசிப்பார்'' நானே சொல்கிறேன், இதோ, அப்பாவே வந்து கொண்டிருக்கிறார், நான் நீங்கள் இங்கு தேடி வந்திருக்கிறீர்கள் என்று அப்பாவிடம் ஓடிப் போய் சொல்கிறேன், ''அப்பா.. அப்பா...'' ஓடிக் கொண்டே கத்தினான் டாம். கத்தியபடியே ஓடினான்.. ''அப்பா, அப்பா... இங்கே ஒரு பெரியவர் டாம் சித்தப்பாவை தெரியும் என்று சொல்கிறார், '' என்று பரபரத்தான்.

அப்பா அருகில் வந்து நெருங்கி நின்று. உற்றுப் பார்த்தார். பெரியவரின் முகத்தை உற்றுப் பார்த்தவர், பேயைக் கண்டது போல.. நின்றார். பேயறைந்தது போல... பெரிய குரலெடுத்து அழுது கத்தினார்.

''டாம்.... டாம்......நீயா வந்திருக்கிறாய்'', என்று இருவரும் ஆரத் தழுவினார்கள்.

ஆம் .... குழந்தைகள் மனதில் டாம் சித்தப்பாவாக நினைவில் செல்லமாக நிலைத்த தாமஸ் அப்பாவேதான் .... !!

மூழ்கிய கப்பலில் பயணம் செய்த தாமஸ் அப்பா, தண்ணீரில் முழுகாமல், சமாளித்து ஏதோ ஒரு தீவின் கரையில் ஒதுங்கினார். யாருமில்லாத அனாதையாக கடலில் பிடித்த மீன்கள், பழங்கள், கொட்டைகள் இவை எல்லாம் சாப்பிட்டு காலங்கள் கழிந்தன. ஏதாவது ஒரு கப்பலோ, படகோ வராதா ? என ஏங்கியிருந்தவர் கண்களில் பத்து வருடங்கள் கழித்து ஒரு கப்பல் தீவில் ஒதுங்க, அதன் உதவியோடு இங்கிலாந்து வந்து சேர்ந்தார். தட்டுத் தடுமாறி அவருடைய பழமையான ஊரைத் தேடி வந்தார். அதுவரை அவர் இருப்பிடம் பற்றிய செய்தி ஒன்றும் தெரியவில்லை.

ஊரில் யாருக்கும் அவரை அடையாளம் தெரியவில்லை. வெப்பமான தீவுப்பகுதியில் பல வருடம் தனித்திருந்து அவருயை தோலின் நிறம் கருமையாகி இருந்தது. நீண்டகால தனிமை, சோகம், கடினமான வாழ்க்கை அனைத்தும் அவருடைய தோற்றத்தில் பதிவாகியிருந்தது. நரைத்த முடி, அண்ணனால் மட்டுமே அவரது கண்களை வைத்து அடையாளம் காண முடிந்தது.

அவர்களுக்குள் இருந்த அன்பு அத்தகையது ! அன்பு ஒன்றே!

அன்று இரவு முன் முற்றத்தில் உட்கார்ந்து கதை கேட்டுக்கொண்டிருந்தன குழந்தைகள். தாமஸ் அப்பாவின் கால் மேல் அமர்ந்து கொண்டு வானத்து நட்சத்திரத்தை எண்ணி கணக்கு எடுத்து கொண்டிருந்த லில்லி, கவலையுடன் ''அப்பா இனிமேல் அந்த கல்லறையை என்ன செய்வார்'' என்றாள்.

''அது ஒரு அழகான கதை சொல்லும் நினைவு சின்னம், அதன் மேல் பேரழகான தேவதை உட்கார்ந்து அன்பு கீதம் பாடிக் கொண்டிருக்கிறாள் '' என்றார் டாம் சித்தப்பாவான தாமஸ் அப்பா புன்னகையுடன், குழந்தையின் தலையை வருடியபடியே.

குறிப்பு :

கிறிஸ்மஸ் ஹம்பெர் என்ற சிறார் சிறுகதைத் தொகுப்பில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டது. மூலக்கதையின் ஆசிரியர் பெயர் குறிப்பிடப்படவில்லை.

மூன்று நகரங்களின் கதை

க.கலாமோகன் (பாரிஸ்)

அப்பா இறந்துவிட்டார் யாழ்ப்பாணத்தில். காலையில்தான் தந்தி வந்தது. பாஸ் எடுத்து கொழும்பில் வந்து நிற்கும் உறவினர்களுடன் நான் உடனடியாகப் பேச வேண்டும் என்பதை தெரிவிக்கும் சிறு குறிப்பு: *Contact Immediately*. தந்தி கிடைக்குமுன் எழுதத் தொடங்கிய சிறுகதையின் பக்கங்கள் சில மேசையின் மீது அலங்கோலமாகக் கிடக்கின்றன. சிகரெட் ஒன்றைப் பற்றவைத்துக்கொண்டு கீழேயிறங்கி சிகரெட் விற்பனை நிலையமொன்றில் நுழைந்து சில ரெலிகாட்களை (பொதுத் தொலைபேசி நிலையத்திலிருந்து பேசுவதற்காக உபயோகிக்கப்படும் கார்ட்கள்) வாங்கிய பின், தொலைபேசிக் கூடமொன்றிற்குள் போய் கொழும்பிற்கு அடிக்கின்றேன்.

“சாப்பிடப் போய்விட்டார்கள். ஒரு மணித்தியாலம் கழித்து எடுங்கள். அவர்கள் வந்து விடுவார்கள்.” என்று சொல்லப்பட்டது.

கூடத்தை விட்டு வெளியே வந்தபோது அப்பாவின் மரணம் ஏன் எனது விழிகளிலிருந்து கண்ணீரைக் கொட்ட வைக்கவில்லை என ஒரு தடவை கேட்டுக் கொண்டேன். எனது கண்ணீர்க் கடல் வற்றிவிட்டதோ? ஒருவேள

அப்படியுமிருக்கலாம். பல இரவுகள் என்முன் படமாய் வந்து போயின. இந்த இரவுகளில் முகம் தெரியாத பலரிற்காக அழுதேன். இது அவர்கள் இறந்து விட்டார்கள் என்பதற்காக அல்ல. அவர்களது வாழ்வுகள் அநியாயமாகப் பறிக்கப்பட்டுவிட்டன என்பதற்காகவே. எனது கடல் இவர்களுக்காக அழுததில் வற்றிப்போய்விட்டது. அப்பா இயேசுநாதர் போல் புத்துயிர் பெற்று வந்தால் என்னிடம் ஏன் அழவில்லை என்று கேட்டுச் சுயவிமர்சனம் செய் என என்னை நிந்திப்பாரா? அவர் அப்படிப்பட்டவரல்ல என எனக்குள் ஒரு தடவை சொல்லிக் கொள்கிறேன்.

நான் இப்போது பாரீஸில் அகதியாக, பாதி உறவினர் கொழும்பிலும், மீதி யாழ்ப்பாணத்திலும். அருகே இருந்த *bar* ஒன்றிற்குள் புகுந்து ஒரு டெமி (பியர்) அடித்துவிட்டு மீண்டும் தொலைபேசிக் கூடத்திற்குள் புகுந்து கொழும்புக்கு அடிக்கின்றேன்.

''ராமசுந்தரம் வந்துவிட்டாரே?'' இது நான்

''ஓம். ஓம் லைனிலை நில்லுங்கோ, நான் அவரை கூப்பிட்டு விடுகிறேன்''

சில கணங்கள் காத்திருப்பை வெட்டும் வகையில், மறு முனையில் பெரியமாமாவின் குரல்.

''நீ ஏன் உடனை ரெலிபோன் எடுக்கேல்லை. நான் இங்கை வந்து ஒரு கிழமையாகுது''

''மாமா, உங்கடை தந்தி பிந்திதான் கிடைச்சுது. விஷயத்தை சொல்லுங்கோ, அப்பா என்னெண்டு செத்தவர்''

''அவருக்கு வருத்தமொண்டுமில்லை, சாப்பிட்டிட்டு விறாந்தைக்கு வந்தவர் திடீரெண்டு விழுந்தார். அப்படியே செத்துப்போட்டார். செத்த வீட்டாலை எங்களுக்கு கனக்கச் செலவு உடனை கொழும்புக்கு காசை அனுப்பிவை. நான் அதை அங்கை கொண்டு போய்க் கொடுக்கிறன். மாமி உன்னோடை கதைக்கப் போறாவாம். அவவிட்டைக் குடுக்கிறன் கதை'' ரெலிகாட் யூனிட்டுகள் முடிவுக்கு வந்தததால், அதனை இழுத்துவிட்டு இன்னொரு காட்டை நுழைக்கின்றேன். ஏற்கனவே நான்கு காட்டுகள் தின்னப்பட்டு விட்டன.

''மாமி''

''தங்கச்சியை எப்ப உங்கை எடுக்கப் போறீர்?''

''எடுக்கத்தான் வேணும் ஆனா...''

''ஆனா வெண்டா....''

''என்னிட்டை இப்ப காசில்லை. வேலையிலையிருந்தும் நிப்பாட்டிப் போட்டாங்கள்...''

''நீர் இப்படி எவ்வளவு நாளைக்குத்தான் சொல்லிக் கொண்டிருக்கப் போகிறீர் எப்பிடியும் அவவை உங்கை எடும். தம்பியும் (அவவின் மகன்) உங்கைதான் இருக்கிறான். அவன் உங்கை வந்து ஒரு வருஷம்தான். நாங்கள் எங்கடை கடன் எல்லாத்தையும் தீர்த்திட்டம். நாளைக்கு அவன் இங்கை 30 (முப்பது ஆயிரம் பிராங்) அனுப்பிறான். நீர் அவனிட்டைக் குடுத்தீரெண்டா அவன் தான் குடுத்தனுப்பிற கடையிலை குடுத்து அனுப்பி வைப்பான். உம்மடை தங்கச்சியின்ரை ஆளும் அங்கைதான் இருக்கு. அவரோட கதைச்சு எப்படியும் அவவை அங்கை எடுக்கிற வழியைக் கெதியாப்பாரும். மாமா உம்மோடை கதைக்கப் போறாராம். கதையும்'' றிஸீவர் மாமாவின் கரங்களுக்குச் செல்லும் சத்தம், தொலைவாகயிருந்த போதும் தெளிவாகவே எனது காதில் விழுகிறது.

''காசை உடனை அனுப்பிவை''

''ஓம்''

''அவவை உடனை அங்கை எடு''

''ஓம்''

''நாளைக்கு எனக்கு ரெலிபோன் எடு!''

''ஓம்''

தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது. ஏதோ பிராங் மெத்தையில் சயனம் செய்பவனைப்போல அனைத்துக்கும் ''ஓம்'' போட்டு விட்டேன். இந்த ''ஓம்''கள் எல்லாம் உண்மையா எனக் கேட்டபடி றூம் கதவினை அண்மித்தபோது எனக்கு முன்னே மரணம் வந்தது.

மரணம், முன்பெல்லாம் மரணங்கள் என வரும்போது சோகம் வாழப்படும். பேசிய சமாதானமும், சமாதானம் பேசிய போரும் எனது உணர்வுகளுக்கு இருந்த உரிமைகளைக்கூட பறித்து எங்களையும் வேறு வாழும் பிணங்களாக்கிவிட்டதே. வாழ்விற்காக, மரணிக்காதவர்களையும் கொல்லும் வித்தையைக் கற்றுக்கொண்டிருக்கும் இன்னொரு உலகில் நாம். காசு, காசு, காசு, என்ற ஓலம் தான் மரண ஓலங்களையும் முந்தித் தலையை நீட்டுகிறது.

''ஓம்'' போட்டவன் நான் தலைக்குமேலே வெள்ளம் போய்விட்டது. இனிச் சாண் போனால் என்ன முழம் போனால் என்ன என்ற திடகாத்திரத்தோடு கதவைத் திறந்தால் காலை வங்கியிலிருந்து வந்து என்னால் உடைக்கப்படாதிருந்த கடிதம் தனது அச்சுறுத்தும் விழிகளைக் காட்டுகிறது. எனது கணக்கிலிருந்த 300 பிராங்குகளையும் தின்று அதற்கு மேலும் தின்று விட்டேனாம். வேலையில்லாது இருக்கும் ஒருவர் இப்படி நடந்து கொள்வது வங்கிச் சட்டத்திற்கு முரணானதாம். எவ்வளவு விரைவில் நான் வங்கியின் பணிப்பாளரைச் சந்திக்க முடியுமோ அது நல்லதாம். இல்லையேல் ''நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும்''

என்ற மிகவும் நாகரீகமான குறிப்பு. முழுமும் போனால் என்ன என்ற திடகாத்திரம் இருந்ததால் கடிதத்தைக் கிழித்து ஜன்னல் வழியாக எறிகின்றேன்.

இன்றிரவு நான் தூங்க வேண்டும். ஆனால் எப்படி? அதுவும் இவ்வளவு சுமைகளையும் தாங்கியபடி. எனது றூமிற்கு அருகிலுள்ள றூமில் இருப்பவன் ஒரு போர்த்துக்கல் தொழிலாளி. அவனிற்கு பிரெஞ்சு துண்டாகவே தெரியாது. ஆனால் ஒரு பிரெஞ்சுகாரிக்கு மூன்று பிள்ளைகளைக் கொடுத்துவிட்டான். இதற்கெல்லாம் பாஷை இடையூறாக இருக்கவில்லை. முடிவில் பிரெஞ்சுக்காரி அவனைத் துரத்திவிட்டாள். அவன் தனிக்கட்டை. தனக்குப் பிறகு மூன்று பிள்ளைகளையும் பார்த்து நான்கு வருடங்கள், என்னைக் கொண்டுதான் பிள்ளைகளுக்குக் கடிதம் எழுதுவான். பதில்கள் வரா. அவனோ, எனக்கூடாக சளைக்காமல் அவளுக்கும், பிள்ளைகளிற்கும் எழுதிக் கொண்டிருப்பான்.

காலை 4 மணிக்கு வேலைக்குப் போகுமுன் ஒரு பியர். மாலை 5 மணிக்குத் திரும்பி வந்தவுடன் வைனில் தொடங்கி விடுவான். எனது சுமையைக் குறைக்க ஏதாவது குடிக்க வேண்டும் போலிருந்தது. அவனிடம் ஏதாவது இருக்கும் என்ற நம்பிக்கையுடன் போய்க் கதவைத் தட்டுகின்றேன். திறந்தவனின் கையில் போத்தல். அதனைக் கண்டவுடன் எனது சுமையில் அரைவாசி உடனடியாகவே இறங்கியது.

"உது புதுசா வந்த வைன். திறம், குடி" கேட்காமலேயே, குறிப்புணர்ந்து உபசரித்தான். நான் மறுக்கவில்லை உபசரிப்பைத் தேடித்தானே நான் அங்கு போயிருந்தேன்.

"வடிவாக்குடி. இன்னும் மூன்று போத்தல் இருக்கு"

இருவரும் எமது சுமைகளை இறக்கி இன்னோர் உலகை வாழ வெளிக்கிட்டோம். ஏற்கனவே பொரித்து ஆறிப்போன சார்டின் மீன்களைச் சூடாக்கி என் முன் டேஸ்ட்டுக்காக வைத்தான்.

அப்பா மீண்டும் என் நினைவில் முன் வந்தார். தந்தியோடு வந்த கடிதங்கள் பொக்கற்றுக்குள் இருந்ததால் தைரியமாக அவைகளை எடுத்து உடைத்தேன். "நீ ஒண்டுக்கும் யோசிக்காதை. நாங்கள் இப்படியொண்டு நடக்குமெண்டு கனவிலை கூட நினைக்கேல்லை மனதை திடமாக வைத்திரு" இந்தச் செய்திகள் எனக்கு ஒத்தடத்தைத் தந்த வேளையில் கடிதங்களில் வாழும் யதார்த்தமும், தொலைபேசிக்கூடாக வாழப்படும் யதார்த்தங்களும் ஒன்றா என ஒரு தடவை கேட்டுக்கொள்கின்றேன்.

இரண்டு பக்கங்களிலும் போலித்தனம் இல்லை. ஒரு வேளை அது என்னிடம்தான் உள்ளதோ? எது போலி? எது யதார்த்தம்? நான் வாழும் விதம் கூட யதார்த்தம்தான். என்னிடம் காசு இல்லை. காசு இருப்பது சிலரின் யதார்த்தமாக இருக்கும் போது என்னுடையதோ அதற்காகத் தவிண்டையடிப்பது. இன்று ஒருமையில் பேசும் பலர் நாளை என் நிலைக்குத் தள்ளப்படும்போது "பாரும், எம்மடை பாடு இப்படியிருக்கு" என்று பன்மையில் பேசுவார்கள். எது ஒருமை எது பன்மை என்பதை விளக்கிக் கொண்டதுதான் எனது இருதலைக்கொள்ளி எறும்பு நிலைக்குக் காரணம் என நான் ஒரு போதுமே சொல்லமாட்டேன். எனது ஒருமை பன்மைகளிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்து கொண்டிருக்கும் ஒன்று. ஒருமைகள் பன்மைகளாகி, பன்மைகள் பன்மைகளாகாமல், இன்னொரு ஒருமையை வாழும் உலகில் நான்.

நான் மூன்று நகரங்களின் புத்திரன். எனது முதலாவது நகரம் யாழ்ப்பாணம். போர்த்துக்கல் நண்பனின் றூமைவிட்டு எனது றூமிற்கு வந்து கட்டிலில் களைப்புடன் விழும்போது இந்த முதலாவது நகரை நோக்கி எனது கால்கள் ஒரு தடவை ஓடுகின்றன.

தாழங்காய் பொறுக்கிய நாள்கள். ஊமைக்கடல் அடிக்கடி வற்றும். அதன் மீது கால் விரல்களால் கீறப்படும் ஓவியங்களைச் சூரியன் வந்து முத்தமிட்டுச் செல்வான். வளர்ந்தேன். வேலை கிடைத்தது கொழும்பிற்கு. பாஸ் எடுக்காமல் போனேன். கொழும்பு. இது எனது இரண்டாவது நகரம். மூன்று வருடங்களின் பின் அகதியாகி, முதலாவது நகரிற்கு, இரண்டு சூட்கேஸ் நிறையப் புத்தகங்களைச் சுமந்தபடி வந்தேன். வழியிலே என்னை மறித்த இளம் சிங்களச் சிப்பாய்கள் சூட்கேஸிற்குள் கிடந்த தமிழ்ப் புத்தகங்களைக் கண்டு "ஏன் நீ மஹாவம்சத்தை அவமதித்தாய்?" என விசாரணை ஏதும் செய்யவில்லை. முதலாவது நகரிற்கு வந்தபோது அங்கே நான் அகதி முகாமிலிருந்த விஷயம் தெரியாமல் செத்தவீடு வேறு கொண்டாடப்பட்டிருந்தது. நான் இறந்து உயிர்த்தேன். ஒரு வேளை, யேசுவைப் போல் நானும் மீள உயிர்த்தவனோ? "பரமண்டலத்திலிருக்கும் பிதாவே எனது பாவங்களை அர்ச்சி" ஊரிலுள்ள அனைத்துக் கோவில்களிலும் என் பேரால் அர்ச்சனைகள், பூஜைகள் என்பன செய்யப்பட்டன. நான் மறுஜென்மம் பெற்றுவிட்டேன் என்பதற்காகத்தான்.

"நீ எங்களுக்கு உழைச்சுத்தர வேணாம். ஆனா கொழும்புக்கு மட்டும் திரும்பிப் போகாதை"

வீடு, இப்படி என்னிடம் கெஞ்சிக் கூத்தாடியபோது கொழும்பு வீதிகளில் வாள்களோடு நின்று குங்குமப் பொட்டிட்டவர்களையும் காதில துவாரங்களைக் கொண்டிருந்தவர்களையும் தேடிய அப்பாவிச் சிங்களக் காடையர்கள் மத்தியிலிருந்து எனது உடலைப் பௌவுத்திரமாகக் காத்த குணசேனாவின் நினைவு வந்தது. அவனும் ஒரு அப்பாவிதான். அப்பாவிகள் வாள்களை தூக்க தூண்டுதலாக இருந்தது எது என்பதை என்னைப் போலவே புரிந்து கொண்டவன். யாழ்ப்பாணம் இங்கு எவ்வளவு நாள்கள் தான் வாழ்வது! இது மட்டுமென்ன

நகரங்களே இல்லாத நகரா?

வீட்டின் மன்றாட்டம், முடிவில் "வெளிநாடு போ!" என்று என்னைத் துரத்துவதில் வந்து நின்றபோது வியப்படைந்தேன். வெளிநாடு போவதா? எப்படி? நிறையக் காசு வேண்டுமே!

"போறதெண்டது சின்ன விஷயமே காசுக்கு எங்கை போறது?" இது நான்.

பதில் உடனடியாகக் கிடைக்கவில்லை. ஆனால் என்னை வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். நான் தப்பிவிட்டேன்.

உடல். எனது உடல். காசினால் காக்கப்பட்ட உடல். எனது உடல். கடல் கடந்து அகதியாகிவிட்ட உடல். மூன்றாவது நகரில் நான் இப்போது அகதி. முதலாவது நகரிலோ அகதிப் பெருமை கிட்டாமல் எத்தனையோ உடல்கள் மண்ணிடை மண்ணாய்ப் புதைந்த வண்ணம். தப்புதல், கருத்துடனோ கட்சியுடனோ கடவுளுடனோ சம்பந்தப்பட்ட விஷயமில்ல. காசுடன் சம்பந்தப்பட்டது என்பதை மூன்றாவது நகரில் காலடி எடுத்து வைத்த முதல் நாளிலேயே புரிந்துகொண்டேன். எனது மூன்றாவது நகரம் பாரீஸ்.

நான் மூன்று நகரங்களிற்கிடையே சிக்கிக் கிடக்கும் ஒரு புத்திரன். யாழ்ப்பாண போஸ் ஓபிஸ் முத்திரை குத்தப் பெற்று கடிதங்கள் வருவது நின்றுவிட்டது. கடிதங்கள் சுற்றி வளைந்து வரும். அதுவும் கொழும்பு முத்திரை குத்தப்பட்டு வரும் கடிதங்களில் இப்படியொரு குறிப்பு இருக்கும். "உடனடியாக இந்த நம்பருக்கு எடு" என்னிடமோ ரெலிகாட் வாங்கக்கூட காசில்லை. இப்படியெனில் எப்படித் தொலைபேசியிலாவது வாழ முடியும்?

போனவாரம் எனது பிரெஞ்சுச் சிநேகிதியைச் சந்தித்தபோது, தனது பிறந்த தினத்திற்கு ஒரு புத்தகத்தில் சில கவிதை வரிகளையாவது அன்பளிப்புச் செய்திருக்கலாமே என முகத்தைச் சுழித்தாள். நான் அனைத்து நாடுகளுக்கும் அனைத்து மனிதர்கட்கும் அந்நியமான, என்னைத் தமது வீடுகளிற்கு வாவென நண்பர்கள் எனப்படுவோர் அழைக்கும்போது "ஓம் வருகின்றேன்." என வாக்குறுதி கொடுத்துவிட்டுப் போகாது விடுக்கின்றேன். போனால்கூட எனது பொருளாதார நிலையை விளங்கிக்கொள்ளாமல் "அப்ப, உம்முடைய றூமுக்கு எப்ப வாறது..." எனக் கேட்டு விடுவார்களோ என்ற அச்சத்தினால்தான். எனக்கு வீடு இல்லை. நான் தூங்குமிடங்கள் எனது வீடுகளுமில்லை. வீடு என்பது அவசியமா என்ற விசாரணைக்குள் நான். சில வேளைகளில் இந்த மூன்று நகரங்களையும் தாண்டி வீடுகள் மனிதர்களும் இல்லாத நான்காவது நகரம் ஒன்று இருக்குமாயின் அங்கே போனால் என்ன என்று என்னிடம் கேட்டுக் கொள்வதுண்டு.

பெரியமாமா கேட்டுக்கொண்டபடி மறுநாள், நான் போன் பண்ணவில்லை. தூங்கி விழித்து, மீண்டும் சில தினங்கள் தூங்கி, விழித்து ஒரு காலையில் எழுந்து பாரிஸிலிருக்கும் எனது ஒன்றவிட்ட தம்பிக்கு போன் பண்ணுகின்றேன்.

"உங்கடை மாமா கொழும்பில வந்து நிற்கிறார். உங்களோடை பேச வேணுமாம். உடனடியாக எடுங்கோ!"

"எந்த மாமா?"

"வேலு மாமா"

இவர் பெரிய மாமாவோ, சிறிய மாமாவோ அல்ல, இன்னொரு மாமா. ஒன்றவிட்ட தம்பி தந்த இலக்கணத்தை எழுதிவிட்டு சொற்ப யூனிட்டுகளுடன் எஞ்சிக்கிடந்த ரெலிக்காட்டின் துணையுடன் கொழும்பிற்கு அடிக்கிறேன். வேலு மாமா பேசுகின்றார்.

"மருமோன் உம்மடை பெரிய மாமா கொழும்பிலையிருந்து யாழ்ப்பாணத்திற்குப் போயிட்டார். நீர் திரும்பவும் போன் எடுக்கிற தெண்டு சொல்லீட்டு எடுக்காமல் விட்டிட்டீர்" எண்டு குறையாச் சொன்னவர்.

"ஓம் மாமா. நீங்கள் சொல்லிறது சரி. என்னிட்டைக் காசு வசதியில்லை. அதாலைதான் கொழும்புக்குத் திரும்பவும் அடிக்கேல்லை. இங்கையிருந்து கொழும்புக்கு அடிக்கிறதெண்டா சரியான செலவு"

"ஓம் மருமோன். எனக்கு விளங்குது. எங்களுக்கு இங்கை கஷ்டம் இருக்கிறதைப் போல உமக்கும் அங்கை கஷ்டம் இருக்கும் தானே. எதுக்கும் கொஞ்சக் காசெண்டாலும் அனுப்பி வையும். நான் யாழ்ப்பாணத்திற்குப் போய் விஷயத்தை வடிவா விளங்கப்படுத்திறன்"

"நீங்கள் எப்ப அங்கை திரும்புவியள்"

"5000 ரூபா குடுத்துப் பாஸ் எடுத்தனான். அடிக்கடி பாஸ் எடுத்துக்கொண்டு கொழும்புக்கு வர என்னிட்டை வசதியில்லை. இங்கை கொஞ்ச அலுவல்கள் இருக்கு. அதுகளை முடிச்சிட்டுப் போக இன்னும் ஏழெட்டு நாளாகும்."

மாமாவுடன் தொடர்ந்து பேச வேண்டும் போல எனக்கு ஆசையாக இருக்கின்றது. அதற்குள் ரெலிக்காட்டினுள் இருந்த கடைசி யூனிட் ஒரு கிக்கீ போட்டுவிட்டுத் தனது இறுதி மூச்சை விடுகின்றது. சோகத்துடன் றூம் திரும்புகின்றேன்.

நன்றி : பாரிஸ் முரசு, 29.04.1992



மனிதத்துவம்

குந்தவை

கவிந்து வந்த அந்தகாரத்தினால் இருட்டடிப்புச் செய்யப்பட்ட கடல் கன்னங்கரேலாய் அச்சுறுத்துகின்றது.

மடிந்து விழும் அலைகளின் இரைச்சல் ஒலி பூதாகாரமாகப் பெருகி, செவிப்பறைகளில் வந்து மோதுகின்றது.

கூட நின்ற பெண்கள் எல்லாரும் தம் கணவன்மார் கொண்டு வந்தவற்றை விற்கப் போய்விட்டனர். தங்கம்மா மட்டும் தன்னந்தனியளாய் கரையில் காத்து நிற்கின்றாள்.

கால்களுக்குக் கீழ் மணலை அரிக்கும் கடலலைகள், கால்களையே பறித்து இழுத்து கடலிற்குள் கவிழச் செய்வது போன்ற தடுமாற்றம்.

‘குப்’ என வந்து முகத்தில் அடிக்கும் கடல் காற்றின் உக்கிரத்தில் ஏற்படும் மூச்சுத் திணறல்.

கரையில் இழுத்துப்போட்ட வள்ளங்கள், தூரத்தில் மணல் மேட்டில் மினுங்கிடும் விளக்கின் சிதறல்கள் இரண்டிலும் அந்த வட்டாரத்தினரின் வழமையான இயக்கம் தெரிகிறது.

கடலுக்குப் போனவர்கள் மீண்டு விட்டனர். ஆனால் இன்னும் அவள் கணவன் கந்தையன் மட்டும்....

திகில் அவளுள் மகத்தானதாய் பெருகி, விசுவரூபம் எடுக்கின்றது. ஏன், ஏன் என்ற கேள்வி, அவள் நெஞ்சில் வந்து வந்து மோதுகின்றதேயன்றி, அதற்காக பதிலை அவளால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

வதைக்கப்படும் நெஞ்சகத்தின் வேக்காட்டிலே – கரையில் வந்து சிக்கிய அலை நுரைபோல் அவள் பரிதவிக்கின்றாள்.

‘இப்படியே நின்றால்? மற்றவர்களிடம் சொல்லி அவர்களைத் தேடி வர அனுப்பியாவது...’ மனத்தைத் துண்டமாக்கும் இந்த எண்ணம் எழுந்த பொழுது....

“தார் அது இருட்டுக்குள்ளை?” அருகே ஒரு குரல். நிலைத்துவிட்ட அவள் திரும்பிப் பார்க்கின்றாள். அருகே கனகலிங்கம். அவன், கந்தையனுக்கு வேண்டாதவன்தான். ‘பெரிய இடத்தின் ஆள்’ என கந்தையன் அடிக்கடி சொல்வானே! ஆனால் அதுவெல்லாம் பார்க்க இதுவா நேரம்?

“அண்ணே! அண்ணே! கடலுக்குப்போன ‘இதை’ இன்னம் காணேல்ல. நான் இப்ப என்ன செய்ய?”அவளின் தவிப்பும் தாபமும் ‘சட்’ என தடைப்பட..

இருந்தாற் போல், மின்சாரத்தின் நீண்ட ஒளிக்கற்றை இருளில் பெரும் கோடு கிழித்தாற்போல் பாய்ந்து வருகின்றது. அது உப்புமாலில் இருக்கும் ‘கஸ்டம்ஸ்’ காரரின் ‘சேர்ச்லைட்’.

அதன் ஒளியில் சற்றுத் தூரத்தில் படகை கரைக்கு இழுத்து விடும் மூவர். அவன் தனியாகத்தானே போனான்? ஆனால் படகு அவனுடையதேதான். கனகண்ணனை மறந்து அவள் துடிப்பே நடையாய் அதனருகே பாய்கிறாள்.

கரும் இருட்டில் கணவன் உருவம் அருகே வருவது தெரிகிறது. “ஏன் இவ்வளவு நேரம்?” அவளின் சொற்கள் களிப்பினால் குலுங்குவதுபோல வெளி வருகின்றன.

“பிறகு சொல்லுறன் இந்தா மீன் கொண்டுபோ”, அவன் பின்னால் இரு கரிய நிழல் உருவங்கள்.

“தார் இது’

“இரண்டு இந்தியாக்காறர் நீ போட்டு வா எண்டுறன்.” கந்தையனின் குரல் அவளருகே கிசுகிசுக்கின்றது.

⊙ ⊙ ⊙

தன் குடிசையின் வெளி முற்றத்தில் சுற்றி அடைக்கப்பட்ட கிடுகு வேலிக்குப் பின்னால் அந்த இருவரோடும் கந்தையன் படுத்திருக்கின்றான்.

கடல் பிரயாணத்தினாலும் அப்பொழுது பெற்ற கொடூரமான அனுபவங்களினாலும் களைத்துச் சோர்ந்திருந்த அவ்விருவரும் பாயில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் அவன் மட்டும் - உடல் களைத்துத்தான் இருக்கின்றது.

ஆனால் நெஞ்சம் கழன்று அந்த நினைவுப் பரப்பிலேயே மிதந்து வர துவக்குகின்றது. அதை மீட்க முடியாத மனநிலை.

நீருள் நீந்தி வரும் வெண் குமிழியாய், விழுந்து எழும் கடலிடையே இரு உயிர்களைக் காப்பாற்ற அவன் நடத்திய போராட்டம், வருகிறது,

கூடவே, வள்ளத்தைக் கரையில் இழுத்துச் சேர்க்கும் பொழுது உடம்பை வந்து தாக்கும் அதன் கனம்போல் நெஞ்சை வந்து தாக்கும் அந்த நிகழ்ச்சியின் கனம்.

அவன் இன்று வழக்கத்தை விட அதிக தூரத்திற்கே போயிருந்தான். மற்ற மீனவர்களும்ஒரு முறையும் போகாத இடம் அது.

மூழ்கி, எழுந்து தெரிந்த அந்த இரு தலைக்கறுப்புகளை சட் என அவன் கண்கள் கண்டு கொண்ட விதம்.

நிலைமையை உணரவே அவனுக்கு அரிய சில வினாடிகள் தேவைப்பட்டன.

வள்ளத்தை அவற்றின் அருகே செலுத்தியபொழுது, ஏக்கப் பரிதவிப்புடன், நிராசையும் ஆசைத்துடிப்பும் போட்டியிட, வள்ளத்தைத் தொட்ட, வெடவெடத்த வெளிறிய அந்த ஒரு முகம்.

இது எல்லாவற்றையும் விட, தனியாளாய் இருவரையும் வள்ளத்தில் ஏற்றி, வேண்டிய சிகிச்சை அளித்து ஆசுவாசப்படுத்தியபின், அவர்களிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக அவன் விளங்கிக்கொண்ட அந்தப் பயங்கரச் செய்தி.

அதை நினைக்கும் பொழுது, உடலெங்கும் ஓடி விறைக்கின்றது.

ஏமாற்றும் தரகர்களின் சூழ்ச்சியினால், தாயகத்தைவிட்டு, அயல் நாட்டைப் பொன் கொழிக்கும் நாடாக எண்ணி ஓடி வரும் அவர்கள் கூறிய கதைகள்.....

மன அடித்தளத்தில் சிக்கியிருக்கும் ஆசைகளுக்குத் தூபம் போடப்பட்டு, அவைகள் சுவாலையாக்கப்படும் நிலையில், இருக்கும் உடமை, சொத்துக்களை விற்று, தலைக்கு நூறு, இருநூறு என தரகுகாரர்களுக்கு கூலி கொடுத்து, இருள் போர்வையில், இந்தியக் கரையை உதறிவிட்டு, படகு ஏறிய பத்துப்பேரையும் அந்தக் குரூரமான படகுக்காரன்...

முக்கால் வழியில், ஏதோ ஒரு ஒளியைக் கண்டு பயந்த படகுக்காரன் அவர்களை இறக்கிக் கரைக்கு நீந்திப்போகுமாறு கட்டளையிடுகின்றான். நீந்தத் தெரியாதென, இறங்க மறுக்கும் இவ்விருவரும் கடலில் பலவந்தமாகத் தள்ளப்படுகின்றனர். திணறித் திக்குமுக்காடியவாறு இவர்கள், படகைப் பிடித்தவாறு கெஞ்சுகின்றார்கள். பதிலாக, துடுப்பின் வீச்சு, பலமாக நீரைப் பிளந்து கொண்டு, இவர்கள் மேல் விழுகின்றது. இதனால் பிடி தளர்ந்து நையும் இவர்களிடமிருந்து தப்பி அவசரமாகத் திரும்பிச் செல்கின்றது படகு. கை களைத்து, உடல் ஓய்ந்து, சாவிற்கும், உயிருக்கும் இடையில் அவர்கள் தத்தளித்த வேளையில்தான் அவன் அவர்களைப் பார்க்கின்றான்.

நம்பியவர்களை நடுக்கடலில் தூக்கி எறிந்து, அவர்களின் உயிர் முனையிலே தம் சௌகர்யத்தைத் தேடிக் கொள்ளும்அந்தப் பணத்தாசை பிடித்த அரக்கர்களின் நினைவில், அதிரும் கடலாய் உள்ளம் நடுங்குகின்றது.

நேரம் ஊர்கின்றது.

நினைவோட்டத்தினால் அலைக்கழிக்கப்படும் உணர்வுகள், நெடுநேரம் நெஞ்சலி நின்று விறுவிறுக்கின்றன.

பின் சிறிது சிறிதாய், உடலின் அசதியினால், அவை மழுங்கி உறக்கத்தில் கரைந்து நழுவுகின்றன.

⊙ ⊙ ⊙

அவனின் நித்திரை கலைக்கப்படுகின்றது. படபடப்புடன் மோட்டார் படகு ஒன்று நீரைக் கிழித்துச் செல்லும் ஓசை.

மோட்டார் படகு.... கஸ்டம்ஸ்காரர்கள்... ஊரில் சில பிரமுகர்கள்... தர்மலிங்கத்தார்.

நினைவுகள் தூக்கமயக்கத்தில் தொய்ந்து தொடர்பற்ற பஞ்சுப் பொதிகளாய் மிதக்கின்றன.

ஒரே பாணியில் அடுக்கு அடுக்காக முளைக்கும் பெரிய வீடுகள்... 'விர்' எனப் பறக்கும் படகுபோன்ற கார்கள்.

அன்றொருநாள், எங்கிருந்தோ, அந்த கடற்கரையில் வள்ளம் வள்ளமாக வந்து இறங்கிய சாக்குகள், அவற்றைத் தூக்கி றோட்டு அருகே நின்ற லொறியில் அடைக்க போட்டியிட்டு உதவிய அந்தப் பகுதி மக்களுக்கு நோட்டு நோட்டாகக் கிடைத்த காசு.

கந்தையன் புரண்டு படுக்கின்றான்.

அருகே அவர்கள்...

இதயத்தில் இருந்தாற்போல் ஒரு நெருடல்

ஒரு பெரிய மனிதரின் உதவியை எதிர்பார்த்து வந்ததாக அவர்கள் கூறினார்களே...

ஒரு நாள் தர்மலிங்கத்தார் தன்னைக் கூப்பிட்டனுப்பிப் பட்டும் படாமலுமாய் சொன்ன தன் 'வியாபார' ரகசியம்.

நினைக்கும் பொழுதே, கறை பிடித்த இரும்பை, உப்புத்தாளால் உரசுவது போல நெஞ்சில் ஒரே அரிச்சல்.

"இஞ்சைபார் கந்தையா! உனக்கு என்ரை விஷயம் தெரியும்தானை. எனக்கு நல்லா வள்ளம்விட தெரிஞ்ச ஆட்கள் தேவை. நீ இதுக்கு வந்து விடன். நல்லா சம்பாதிக்கலாம். நீயும் எத்தனை நாளைக்குத்தான் இந்த மீன் பிடிக்கிற தொழிலைச் செய்யப் போகிறாய்? அண்டு பிடிச்சு அண்டு சாப்பிடுறதை இனி விட்டு விடலாம்."

அவருக்கு கோபம் வராத முறையில், அதை ஏற்க மறுக்க அவன் காட்டிய வினயம்.

'சரி சரி நீ போ! மற்றவங்கள் எண்டா எங்கை என்னட்டை வரலாம் எண்டு இருக்கிறாங்கள். நீ என்னடாண்டா..."

சாதாரணமாகச் சொல்வதுபோல் இருந்தாலும், அதற்குள் உள்ளோடியிருந்த கோபம் அப்படியே தெரிந்தது.

அவரின் 'வியாபாரத்தில்' இதுவும் ஒரு ரகம்!

பளையில் இருக்கும் அவருக்குச் சொந்தமான பல ஏக்கர் நிலத்தில் பாடுபட உபயோகப்படுத்தப்படுபவர்கள் இந்த 'இவர்கள்'.

வேலை பெற்று கொடுத்ததற்காகப் பெருந்தொகையான முன் பணத்தை, அவர்களின் சம்பளத்திலிருந்து எடுத்துக் கொண்டபின்... சம்பளம் கொடுத்தே வேலை வாங்கப்பட வேண்டுமென்ற நிலை அடைந்ததும், அவர்கள் பொலீஸில் ஒப்படைக்கப்படுபவர்கள்.

எதைக் கண்டு இவர்கள் இங்கு ஓடி வருகின்றார்கள்? தரகர்களின் வஞ்சனைச் செயல்களுக்கும், துருவும் 'சேர்ச்லைட்'டின் கண்காணிப்பிற்கும் தப்பி, இக்கரையில் வந்து ஒதுங்கும் இவர்களுக்கு, இத்தகைய இன்னும் இதைவிட மோசமான,அடிமை நரக வாழ்வுதானே காத்திருக்கின்றது.

அவனுக்கே புரிபடாத தவிப்பு நிறைந்த ஆதங்கம், அவன் நெஞ்சை ஆக்கிரமித்துப் பிசைந்து கொண்டிருக்கின்றது.

அதன் வேகத்திலே, துடிக்கும் மீனைக் கையில் ஏந்தும் பொழுது படபடக்கும் விரல்போல் உள்ளம் படபடக்கின்றது.

ஏன் இந்தத் தவிப்பு அவனுக்கு மட்டும்? ஒரு மனிதனின் நிலை கண்டு மற்ற மனிதனிடம் பீறிடும் இரக்கத் துடிப்பா இது? அப்படியானால் இந்த மனிதத் துடிப்பு, கடலில் தள்ளி, துடுப்பால் அடித்த அந்தப் படகுக்காரனுக்கும், சம்பளமின்றி வேலை வாங்குவிக்கப் போகும் அந்தப் பிரமுகருக்கும் ஏன் ஏற்படாது இருக்கின்றது!

இந்த அலைப்பினிடையேயும் ஒரு தீர்மானம்.

'நாளைக்கு இவர்களைத் தர்மலிங்கத்தாரிடம் போக விடக்கூடாது. அந்த வாழ்க்கை இவர்களுக்கு வரவேண்டாம். போலீஸிலே ஒப்படைத்துத் திரும்ப அவர்களின் நாட்டிற்கே அனுப்புவதுதான் சரி'

⊙ ⊙ ⊙

விடிகின்றது.

மன உளைச்சலில் சோர்வினால் அப்பொழுதுதான் லேசாகக் கண்ணயர்ந்திருந்த கந்தையன் விழிக்கின்றான்.

படலைக்கு வெளியே யாரோ கூப்பிடுகின்றார்கள்.

எழுந்து வெளியே வருகின்றான். அவன் முன்னால் சில போலீஸ்காரர்கள்.அப்பகுதிக் கிராமசேவகர், அவர்களோடு தர்மலிங்கத்தார்.

"சில கள்ளக் குடியேற்றக்காரர்களுக்கு நீ அடைக்கலம் குடுத்திருப்பதாய் கேள்விப்பட்டோம். உன்ரை வீட்டை சோதினை போடவேணும்." தொடர்ந்து படலைத் தள்ளிக் கொண்டு சப்பாத்துக் கால்கள் உள்ளே போகின்றன.

விறைத்தவனாய் நிலைத்துவிட்ட கந்தையன் தர்மலிங்கத்தாரைத் திரும்பிப் பார்க்கின்றான்.

'இவர் ஏன் இங்கு?' எண்ணப் புதிர் வலையாய் பின்னலிடுகிறது.

'கிராம சேவகர்' விளக்குகின்றார்.

"படகில் பத்துப் பேர் வந்ததாகத் தெரியுது. கரையில் காத்து நிண்டு நீந்தி வந்த எட்டுப் பேரை பிடிச்சுப் போட்டம். மற்ற ரெண்டு பேரும் உன்னிடம் இருப்பதாக இவர்தான் சொன்னார்..."

கந்தையன் தான் கரைக்கு வந்த பொழுது, மனைவியோடு கூட நின்ற கனகலிங்கத்தை நினைத்துக் கொள்கின்றாள். சிக்கல் தெளிவாகின்றது.

அவன் மூலம் செய்தி அறிந்த தர்மலிங்கத்தார், அதனால் ஆபத்து வருமென அஞ்சி தானே போலீஸிற்குத் தகவல் கொடுத்து, மற்ற எட்டுப்பேரையும் பிடிக்க உதவியதோடு, போலீஸை இங்கும் அழைத்து வந்திருக்கின்றார்.

இதனால், அன்று வலிய அழைத்த பொழுது மறுத்த கந்தையனை பழி வாங்கிய திருப்தியும் கூட.

போலீஸ்காரர்கள் திரும்பி வருகின்றார்கள். அவர்களின் நடுவே அந்த இருவரும். பின்னால் ஒப்பாரி வைத்து அரற்றும் அவன் மனைவி.

"சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களுக்கு உதவி, பாதுகாப்பு அளித்த குற்றத்திற்காக உன்னைக் கைது செய்யுறோம்."

கந்தையன் அதிர்ந்து நிற்கின்றான். அவனிலா குற்றச் சுமை?

எல்லாவற்றுக்கும் காரண கார்த்தாவாக இருந்த ஒருவர் நல்ல வேஷம் போடுகின்றார்.

வெறும் மனித நியதியின் உந்தலினால், கடலில் தத்தளித்த இருவரைக் காப்பாற்றி, ஒரு இரவு அவர்களுக்குத் தன் குடிசையில் ஓய்வளித்த குற்றத்திற்காக... அவனுக்கு?

எண்ணப் பொருமலில் கொதி நிலை அடைந்த பாலாய் அவன் குமுறும் வேளையில்...

ஏமாற்றுக்காரர்களை நம்பிய குற்றத்திற்காகக் 'கள்ளத்தோணி' என இழிவு படுத்தப்படும் அந்தப் பரிதாபகரமானவர்கள் அவன் கண்ணில் படுகின்றனர்.

நேற்று, மூச்சுத்திணறி நீர் குடித்துத் துவண்ட அவர்களுக்குத் தான் உயிரளித்த காட்சி பளிச்சிடுகின்றது.

அவர்களை, அவன் நிராதரவான அண்டை நாட்டார் என்பதற்காகவோ, தம்மினத்தவர் என்பதற்காகவோ காப்பாற்றவில்லை. வாழத் துடிக்கும் இரு மனித உயிர்கள் என்ற மனிதாபிமானத்திற்காகத்தான் காப்பாற்றினான்.

மனித இயல்பு அற்றுப் பேயாட்டம் போடும் அரக்கர் மத்தியில் அவன் தன் மனிதத் தன்மையைக் காட்டியிருக்கின்றான்.

அவன் இரு ஜீவன்களுக்கு 'உதவி' இருக்கின்றான். உயிர் அளித்திருக்கின்றான்.

இந்நினைவு. அகப்பையாகி அவன் கொதிப்பை ஆற்றுகின்றது.

மனைவியை ஆத்திரத்துடன் பார்த்துவிட்டு போலீஸ் வானில் ஏறிக்கொள்ளுகின்றான்.

வாகனம், வல்வெட்டித்துறைப் போலீஸ் நிலையத்தை நோக்கி விரைகின்றது. கந்தையன், பெரும் ஆட்டம் கண்டு ஓய்ந்த நெஞ்சினனாகின்றான்.

நன்றி:காலத்தின் குரல்கள், 1964. பல்கலை வெளியீடு.

மீ.யூசுப் ஜாகிர்

வெட்கமில்லாத மனம்



இன்றுடன் பத்து நாட்கள் ஆகிவிட்டது.
உன் குறுஞ்செய்திகள்,
உன் அழைப்புகள்
எனது அலைபேசிக்கு வந்து..,

ஒரே ஊரில் வசித்தாலும்
எதேச்சையாக ஒரு முறை கூட
பார்க்க முடியவில்லை..,

இந்த பத்து நாட்களில்
ஒவ்வொரு நாளும்
நூறு முறை அலைபேசியில்
நீ ஆன்லைனில் இருக்கிறாயா
என்று பார்த்திருப்பேன்..,

தினம் சில மணி நேரமாவது
உன்னைப்பற்றி
யோசித்திருப்பேன்..,

ஒரே ஒரு முறை கூடவா என்
நினைவுகள் உன்னை
தீண்டவில்லை..?

உனக்கு ஒன்று தெரியுமா
இந்த பத்து நாட்கள்
நான் நானாகவே இல்லை..,
நீ மட்டும் எப்படி இயல்பாய் இருக்கிறாய்
என்னை விட்டு..?

என் பிடிவாதங்களை தாண்டி
உனக்கு சில முறை
இன்ஸ்டாகிராமில் குறுஞ்செய்தி
அனுப்பி விட்டு அதை நீ
பார்க்கும் முன்னமே
அழித்து விடும் எனக்குள்
நிகழும் வலிகளை அறிவாயா..?

யாரோ ஒருவருக்காக என்னை
தவிர்க்கும் போதே என்
நம்பிக்கையை உடைத்து விட்டாய்..?

உன் மீது தான் தவறென்று
தெரிந்தப்பின்னும்
எனக்கு தண்டனை கொடுத்த போதே காதலை
இழந்து விட்டாய்..?

உனக்கு வலித்திருக்குமோ
என்று இப்போதும் உனக்காக
யோசிக்கும் மனதிற்கு
கொஞ்சமும் வெட்கமில்லை..,

இருந்திருந்தால் நீ மீண்டும்
வரவேண்டும் என யோசிக்குமா..?



Dr ஜலீலா முஸம்மில், ஏறாவூர், இலங்கை

பெருந்திரள் நட்சத்திரத் துணுக்குகளாய்...

அந்தப் புன்னகையில்
ஏதோவொரு ஒளி துலங்கிற்று

விடுதலை பெற்ற கூண்டுப்பறவையின் சந்தோஷம்
நித்தியத்தின் நிவேதனமாய்
நிலவொளியின் குளுமையாய்
வீடு திரும்புதல் சாத்தியமற்ற
பெருந்தேடலின் தீவினுள்
சஞ்சரிக்கும் காற்றாகினேன்

ஒளியின் முதல் எங்கோவிருக்க
சிறு கனலின் கைங்கரியத்தை
என்னவென்பது?
உருகச் செய்து உதிரத்தில் கலந்து யாக்கையின்
ஆழ்கடலுக்குள் முங்கிய சங்காகினேன்

பூக்களை நேசித்தல் நல்லதுதான்
வேர்களின் விசுவாசத்தைப் பெறுதல் அதைவிடவும்
ஓம்பப்படுவது
சாசுவதம் தருவது

அதையேதான் வேண்டித் தியாகத்தெருக்களில்
பூந்தோட்டங்களை நிறுவத் தொடங்கினேன்

உன் சிறு
ஒளிப்பொட்டின் நிறமிகளை
இதயப்பெட்டிக்குள் அடைக்கப்
பாடுபட்டேன்
பின்னும் பலகோடி ஒளியாண்டுகளில் பெருந்திரள்
நட்சத்திரத் துணுக்குகளாய்
விசிறியடித்து வெளிக்கிளம்பினாய்

சுடர்க்கற்றையெங்கும் சொல்லிலடங்கா
எண்ணிக்கையளவில் பட்டாம்பூச்சிகள்
ஸ்பரிசிப்பதைக் கண்டேன்
அவ் ஸ்பரிசம்
ஆன்மாவில் சங்கமித்து மெல்லிசையாய்ப் படர்ந்து
அரவணைத்திற்று

அன்பே..
உன் வசீகரத்தின் அடர்த்தியில்
போதையுற்று திரும்பிச்செல்ல வழியற்று என்
விழிகளின் வழியே உன் சுடரடைந்தேன்
அங்கே
அன்பினும் மிகுந்தவொரு அன்பினால்
அன்பாகினேன்...!!

மு. பிரபு கவிதைகள்



ஈரத்துணி

தொடர் மழை
தொடரமுடியாத
தொழிலாளர்கள் பணி,

ஈரத்துணி
அவர்கள்
தலையில் மட்டுமில்லை
வயிற்றிலும் கூட..

⊙

தொடர் மழை

தேங்கி நிற்கும்
தண்ணிர்
வடியவில்லை,

வாழ்க்கைக்கு பாதையின்றி
கண்ணீர் வடிக்கும்
நடைப்பாதை வியாபாரி.

⊙

மழைக்காலம்
அடுப்பு பற்றவைக்க
முடியாமல்
செங்கல்
சூளைக்காரர்.

வயிற்று பசியை
அணைக்க முடியாமல்
தவிக்கும்
செங்கல் சூளை
தொழிலாளி.

⊙

விவசாயமுமில்லை
விலைகளும்
குறையவில்லை
நிரந்தர வேலையுமில்லை
வேலைக்கு ஏற்ற
ஊதியமுமில்லை
ஆனாலும்
மறைமுக வரிகளால்
சுமைதாங்கிகளாய்
ஏழைகள்.

⊙

செயலிகளில்
வாசிக்கப்படும் புத்தகங்கள்
பாசிக்கு உணவாகும்
நூலக புத்தகங்கள்.



இரா.வெங்கடேஸ் குமார்

நினைந்திடும் நினைவுகள்

ஆழியில் நிதம் கரை கண்டிடும் அலை போல
அகண்ட மனதில் நிதம் நிலைகிறது நினைவுகள்
இமை தொடாத நிகழ்வுகள் ஒலியால் மொழி பேசி
ஒலி பேசாத காதல் இமையில் மொழி சொல்லி
நிதம் உண்ட உணவுகள் மணத்தால் ருசி கூறி
விரல் தொடாத பொருள் எல்லாம் நிறத்தால் சொல்லி
நிகழ் காலம் நிலை இன்றி ஓடியும்
நிலையாய் நினைவுகள் ஔிர்கிறது ஓட்டத்தில்
ஓவியமாய் உருவம் படைக்கிறது உண்மை இல்லாத வடிவில்
நிகழ் காலமும் நினைவாகி எதிர்காலத்தில் நின்றால்
நித்தம் மாய நினைவுகளில் நிற்க தான் வாழ்வே
நிகழ் கால காட்சிகள் எல்லாம் நிச்சியம் இல்லாத புகை
நிலைப்பதோ நிரந்தரமாய் ஓடிடும் நினைவு அலைகள் தான்
நிகழ், இறந்த எதிர் காலமெல்லாம் நிலை பெறுவதும்
நிதம் ஓடிடும் புரியாத நிகழ்வாழ்வு முழுதும்
இடைவேளை தேநீரில் நினைத்திடும் நினைவுகளில் நிலைபெற தான்



அம்பலவன்புவனேந்திரன்.. யேர்மனி

புதிய விடியல்

கேள்விகளால் உலகில் கேட்டது கிடைக்காத
கேவலங்களை அகிம்சை கிழித்தே வீசிடும்
வேள்விகள் மலிந்தே வெந்திட்ட தேசத்தில்
விடுதலை பெற்றிடல் வெற்றியைக் காட்டும்
ஊழ்வினை வந்திங்கே உறுத்தியே ஊட்டும்
உண்மையும் நேர்மையும் உவப்பினை கூட்டும்

ஆள்பலம் நிறைந்த அழகிய நாட்டினில்
அன்னியர் நுழைவதை அறவே மறுத்திடியின்
மாழ்வதைத் தடுத்து மண்ணினைக் காத்து
மாறிடும் காலத்தில் மகிழ்ச்சியே ஆளும்
சூழ்நிலை உணர்ந்து சுதந்திரம் சிதையாது
செய்கையில் அறமே செம்மையை சூட்டும்

வாழ்வினைச் செதுக்கிட வந்திடும் விடியலில்
வளங்களும் நலங்களும் வழங்கிடல் வேண்டும்
தாழ்வினில் உழலும் தமிழினம் மீழ்வதற்குத்
தகைமையைத் தரணியில் தந்திடல் வேண்டும்
நீள்கின்ற காலத்தில் நிலைத்திடும் ஒற்றுமை
நெருங்கிடும் விரிசலை நொருக்கிட வேண்டும்.

அலெக்ஸ்பரந்தாமன், புதுக்குடியிருப்பு.

புனைகுறள்

வறுமை வருமின் சேரா - அவர்தம்
சிறுமை கொண்ட உரித்துறவு.

⊙

“ஆண்மைக்கழகு மீசை”யென்றே - கறந்தார்
ஆரணங்கிடம் பெருந்தொகை சீதனம்.

⊙

பெட்டிக்குள் பெருகிய வட்டி - வராது
‘பெட்டியுடன்’ போகும் வழியில்.

⊙

ஆட்சியில் அமர ஆசை - ஆயினும்
மீட்சியில்லை சனத்துக் கிதுவரை.

⊙

விலைபோகும் விருதுகள் பலவும் - தரையில்
எருதுகள் போடும் சாணிக்கேசமன்.

⊙

வெளியில் வருகின்ற உண்மை - வருமின்
இருளுக் கிங்கேது இருப்பு?

⊙

உறக்கத்தில் நடிப்பார் நடிப்பின் - ஒருநாள்
உறங்கியேபோவார் உயிர் அற்று.



யாழ் எஸ் ராகவன் கவிதைகள்..

உன் மீதமர்ந்த
வண்ணத்துப்பூச்சி
என்னருகே வந்தபோது
சாலையெங்கும் பனி

இல்லை என சொல்லும் போது
துடிதுடித்து தலையாட்டுவது
காதருகே எனது உயிர்

உன்னோடு சேர்ந்த
எனது ரேகைகள் நீ
மருதாணி பூசும் போது
சிவப்பதை வெட்கம் என்பார்

காற்றில் காதல்பதம்
கூடும் நாட்கள்
வரம்பற்றவை..

இதயம் தொழும்
கிரகப் பெயர்ச்சி
நடைபெறும்
பொழுதெல்லாம்
முத்தப்பரிகாரம்.

◎



எங்கோ தொடங்கி
எங்கெங்கோ முடியும்
பேச்சில்தான் எத்தனை சுகம்

என்ன பேசணும்
என்பதில் அல்ல
எப்போது பேசினாலும்
உன்னோடு பேசும் போது
சொற்களுக்குச் சிறகு முளைக்கிறது...

எவ்வளவு பேசணும் என சொற்களை எண்ணிக்
கொண்டே வந்திருக்கிறாய் எவ்வளவு நேரம்
ஆனாலும்
உன்னிலிருந்து அவை எல்லை மீறியதே இல்லை..

நானோ கடலளவு சொற்களோடு
உலகத்தில் கடைசி நாள் போல்
கொட்டிக் கொண்டிருக்கிறேன்

நீயோ மாநகராட்சி தண்ணீர் போல
அளந்து தான்
ஆனாலும்
என்னை பேச வைத்து கேட்பது எவ்வளவு ஆனந்தம்
உனக்கு

ஒருபுறம் குறைவாகவும் மறுபுறம் நிறைவாகவும்
நம்மோடு அன்றாடும் சொற்களுக்கு எப்பொழுது
தான்
நிம்மதியோ..
தீராத சொற்களோடு திசைகளை வெறித்து
கொண்டிருக்கிறேன்
நீயோ மௌன விரதம்
செய்யும் நாளை
எண்ணிக் கொண்டு..

◎

மழை வடிந்த அதிகாலையில்
காற்றில் பறந்து வரும்
சிட்டுக்குருவியின் பாடல்
ஞாபகக்குளத்தில் அலையடிக்கும்

குளிர்கால இளவரசி
கதை ஒன்றில்
ஒளிந்து இருக்கும்
ஆச்சரியம் இன்னும் விளங்கவில்லை

பேருந்துப் பயணத்தில்
யாரோ ஒருவர்
யாருடனோ நடத்தும்
கருத்து முரண் ஏன் என்னைப்
பாதிக்கவில்லை

மின்னலின் சாயலில்
ஓடும் வாகன நெரிசலில்
மிதக்கும் தட்டானின்
சுகம் எப்பொழுது வாய்க்கும்

சாலையோர நாணலில்
சூரியக் கதிர் வரைந்த ஓவியம்
பிரபஞ்ச ரகசியத்தைப்
மொழிபெயர்த்தபடி

இன்னும் இன்னும்
ஆயிரம் சுவாரஸியங்களை
அள்ளி வரும்
அதிகாலை...

◎

நீ தேடும் நாளில்
தொலைந்து போகும் தருணம்
என்ன உணர்வு தரும்

தேவையான ஒன்று
ஏதோவொரு நாளில்
ஒழிந்து விடும்

திகட்டாத பொருளாக
இருக்க தோணும்
காலங்கள் தோறும்
காயங்கள்

◎

தொடக்கமும் முடிவும்
இல்லா விளையாட்டில்
எப்போதும் நீயே
வினையாற்றுகிறாய்.

நீ விட்டு சென்ற
வெற்றிடம் இன்னும் அப்படியே
உன் மூச்சில் விரவும்
யாவும் வலிமிகுந்தவை...

அணுகாது ஆகலாது
தடுமாறி தவிக்கும்
சூழலில்
தீயாகி சிரிக்கிறாய்..

எல்லா வண்டியும்
சேறும் இடமுண்டு
ஆனாலும் ஒவ்வொரு
நிறுத்தமும் தடயம்

◎

எல்லாக்குழிகளும் ஆபத்தானவைதாம்
விழுந்து கிடந்தாலும்
எழுந்து நடந்தாலும்

யானைக்கும் அடிசறுக்கும் என்றது
உன் இதழ் முறுவல்

பானைக்கு ஒரு பருக்கையென
நீளும் உன் ஸ்பரிசத்தில்
வேனில் மறைந்தது

எங்கு தான் ஒளித்து
வைத்திருக்கிறாய்
மீட்சிக்கான வாசலை

இ.எம்.ஐ. சூழ் உலகில்
ஒவ்வொரு முறையும்
உன் நிழல் படர
வரம் தா

◎

எல்லையற்ற சொற்களை
மௌனத்தின் வழியே.
கடத்துகிறாய்.

ஞானியாவதும் மழலையாவதும்
இமைகள் சிமிட்டும்
நொடியில் நிகழும் அற்புதம்

காற்றும் இலைகளும்
சிரிக்கும் தருணங்கள்
உன் வரவை
பறைசாற்றும்..

நீ கால் நனைத்த
குளத்தில் மீன்கள்
சங்கீதம் இசைக்கும்..

பாசம் இருப்பினும்
வழுக்குவதில்லை
உன் பாதம் பதித்த படித்துறை

சிறுகதை

கோலிக்காய்

மழைக்குருவி



எங்கள் தெருவில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை விளையாட்டை மாற்றிக் கொள்வோம். தை பிறந்தால் பம்பரம், அது முடிந்தால் தீப்பெட்டி அட்டை, அது முடிந்தால் சில்லாங்குச்சி(கில்லி), அது முடிந்தால் சிகரெட்டு அட்டை, அதுவும் முடிந்தால் கோலிக்காய். எங்கள் விளையாட்டுகளின் காலச் சக்கரம் இப்படித்தான் சுழலும். இப்போது கோலிக்காய் சீசன்.

அன்றைக்கு விளையாட்டு என்றைக்குமில்லாது அத்தனை பயங்கரமாய் இருந்தது. கோலிக்காய்களை எட்டுத் திசைகளிலும் சிதறவிட்டுக் கொண்டிருந்தான் பால்ராசு. மகராசனும் நானும் நிறைய தோற்றுவிட்டோம். பழனி மட்டுமே ஒரு மாதிரி சமாளித்து ஆடிக் கொண்டிருந்தான்.

கோலிக்காய் விளையாட்டு என்றாலே எனக்கு எப்பவும் ஆகாது. ஜெயிப்பு தோப்பு என்றாலே எனக்குச் சுத்தமாகப் பிடிக்காது. அதிலும் கடைகளில் காசு கொடுத்து வாங்கி பொருள் இழப்பு ஏற்படும் விளையாட்டுகள் என்றாலே மண்டை கிறுகிறுக்க ஆரம்பித்துவிடும் எனக்கு. ஜெயித்தவன் தோற்பதும் தோற்றவன் ஜெயிப்பதும் நாளுக்கு நாள் மாறும் என்றாலும் தோற்ற பயல்களை ஜெயித்த பயல்கள் கேலி செய்ய ஆரம்பிப்பார்கள். தோற்ற பயல்கள் யாராகினும் எனக்கும் கொஞ்சம் அழுகை வரும். “அவந்தோத்ததுக்கு இவன் யாம்டே தெவங்குதான்?” என்று எல்லோரும் சிரிப்பார்கள்.

நான் தோற்றுப் போனால் தெருவின் மையத்தில் பிரம்மாண்டமாக வீற்றிருக்கும் பூவரச மரத்தின் மடியில் போய் அமர்ந்து கொள்வேன். கண்களில் இருந்து நீர் மட்டும் தாரைதாரையாக வழிந்து கொண்டிருக்கும். கொஞ்ச நேரத்துக்கு ஒரு முறை மரத்திலிருந்து உதிர்ந்து சுழலும் இலையும் பூவும் என்னைக் கொஞ்சம் ஆற்றுப்படுத்துவது போலிருக்கும். பூவரச மரத்தடியில் பீடி சுற்றிக் கொண்டிருக்கும் கண்மணி அக்கா, “இங்கிலீசு மீடியோம் படிக்கித பய.. அழலாமாடே..” என்பாள். கண்ணீரைத் துடைத்த படியே, “யக்கா.. ஒந்நெஞ்சுல கொஞ்சூண்டு சாஞ்சுக்கட்டா..” என்பேன். பூவரசம்பூக்களிலான அந்த நெஞ்சில் தலை சாய்த்து இருக்கும் என்னிடம் தலை கோதியபடியே கண்மணி அக்கா கேட்பாள், “இதுக்குன்னே தோக்கியோடே..?”

சில நாட்களில் அழுகிற என்னைக் கண்டு பயல்கள் விடாமல் கேலி செய்வார்கள். ஒரு கட்டத்தில் பொறுக்க முடியாமல், “அதுலா எங்கோலிக்காயே கெடயாதே.. மூணாந்தெருவுல ச்சும்மா கீழல்லா கெடந்திச்சி.. அது செய்ச்சா என்ன தோத்தா என்ன..” என்று சளைக்காமல் பயல்களிடம் பொய்யடித்து விடுவேன். அன்றைக்கு நம்புவது போல் நம்பிக்கொண்டு மறுநாள் அதையும் பயல்கள் கேலி செய்வார்கள்.

பால்ராசும் பழனியும் எப்போதும் கள்ளக் கூட்டணி வைத்துக் கொள்வார்கள். ஒருவன் காய் மற்றவன் பக்கத்தில் இருந்தாலும் வேண்டுமென்றே அடிக்காமல் போங்காட்டம் ஆடுவார்கள். இருவருமே பணவசதி உள்ள வீட்டுப்பிள்ளைகள். அதனால் இயல்பிலேயே கூட்டு உண்டாயிற்றோ என்னவோ?

மகராசன் ஏழையிலும் ஏழை பரம ஏழை. ஆனால் வறுமையிலும் அத்தனை நேர்மையான பிள்ளை. புதுக் கோலிக்காய்கள் அவன் கடையில் வாங்கி யாரும் பார்த்ததே இல்லை. ஜெயிப்பு

தோப்பு பற்றி எல்லாம் கிஞ்சித்தும் கவலைப்படாத ஜென்மம். வந்தா வருது போனா போது என்பான். பொழுது விடிந்தால் ஆட்டை ஆரம்பிக்க எல்லோரிடமும் கோலிக்காய்கள் கையிருப்பு வைத்திருப்போம். அவனிடம் இருந்ததே இல்லை. யாரிடமாவது இரண்டு காய்கள் கடன் வாங்கி ஆடுவான். அந்தி சாய்வதற்குள் நாற்பது ஐம்பது காய்கள் ஜெயித்து அத்தனையும் நொடிப்பொழுதில் கவனமின்றி ஆடி தோற்பான். ஒருவேளை அப்படியே ஜெயித்து கைவசம் இருபது முப்பது காய்கள் வைத்திருந்தால் கூட அவற்றை வீட்டிற்கு எடுத்துச் செல்ல மாட்டான். அந்தி சாயும் வேளையில் கைவசமுள்ள அத்தனைக் கோலிக்காய்களையும் “எடுத்துக்கிடுங்கடோய்...” என்று வான் நோக்கி விட்டறிவான். பிச்சைக்காரர்கள் போல அரண்டு புரண்டு ஓடி அவற்றை பொறுக்கி எடுப்போம். மகராசனின் இந்த மனநிலை ஏன் நமக்கு ஒருநாளும் வரமாட்டேன் என்கிறது என்று எப்போதும் நினைத்துப் பார்ப்பேன். எதுவும் எனக்குப் புலப்படாது.

இதோ விளையாட்டு படுமோசமாய் சென்று கொண்டிருக்கிறது. நானும் மகராசனும் சன்னமாய் தோற்றுக் கொண்டிருக்கிறோம். மகராசன் என்னிடம் சொன்னான், “டப்பாக்கார் மவன் மூக்கன கூட்டியாந்தாதாம்ல இவனோளுக்கு சரியாருக்கும். வால போவோம்”, என்று ஆட்டைக்கு கொஞ்ச நேரம் ‘ஸ்தூரி’ சொல்லிவிட்டு மூக்கனை அழைப்பதற்கு மூணாம் தெருவுக்குச் சென்றோம். ஸ்தூரி என்பது ஒரு திரைப்படத்தின் இடையே இடைவேளை விடுவது போல அல்லது ஒரு டேப் ரெக்கார்டரில் ஒலித்துக்கொண்டிருக்கும் ஒரு பாடலை *Pause* பொத்தானை அழுத்தி தற்காலிகமாக நிறுத்தி வைப்பது போல. எங்களின் அனைத்து விளையாட்டுகளிலும் ஸ்தூரி உண்டு.

மூக்கன் ஒன்றும் அதிவீரராமபாண்டியனெல்லாம் இல்லை. மூக்கனும் எல்லோரிடமும் சிலமுறை தோற்றிருக்கிறான். ஆனாலும் எப்போது எப்படி ஆடுவான் என்று யாராலும் சொல்ல முடியாது. அநேக ஆட்டைகளில் எல்லோரையும் நகம் கடிக்க வைப்பான். “சொட்டய முறிச்சுட்டானே... வத்தல் வத்தலா பொரிக்கானே... ஈரக்கொலய அறுக்காம உடமாட்டாம்போலயே...” என்று எல்லோரையும் பதற வைப்பான். ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் என்று காசு வைத்து டீம் பிரித்து ஆடும் ஆட்டங்கள் என்றால் ஏழாந்தெரு எட்டாந்தெருவில் இருந்து கூட மூக்கனைத் தேடி ஆள் வருவார்கள். ஒரு ஃபார்முக்குள் மூக்கன் வந்துவிட்டான் என்றால் தெருப் பையன்களுக்கு வியர்த்துவிடும். ஆறடிக்கு அப்பால் கிடைக்கும் காயைக் கூட ஒரே சுண்டில் தூக்கியடித்து நெற்றியில் பொட்டு வைத்தார்போல் அடிப்பான். மூக்கன் பார்முக்கு வந்துவிட்டான் என்கிற செய்தி பக்கத்து ரைஸ்மில்லில் அமர்ந்திருக்கும் கிழவர்களுக்கு எப்படித்தான் தெரியுமோ, யார்தான் சொல்வார்களோ, உடனே கிளம்பி பூவரச மரத்தடிக்கு வந்து விடுவார்கள். வில்லிலிருந்து அம்பு புறப்பட்டது போல விரலில் இருந்து சீறிப்பாய்ந்து சடீர் சடீர் என்று அடிக்கும் மூக்கனின் விரல் வித்தைகளைக் கண்டு மலைத்து சிறு குழந்தை போல் கைதட்டிச் சிரித்து மகிழ்வார்கள். மூக்கனின் விரல் வித்தை என்பது திரைப்படங்களில் ஒரு கதாநாயகன் அசாத்தியமாக வில்லன்களை பந்தாடுவது போல் இருக்கும்.

எப்போதும் சாராயம் குடித்துவிட்டு ஏதேனும் ஒரு வீட்டுத் திண்ணையில் அமர்ந்து எங்கள் விளையாட்டையே பார்த்துக் கொண்டிருக்கும் குடிகார தங்கப்பன் அண்ணாச்சியால் கோலிக்காய் உலகின் தந்தை என்று அருளப்பட்டவன் மூக்கன்.

எங்கள் தெரு விளையாட்டுகளில் எல்லோரும் பின்பற்றும் கட்டுப்பாடு ஒன்று இருந்தது. ஜெயித்தவன் ஜெயித்துவிட்டு இஷ்டம் போல வீட்டிற்குச் சென்று விட முடியாது. தோற்றுப் போனவன், ‘நான் முழுவதும் தோற்றுவிட்டேன், இனிமேல் வைத்து ஆட என்னிடம் ஒன்றும் இல்லை, ஆட்டையை முடித்துக் கொள்வோம்’ என்கிற நிலையில் மட்டுமே விளையாட்டு நிறைவடையும். அன்றி, தோற்றவன் எங்காவது இரவலாக காய்கள் வாங்கி வந்து ஆடக் கூப்பிட்டால் ஜெயித்தவன் வந்தே ஆக வேண்டும். மறுத்தால் அடிதடி அல்லது பெரிய வயது அண்ணன்களிடம் புகார் செய்வது அல்லது அவனை எந்த விளையாட்டிற்கும் சேர்க்காமல் ஒதுக்கி வைத்துவிடுவோம். விளையாட்டுதான் என்றாலும் விளையாட்டிற்குக் கூட பேச மாட்டோம்.

முள்ளுக்காட்டில் கம்பு வெட்டிக் கொண்டிருந்த மூக்கனைப் பார்க்கப் போன போது பின்னிருந்த காய்ந்த வயற்காட்டில் எட்டாந்தெரு அண்ணன்கள் புது விளையாட்டு ஒன்றை ஆடிக்கொண்டிருந்தனர். அப்போதுதான் அந்த விளையாட்டை முதல் முதலாக நாங்கள் பார்க்கிறோம். மூன்று குச்சிகள், ஒரு பந்து, ஒரு மட்டை... என்ன விளையாட்டு இது... ஒன்றும் புரியவில்லை. ஒருவன் ஓடி ஓடி வந்து பந்து போடும்போது வயல் நிலத்தில் பந்து பட்டதும் இடம் வலமென எங்கெங்கோ பந்து செல்வதும் மட்டையடிப்பவன் அதை அடிக்க படாதபாடு படுவதைப் பார்க்கப் பார்க்கச் சிரிப்பாக இருந்தது. சில நேரங்களில், மூன்று குச்சிகளை நோக்கிச் செல்ல வேண்டிய பந்து, நிலத்தில் பட்டதும் பந்து போட்டவன் மூஞ்சையே பதம் பார்த்ததும் அடிவயிறு வலிக்க வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்தோம். வீட்டில் புகுந்த எலியை அடிக்க பெரியவர்கள் பெரிய கம்பைத் தூக்கிக் கொண்டு அங்குமிங்கும் ஓடியாடி ஓங்கி ஓங்கி அடிப்பார்கள். ஆனால் அடி அத்தனையும் தரையில்தான் விழும். எலி வளைந்து வளைந்து ஓடி தப்பிக்கும். அதெல்லாம் நினைவுக்கு வந்தது. கிரிக்கெட்டை விட எலியடிப்பது சுலபமெனப் பட்டது. ஆளாளுக்குத் தோன்றியதை பகிர்ந்தபடியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோம். மொத்தத்தில் அந்த விளையாட்டு எங்களுக்கு புரியவில்லை.

“ஒரு மனுசன் நாயா இப்புடி ஓடியாந்து ஓடியாந்து போடுதான.. அந்த பேதில போவான் எதுக்குல கட்டயக் கொண்டு தடுத்துட்டேருக்கான்..”

“பந்து போடுதவன் யாம்ல இப்புடி ஓடியோடிச் சாவுதான்.. ஒரு எடத்துல நின்னு போட்டா பந்து என்ன போவமாட்டேன்னா சொல்லுது..”

“அதெ உடுங்கெல.. அந்த மூணு குச்சிக்கு பின்னால நிக்குதவன் பந்த புடிக்கலாம் புடிக்கலாம்னு பாக்கான்... உடுதானா பாரு அந்த தாய்லி...என்னா அடி அடிக்கான் செத்த மூதி..”

“பந்த இந்த அடி அடிச்சு பறக்க உடுதானுவலே, மேல போற பந்த, காக்கா கழுவு கொத்திட்டு போய்ட்டுன்னா பந்துக்கு என்னல பண்ணுவானுவோ..?”

“அடிக்கவனுக்கு பின்னால இருக்கவன் எதுக்குல கொரங்கு மாரி குத்த வெச்சுட்டேருக்கான்.. குண்டி வலிக்காதா பயவுள்ளைக்கு..”

ஒருவன் ஓடிவந்து பந்து போடுவதும் அதை ஒருவன் அடிப்பதும் மற்றவர்கள் அந்தப் பந்தை நோக்கி ஓடுவதும் ஒரே சிரிப்பாகவும் விநோதமாகவும் இருந்தது. அந்த விளையாட்டைப் பற்றி மூக்கன் இறுதியாக ஒன்றைச் சொன்னான், “ஒரு பந்த வச்சுகிட்டு ஒம்போதுவேரு வெளாடுதானுவோ... துட்டுக்கு செத்த பயவுள்ளயோ..”

மூக்கன், எண்ணெயையே பார்த்திராத தன் தலையை சொறிந்தபடியே எரிச்சலோடு சொன்னான், “பால்ராசுக்கும் எனக்கும் எப்பயுமே ஆவாத... அஞ்சு நிமிசத்துல அடிதடியாயிரும்டே... இதுலா வேணாம்னுட்டுதான் நான் காட்டுக்கு வந்துருதன். என்னய யாம்டே ரவுடியாக்குதிய்ய..” என்பதாக அலுத்துக் கொண்டான். காலில் விழாத குறையாக நானும் மகாராஜனும் மூக்கனிடம் கெஞ்சினோம். சிறிது நேரம் யோசித்தவன், “கொம்ப மாடசாமி கோய்லல வச்சு சாமி கும்ப்ட்ட காய் ஒண்ணு எங்க்ட்ட இருக்கு. அதெ கொண்டாந்தம்னா அஞ்சு நிமிசத்துல ஆட்ட முடிஞ்சுரும்லா..” என்றான். எனக்கு ஆச்சரியமாய் போனது.

அவன் எடுத்து வந்த காயைப் பார்த்ததும் நான் மிரண்டே போய்விட்டேன். கோலிக்காய் இரும்பு மாதிரி இருந்தது. அதாவது அது ஒரு பெரிய பால்ரஸ் குண்டு என்றறியாத நானும் மகராசனும் அதைக் கண்டு வாயடைத்துப் போனோம்.

“இரும்ப உட ஸ்ட்ராங்காருக்குல..” என்றேன்.

“சாதா கோலிக்காம்தாம்ல அது. கொம்ப மாடசாமி கோய்லல ஒரு வாரம் மண்ணுல பொதச்சு வச்சுருந்தன்.. சாமி அருள்லா.. அதாம் இப்புடி ஆய்ட்டு..” என்றான் மூக்கன்.

ஏற்கனவே கொம்ப மாடசாமியின் மாயாஜாலக் கதைகள் ஊர் முழுவதும் பரவிக் கிடந்ததால் நடுங்கும் கைகளுடனே அந்த இரும்புக் கோலிக்காயைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டேன். பால்ராசின் கொட்டத்தை அடக்குவதற்காக கொம்ப மாடசாமியே இரும்புக் கோலிக்காயாக அவதாரம் எடுத்து வந்ததாக மனது ஆர்ப்பரித்தது. தோற்றுவிட்டால் எல்லோருக்கும் ஒரு அவமானம் வரும். பல நேரங்களில் அந்த அவமானத்தை சற்று தள்ளி வைத்துவிட்டு நாளை பார்த்துக் கொள்வோம் என்று எல்லோரும் வீட்டிற்குச் சென்று விடுவோம். ஆனால் பால்ராசு அப்படிப்பட்டவன் அல்ல. தோற்றுப் போனால் யாரையும் விட மாட்டான். பணக்காரன் வேறு. உடனே நாடார் கடைக்கு சென்று ஐந்தாறு ரூபாய்க்கு புத்தம் புதிய கோலிக்காய்கள் கை நிறைய வாங்கி வந்து வம்படியாக விளையாட அழைப்பான். அழைப்பான் என்று கூட சொல்ல முடியாது. கிட்டத்தட்ட மிரட்டுவான். தோற்றக் காய்களை மீட்டெடுத்தாலொழிய அடங்க மாட்டான்.

கிட்டத்தட்ட எல்லா நாட்களிலும் அவரவர் கோலிக்காய்கள் கையிருப்பு காலையில் எவ்வளவு இருந்ததோ மாலையில் அதே அளவு கையிருப்புடனே வீடு திரும்புவோம். கூட குறைய ஆகிவிட்டதென்றால் கூட விடாமல் அடி சமநிலை பெற்று நிம்மதி அடைவோம். இதற்கெதற்கு விளையாட வேண்டும், வீட்டில் சும்மாவே இருக்கலாமே என்கிற மெய்நிலை எனக்குப் புலப்பட்டு, வயதில் பெரிய அண்ணன்களிடம் இதைப் பற்றிக் கேட்ட போது, “பெரிய ஷேக்ஸ்பியரு... பிலாஸபியெல்லாம் பேசுதாரு.. சவத்து மூதி.. போல அங்கிட்டு.. “ என்று கேலி பேசினர்.

பால்ராசு ஏற்கனவே மண்பானை நிறத்தில் பல பெரிய கோலிக்காய்கள் வைத்திருந்தான்.கோயமுத்தூரில் இருந்து அவன் அண்ணன் வாங்கி வந்ததாக சொன்னான். எல்லாம் வலுவான காய்கள். அதுபோன்ற நிறத்தில் நாங்கள் கோலிக்காய்களைப் பார்த்ததேயில்லை. விளையாடும்போது எவன் காயாவது அவன் காய் பக்கத்தில் மாட்டிக் கொண்டால் போச்சு. அவனுடைய செம்மண் நிறக் கோலிக்காய் கொண்டு பலம் கொண்ட மட்டும் ஓங்கி சுண்டுவான். இளநீர்க்காய் போல பச்சைப்பசேல் என்றிருக்கும் கோலிக்காய்களை பேயடி அடித்து உறித்த தேங்காய் போல ஆக்கி நம் கண்களில் நீர் வரவழைப்பான்.

அது போன்ற நேரங்களிலெல்லாம் அவன் எல்லாப் பரீட்சைகளிலும் தொடர்ந்து ஃபெயிலான கதைகளை அவன் அப்பாவிடம் சொல்லி அவனை மாட்டிவிடலாம் என்று எனக்குத் தோன்றியதுண்டு. அவன் அப்பாவிற்கு தன் மகனின் பாஸ் பெயில் போன்ற விஷயங்களிலெல்லாம் அவ்வளவு அக்கறை கிடையாது. அவன் அப்பா நடைவண்டியில் ஐஸ் விற்கும் ஒரு சாதாரண ஐஸ் வியாபாரி. காலில் செருப்பின்றி சட்டையின்றிதான் அவரை

எப்போதும் காணலாம். ஆனால் அவர் அவ்வளவு பெரிய பணக்காரர் என்று சத்தியம் செய்தால் கூட யாரும் நம்ப மாட்டார்கள். ஏதேனும் ஒரு தொழில் செய்ய வேண்டும் என்பதற்காக அவருக்குப் பிடித்த இந்த தொழிலை அவர் தேர்ந்தெடுத்ததாக சொல்வார்கள். ஒருநாள் ரேங்க் கார்டில் அவரிடம் கையெழுத்துக்காக பால்ராசு நீட்டியபோது தனக்கு கையெழுத்து போடத் தெரியாது என்பதைத்தான் கேலி செய்கிறான் என்றெண்ணி தெரு முழுவதும் விரட்டி விரட்டி அடித்தார். ஆதலால் பால்ராசைப் பற்றி அவன் அப்பாவிடம் கோள்மூட்டி விடுவது எந்த பலனையும் தராது என்பது எனக்குத் தெரியும்.

பழனியும் எனக்கு அவ்வபோது நண்பன்தான். அநேக தருணங்களில் நானும் பழனியும்தான் நாடார் கடைக்குச் செல்வோம். அவனும் பணக்காரன்தான். என் செலவுக்கு என் அப்பா நாள் ஒன்றுக்கு ஐந்து பைசா தருவார் என்றால் அவன் அப்பா அவனுக்கு ஐம்பது பைசா தருவார். பார்க்கவே எனக்கு பொறாமையாய் இருக்கும். அவனுக்கு பந்தாவாக இருக்கும். நாடார் கடையில், "அண்ண... ப்ளூ காயா குடுங்கண்ண.. தண்ணி காயா குடுங்க.. றெக்க காய் இருந்தா அதெ மொதல்ல குடுங்கண்ண.. பொற உழுந்த காய குடுத்துறாதீயண்ண..." என்று பார்த்து பார்த்து காய்கள் வாங்குவான். ஐந்து பைசா காய்கள், பத்து பைசா காய்கள், நாலணா காய்கள் என்று ரகரகமாக காய்கள் வாங்குவான். புதுக் கோலிக்காய்கள் வாங்கியவுடன் கையில் பளபளவென்று இருக்கும் கோலிக்காய்களை ஒவ்வொன்றாய் எண்ணும்போது ஒரு வைர வியாபாரியைப் போல தோற்றமளிப்பான். புதிய கோலிக்காய்களை தெருவில் 'லக்ஸ்' காய்கள் என்பார்கள். ஐந்து பைசாவுக்கு கிடைக்கக் கூடிய கோலிக்காயை அஞ்ச்சா காய் என்றும் நாலணாவுக்கு கிடைக்கக் கூடிய கோலிக்காயை டாங்கான் என்றும் அழைப்பார்கள். பத்து பைசா கோலிக்காய்க்கு சிறப்புப் பெயர் எதுவும் இல்லை.

ஓங்கி சுண்டினால் ஒரு டாங்கான் இன்னொரு டாங்கானை உடைத்து விடும். ஒரு டாங்கான் ஒரு பத்து பைசா காயை இரண்டு துண்டாக உடைக்கும். ஆனால் ஒரு டாங்கானால் ஒருபோதும் ஒரு அஞ்ச்சா காயை உடைக்க முடியாது. எவ்வளவு ஓங்கி சுண்டினாலும் அஞ்ச்சா காயை தூராதொலைவுக்கு தள்ளுமே ஒழிய உடைக்க முடியாது. அதனால் நான் எப்பவுமே அஞ்ச்சா காயையே பயன்படுத்தி வந்தேன். அது சக பயல்களுக்கு கடும் எரிச்சலைக் கிளப்பி வந்தது. ஒரு அஞ்ச்சா காய் கூட வாங்க முடியாத மகராஜன், மைதா மாவை கோந்தில் நனைத்து உருட்டி வெயிலில் காய வைத்தால் வலுவான ஒரு காயாக உருப்பெறும் என்று செய்தி பரப்பினான். அதற்காக கோலிக்காய்கள் செய்ய கோந்தும் மைதா மாவும் வீட்டில் கேட்ட போது சொல்லி வைத்தார் போல எல்லா தாய்மார்களும் விளக்குமாத்தடி கொடுத்து எங்கள் வயிற்றில் கோலிக்காயை உருளச் செய்தனர்.

களத்திற்கு மூக்கன் வந்ததும் பால்ராசு வீட்டிற்குப் போவதாகக் கூறினான். அதைக் கேட்ட நானும் மகராசனும் கொதித்துப் போனோம்.

"நீ நல்லா செய்ச்சிட்டு ஓடப்பாக்கியோ.. மயிராண்டி.. மூக்கன் வந்தா ஒனக்கென்னல..?" என்றான் மகராஜன்.

"மூக்கனப் பாத்து பயந்துட்டான்டே.." என்றேன் நான்.

பால்ராசு தன் சட்டை காலரை தூக்கியபடி, "யார்ல பயந்தா..? எவனுக்கும் பயப்படமாட்டன்.. ஐஸ்கார் மவம்ல.." என்றான்.

"குச்சி ஐஸா.. பால் ஐஸா..?" என்ற மூக்கன் கேலியாய்.

பால்ராசு மூக்கன் மேல் பாய முற்பட, நான் தடுத்தாட்கொண்டேன்.

"தெறம இருந்தா ஆட்டைக்கு வா.. இல்ல வயக்காட்டு புள்ளயார் கோய்லுக்கு வந்து 'நா ஒரு பொட்ட'..னு மூணு வாட்டி கத்திரு. ஒன்ன உட்ருதோம்.." என்றான் மூக்கன்.

"நா என்ன மய்த்துக்குல அங்க வந்து கத்தணும்.." என்றான் பால்ராசு ஆத்திரமாய்.

"ஆட்டைக்கு வராதவம்லாம் பொட்ட-னு போன வாரம் நீதான சொன்ன?" என்று நான் சொன்னதும் பால்ராசு விக்கித்துப் போனான்.

வேண்டா வெறுப்பாக ஒரு பயத்துடனே விளையாடுவதற்கு ஒத்துக்கொண்டான். மூக்கன், தான் கொண்டு வந்த சாமிக் கோலிக்காய் விவரங்களைச் சொல்லி பழனியிடம் அந்த இரும்புக் கோலிக்காயைக் காட்டியபோது, அதைக் கண்ட பழனியின் கால்கள் தன்னையறியாமல் இரண்டு அடிகள் பின்னே சென்றன. நொடிப்பொழுதில் பால்ராசு ஒரு திட்டம் தீட்டினான்.

"ஆட்டைக்கு அம்பது காய்னா வாரன்.. இல்லன்னா என்னய உட்ருங்க.." என்றான். பால்ராசின் மீது எனக்கும் மகராசனுக்கும் கொலை வெறி உண்டானது. அவன் எத்தனை பெரிய திருட்டு திட்டம் தீட்டினாலும் அதை எப்பாடு பட்டாவது முறியடிப்பது என்று நானும் மகராசனும் உறுதி கொண்டோம்.

ஆனால் எங்கள் யாரிடமும் அவ்வளவு காய்கள் கையிருப்பு இல்லை. பழனியோ தனக்கு மீதம் தேவையான காய்களை வாங்க நாடார் கடைக்குச் சென்றுவிட்டான். பால்ராசிடம் மொத்தம் ஐம்பது காய்கள்தான் இருந்தன. பால்ராசை மொத்தமாக காயடிக்க எண்ணினோம். எட்டாம் தெரு மாரிமுத்து அண்ணனிடம் போய் நானும் மகராசனும் மூக்கனும் கோலிக்காய்கள் இரவல் வாங்கி வந்தோம். மாரிமுத்து அண்ணனோ, "எல.. வெள்ளிக்கெழம காய்க்கெல்லா பூச போடணும்ல.. நீங்க தோப்பியலோ

செய்ப்பியலோ அதுலா எனக்குத் தேவயில்ல.. வெள்ளிக்கெழம காய் வர்ல... ஒம்மாள.. மூஞ்சி கீஞ்செல்லா பேத்துருவேன்..'' என்று கெடு விதித்தார்.

இருநூற்று ஐம்பது கோலிக்காய்கள் பந்தயத்தில் வைத்து இதுவரை எந்தத் தெருவிலும் யாரும் விளையாண்டதில்லை. அதற்காக நடுவர் வேண்டும் என்று சொல்லி குடிகார தங்கப்பன் அண்ணாச்சியை பூவரச மரத்தடிக்கு அழைத்து வந்தோம். அரை போதையில் வந்தமர்ந்தவர்..

``யார்க்குலாம்டே தோப்பு..?'' என்றார்.

``எங்களுக்குத்தா தாத்தா..'' என்றோம் நானும் மகராசனும்.

``மாந்தோப்பா... தென்னந்தோப்பா..?'' என்று அவர் கேட்டதும், மரத்தின் அருகே பீடி சுற்றிக் கொண்டிருந்த பெண்கள் வெடி வெடித்தது போல அப்படிச் சிரித்தார்கள்.

``செய்ச்சவன் தாத்தாவ கவனிச்சுக்கிடுங்கடே..'' என்றார். பூவரச மரத்தடியில் பீடி சுற்றிக் கொண்டிருந்த பெண்கள், ``நல்லா கவனிப்பானுவ போ..'' என்று சிரித்தார்கள்.

பால்ராசும் பழனியும் நேரடியாக கூட்டணி அறிவித்தார்கள். பதிலுக்கு நானும் மகராசனும் நேரடி கூட்டணி என்று சொன்னோம். மூக்கனையும் கூட்டணிக்கு அழைத்தோம். ஆனால் மூக்கனோ,'' '250 தொகுதிலயும்' தனியா நின்னே ஜெய்ப்பேன்..'' என்றான்.

விளையாட்டு ஆரம்பித்தது. வட்டம் போட்டு கோடு கீறினோம். இருநூற்று ஐம்பது காய்களையும் வட்டத்திற்குள் வைக்க முடியாதென்பதால் சாம்பிள் காய்களாக ஆளுக்கு ஒன்று வைத்தோம். சாட் பூட் த்ரீ போட்டதில் மூக்கன் முதலில் வந்தான். அதுவே பால்ராசுக்கு பெரும் பீதியை உண்டு பண்ணியது. நான் மனசுக்குள் கருவியது போலவே பால்ராசு கடைசி ஆளாக வந்தான். எல்லைக்கோட்டில் இருந்து மூக்கன் கோலிக்காயை சுண்டியதும் அது வட்டத்திற்கு அருகே போய் நின்றது. அடுத்தடுத்து நாங்கள் சுண்டியது எல்லாம் புலிகேசியின் அம்புகளாய் எங்கெங்கோ போனது. கடைசியில் சுண்டிய பால்ராசுவின் ராசியான செம்மண் நிறக் கோலிக்காய் ஒரு விமானம் போல பறந்து சென்று மூக்கனின் சாமிக்காய் மீது மோதி உயிர் துறந்தது. ஆனாலும் மூக்கனின் காயை வேறு திசைக்கு நன்கு விரட்டி அனுப்பி இருந்தது. 'சாட் பூட் த்ரீ'யில் கடைசியாக வருகிறவர்கள் முதலாவதாக யார் காயை அடித்தாலும் அது செல்லாது என்கிற விதி இருந்ததினால் பால்ராசு மூக்கனின் காயை அடித்தது செல்லாததாகிவிட்டது.

தனது செம்மண் நிற கோலிக்காய் உடைந்தது கண்டு பால்ராசு அதிர்ச்சியானான். இரண்டு வருடங்களாக அவன் வைத்திருந்த டாங்கான் அது. மிகவும் ராசியான காய். தோல்வியே கண்டிராத டாங்கான். திடீரென்று இப்படி துண்டு துண்டாய் உடைந்தது தற்செயலானது அல்ல என்று பால்ராசு நம்பினான். அது கொம்ப மாடசாமியின் வேலைதான் என முடிவு செய்து கொண்டான். உடனே வேண்டிக் கொண்டான். தான் மட்டும் இந்த ஆட்டையில் ஜெயித்துவிட்டால் பத்து அஞ்ச்சா காய்களை கொம்ப மாடசாமிக்கு வெடலை போடுவதாய்.

பால்ராசு வேறு டாங்கானை நிலத்தில் வைத்தபோது அவன் கை நடுக்கமுற்றது. யாரிடமும் தற்சமயம் ஐம்பது காய்களுக்கு மேல் கையிருப்பு இல்லை. மொத்த சொத்துக்களையும் வைத்து ஆடிக் கொண்டிருக்கிறோம். வாழ்வா சாவா என்பது போன்ற போட்டி. எல்லோர் வயிற்றிலும் பயம் கோலிக்காயாய் உருண்டு கொண்டிருக்கிறது.

மகராசன் கத்தினான் அடுத்து நான்தான் என்று. நான் பழனியின் காய்க்குக் குறி வைத்து சுண்டினேன். நான் சுண்டிய காய், பழனியின் காயை அடிப்பதற்கு பதிலாக சிறுகல் தடுக்கி திரும்பிச்சென்று மகராசனின் காயை அடித்தது. மகராசன் திடுக்கிட்டு என்னைப் பார்த்தான். அவன் இப்போது ஐம்பது காய்களை இழந்தவன். போட்டியை விட்டு வெளியேற வேண்டும். நேரே என்னிடம் வந்தான்.

``அம்பது கோலிக்காக்கு ஆசப்பட்டு கூடருந்தே குழி பறிச்சிட்டியல தாய்லி..'' என்றான். ``கல்லு தடுக்கி காய் திரும்புனத நீயுந்தானடே பாத்த..'' என்றேன். இறுகிய முகத்துடனே சென்று ஜட்ஜ் தங்கப்பன் அண்ணாச்சி அருகே அமர்ந்துகொண்டான். அண்ணாச்சி மகராசனின் தோளில் கையைப் போட்டபடி சொன்னார்..

``மாராசா.. வெற்றிங்கறது...''

``தண்ணியப் போட்ட நீரெல்லா ஜட்ஜாவுதது... வாய மூடுய்யா..'' என்றான் மகராசன் எரிச்சலாய். தோற்றுப் போனதற்காக வருத்தப்படும் மகராசனை முதன்முதலாய் நான் கண்டேன். அது மேலும் எனக்கு வருத்தமாக இருந்தது.

அடுத்து பழனி சுண்டிய காய் தவறுதலாக வட்டத்தினுள் மாட்டிக் கொண்டுவிட்டது. இனி பழனி ஆட முடியாது. வட்டத்தினுள் மாட்டிக்கொண்ட ஒருவரின் காயை யார் வேண்டுமானாலும் தனது காய் மூலம் சுண்டியடித்து வெளியே கொண்டு வரலாம். அடித்தவர், காப்பு என்று கூறினால் வெளியே வந்த காய்காரர் ஆட முடியும். தோப்பு என்று கூறினால் ஆட்டையை விட்டு வெளியேற வேண்டும். காப்பு என்று கூறுவது நட்பு சார்ந்தது, கருணை சார்ந்தது. கூட்டணி சார்ந்தது. வட்டத்திற்கு வெளியே இந்த விதிமுறை செல்லாது. ஏற்கனவே மகராசன் வெளியேறி இருந்ததால் என் தரப்பில் நூறு காய்கள் இருந்தன. வட்டத்தினுள் இருந்த பழனியின் காயைக் குறி வைத்து அடித்தான் பால்ராசு. பழனியின் காய் வட்டத்தை விட்டு வெளியே வந்தது. பால்ராசுவின் கூட்டணிக்காரனான பழனி வேகமாக எழுந்து வந்தான் வாயெல்லாம் பல்லாக.

திடீரென பால்ராசுவின் முகம் மாறியது. அந்நேரம் காப்பு என்று சொல்லாமல் தோப்பு என்று சொன்னான் பால்ராசு.

பழனி கடும் அதிர்ச்சிக்குள்ளானான். “என்னல தோப்புங்க?” என்றான் பரிதாபமாய்.

“பொறவு... 250 காய்லா... ச்சும்மாவா உடச்சொல்லுத..” என்றான் சாதாரணமாக.

பால்ராசு ஒரு கொடிய மிருகம் போல காட்சி அளித்தான் பழனிக்கு.

“எத்தன ஆரஞ்சு முட்டாய் ஒனக்கு ச்சும்மா குடுத்துருக்கன்..” என ஆங்காரமாய் கேட்டான் பழனி.

“நா மட்டு என்ன... எத்தன தடவ எங்கப்பா ஐஸ் வண்டிலேந்து ஒனக்கு ஐஸ களவாண்டு குடுத்துருக்கன்..” என்று பால்ராசு வேகமாகச் சொன்னபோது அடுத்த பாயிண்ட் வராமல் பழனி திணறினான். பால்ராசு தன் பின்னந்தலையை ஆவேசமாக சொறிந்தபடியே சொன்னான், “கூட்டி கழிச்சுப் பாரு.. கணக்குலாம் சரியாதா வரும்..”

குடிகார அண்ணாச்சியின் அருகிலமர்ந்திருந்த மகராசன் பழனியைப் பார்த்துக் கத்தினான்.

“இங்க ஒரு எடம் காலியாருக்கு.. வந்து ஒக்காரு..”

அருகில் அமர்ந்த பழனியைப் பார்த்து அண்ணாச்சி கேட்டார்.

“என்ன பழனி..ஆண்டியாயிட்ட போலருக்கு..”

“வாய மூடுய்யா...”என்றான் பழனி கோபமாய்.

மகராசன் சோக கண்களுடன் புலம்பினான்.

“இந்தக் காலத்துல எவனயும் நம்பக்கூடாது. அதுலயு இங்கிலீசு மீடியொம் படிக்கிதவனுவள ஆட்டைக்கே சேக்கக்கூடாது.”

தங்கப்பண்ணன் புரியாமல் கேட்டார்.

“அதென்னெடே இங்கிலீசு மீடியோம் தமில் மீடியோம்ங்கானுவோ..?”

பழனி குறுக்கிட்டுச் சொன்னான்,

“அதொண்ணுமில்ல தாத்தா.. இங்கிலீசு மீடியோம்னா ABCD வேகமா சொல்லுவானுவோ.. தமிழ் மீடியோம்னா ABCD மெதுவா சொல்லுவானுவோ... அவ்ளதான்..”

“அடங்கொம்மாள.. “என்றார் அண்ணாச்சி.

இப்போது பால்ராசு ஆட வேண்டும். பிறகு மூக்கன். பிறகு நான். பால்ராசு கர்மசிரத்தையோடு என் கோலிக்காயைக் குறி வைத்தான். ஆனாலும் அவன் கைகள் நடுங்கி கொண்டிருந்தன. பலம் கொண்ட மட்டும் சுண்டினான். அவன் விரல் இடறியது. பறந்துருண்டு வந்த பால்ராசுவின் காய் எனது காயருகே மிக மிக நெருங்கி வந்து நின்று கொண்டது. பால்ராசு தன் தலையில் கை வைத்தபடி சொத்தென நிலத்தில் உட்கார்ந்துவிட்டான். பால்ராசுவின் தோல்வி கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது. மூக்கனின் காய் எட்டடிக்கு அப்பால் கிடந்தது. மூக்கன் சாதாரணமாகச் சென்று ஒரு சுண்டு சுண்டினான். விண்ணில் பறந்து செல்லும் ஒரு ராக்கெட் போல சீறிப்பாய்ந்து வந்த மூக்கனின் இரும்புக் கோலிக்காய், பால்ராசுவின் டாங்கானையும் எனது அஞ்சா காயையும் ஒரு சேர அடித்து சல்லி சல்லியாய் நொறுக்கிப் போட்டது. இருநூற்றி ஐம்பது கோலிக்காய்களுக்கும் மூக்கன் அதிபதியானான். நான் தோற்றத்திலும் எனக்கு ஒரு சந்தோஷம், பால்ராசு தோற்றது. நான் மகிழ்ச்சியாகவே இருந்தேன்.

தெருவோரத்தில் குப்பையில் கிடந்த ஒரு போத்தீஸ் கவரை எடுத்து 250 காய்களையும் மூட்டை கட்டத் தொடங்கினான் மூக்கன். மகராசன் என்னைப் பார்த்துக் கத்தினான்.

“ஒலகத்துலயே தோக்கறதுன்னே ஆளக் கூட்டியாந்த ஒரே மெண்டல் மூதேவிங்க நம்ம ரெண்டு வேருந்தாம்ல.. நம்மள செருப்பாலயே அடிச்சிக்கிடணும்..”

திடீரென்று பால்ராசு மனமுடைந்து அழ ஆரம்பித்தான். அவனது அழுகை எங்களுக்கு அதிர்ச்சியானது. இப்படி அழுவான் என்று நாங்கள் யாரும் சற்றும் எதிர்பார்க்கவில்லை. வெறி பிடித்தவன் போல ஓவென்று கத்தி அழ ஆரம்பித்தான். நாங்கள் எல்லோரும் அவ்விடத்தை விட்டு ஓடிவிடலாமா என்று யோசித்தோம். ஓவென்று கத்தியபடியே மண்ணில் உருண்டு புரண்டு ஆவேசமாய் அழ ஆரம்பித்தான். தங்கப்பண்ணன் அவனைத் தூக்கி நிறுத்தி சமாதானம் சொன்னார்.

“வெளாட்டு வெளாட்டாதாம்டே இருக்கணும்..எதோ பரீச்சைல பெயிலாய்ட்ட மாரி உருண்டு புரண்டுல்லா யாம்டே அழுத..? “ என்றார்.

“தாத்தா.. அவன் பரீச்சைல பெயிலானதுக்குலா இப்புடி அழமாட்டான்..” என்றேன் நான்.

“ஐஸ்கார் மவன் அழலாமாடே..” என்றெல்லாம் சமாதானம் சொல்லியும் அவன் அழுகை நின்றபாடில்லை.

மூக்கன் நாங்கள் யாரும் எதிர்பாராத வண்ணம் நடந்து கொண்டான்.

“வேணுன்னா எல்லார் காயும் நானே பிரிச்சி குடுத்துருதன்டே.. இந்த எழவுக்குதான் நா வெளாட வரமாட்டன்னேன்” என்றான்.

சொன்ன மாதிரியே அனைவரின் கோலிக்காய்களையும் பங்கு பிரிக்க ஆரம்பித்தான். தங்கப்பன் அண்ணாச்சி மூக்கனை முதுகில் தட்டி பாராட்டிச் சொன்னார், “உண்மயிலயே நீ கோலிக்கா உலகின் தந்தைதான்டா..”

பால்ராசு ஆவேசமாய் வந்து அழுதபடியே மூக்கனிடம் கத்தினான்.

“பிச்சயால குடுக்க மூதி.. நா என்ன பொட்டயா... மூக்கா... செய்ச்சது நீயால..கெடெயாதுல மயிறு.. கொம்ப மாடசாமில.. அவந்தாம்ல செய்ச்சது.. சாமிக்காய வச்சு செய்ச்சிட்டு... மயிறு.. வந்துட்டான் பங்கு பிரிக்க.. நீ செய்ச்ச காயெல்லா கொம்ப மாடசாமி கோயில் உண்டியல்லதாம்ல போடணு... சாதா கோலிக்கா கொண்டால நாளைக்கி.. ஓட விடுதம்ல அம்புட்டு வேரையு...” என்றவாறே அவன் வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

எல்லோரும் கலைந்து சென்றோம். பால்ராசு அழுதது அவன் எத்தனை பலகீனமானவன் என்பதை காட்டியதாக நாங்கள் உணர்ந்தோம். நானும் மகராசனும் தெரு முக்கு கடக்கையில் கீழே தரையில் ஒரு ரூபாய் நாணயம் ஒன்று கிடந்தது. நான் அதை குனிந்து எடுத்தேன். கையினுள் வைத்து விரல்களை மடக்கி சிரித்தேன். ஒரே நொடியில் பணக்காரனாகிவிட்ட உணர்வு. பெருமூச்சு விட்டேன்.

“என்ன.. நேரா நாடார் கடைக்குதான..?” என்றான் மகராசன் சிரித்தபடியே.

அளவற்ற மகிழ்ச்சியில் ஒருவர் தோளில் மற்றவர் கை போட்டு துள்ளல் நடையோடு நடக்க ஆரம்பித்தோம். கடையில் எங்களைக் கண்டதும் நாடார் குஷியானார்.

“எலேய்... வந்திட்டியளா.. புது டாங்கான் ஒண்ணு வந்துருக்குடே... ஒண்ணு எட்டணா... வாங்குதியளா... இந்தா பாரு..” என்று எட்டணா டாங்கானைக் காண்பித்தார். மிகவும் பெரியதாக இருந்தது. விரலில் வைத்து சுண்ட முடியுமா என்றிருந்தது.

“இப்பதான்டே ஐஸ் வண்டி வந்தான். எட்டணா டாங்கான் அஞ்சு வாங்கீட்டுப் போறான்.. அந்தா போவுதான் பாரு..” என்றார் கைக்காட்டினார் நாடார்.

நானும் மகராசனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம். ஒரு ரூபாய் முழுவதற்கும் அஞ்சா காய்கள் வாங்கி வேக வேகமாக ட்ரவுசர் பையை நிரப்பிக் கொண்டோம். பால்ராசை அவனுக்குத் தெரியாமல் வேகமாக பின் தொடர்ந்தோம். கொம்ப மாடசாமி கோவிலுக்குள் அவன் நுழைவது தெரிந்தது. நாங்கள் இருவரும் ஒளிந்து கொண்டு அவன் என்ன செய்கிறான் என்று பார்த்தோம். எட்டணா டாங்கான்களை மண்ணுக்குள் புதைக்க ஆவேசமாக குழிகள் தோண்டிக்கொண்டிருந்தான் பால்ராசு.

சே கார்கவி கார்த்திக்

தொடுதல்

அது மிகவும் பிடித்தமான ஒன்றுதான்
அவர்களுக்கு மிகவும் பரிட்சையமானதும்
கூட

அது சில நேரங்களில் தயக்கத்தில் முடியும்
ஆனாலும் அவைகளைத்தான் மனது
எதிர்பார்க்கும்
அதுவென சொல்வதனால் எப்போதும்
வருந்திக்கொள்ளாது அது

அது புன்னகை கொடுக்கும்
சிறு கூச்சம் பரப்பிடும்
அனிச்சையை தூண்டும்
அதற்கு ஒரு விரல் மட்டும் போதுமானது
இல்லை

அவ்வப்போது புன்னகையை கூறி
சென்றுவிடும்
இழந்ததை உரசி சென்று விடும்
இருக்கிறேன் என்று அவ்வப்போது சொல்லி
வாழும்

இதயமெனவும் அதைக் கூறலாம்
இருவரின் வாசலெனவும் கூறலாம்
மீசையையும் தாடியையும் குழந்தையாக்கி
கொஞ்சிடும்

அனைத்தையும் அணைத்து
அமைதிபடுத்திவிடும்
அழுத்தமில்லாது எல்லாமுமாய் விளங்கும்

அந்த வலி அறியும் முன்னரே இதயம்
உணர்த்திவிடும்
அதற்கு வலிமை அதிகம்
வலியும் அதிகம்
பரவாயில்லை
இன்னும் மேலும் படரட்டும்
தொடுதலின் சாரல்கள்...!

கி.கவியரசன் கவிதைகள்

“கவிதையைக் கண்டுணரும் தருணங்களில்
நான் உயிரோடிருப்பதாய் உணர்கிறேன்
மரணத்திலிருந்து மீண்டெழுந்து
ஒரு கவிதையை எழுதுகிறேன்
முடிந்ததும் மீண்டும் மரணிக்கிறேன்
எத்தனை முறை இறந்தேன்
எத்தனை முறை மீண்டெழுந்தேன்
எனக்கு நினைவிலில்லை
மீண்டெழமாட்டேன்
எனத் தெரியும் ஒரு நாளில்
நல்லதொரு கவியெழுதி
ஆச்சரியக் குறிகளை எடுத்துவிட்டு
மகிழ்ச்சியோடு முற்றுப்புள்ளியை
வைத்துக்கொள்வேன்“

⊙

வேகத் தடைகளை
ஏறி இறங்கும் போதும்
வாகன நெரிசலில்
சிக்கித் தவிக்கும் போதும்
முன்னால் செல்பவர்
மெதுவாகச் செல்லும் போதும்
ஒரு பெரியவர் நடுக்கத்தோடு
சாலையைக் கடக்கும் போதும்
மாடுகளோ
நாய்களோ
குறுக்கே ஓடும் போதும்
மனதால் வானத்தில் பறக்கலாம்
வாகனம் பறக்காதென
யார் சொல்வது
சாலைகளின் மீது
அவ்வளவு
கோபம் கொள்பவர்களுக்கு!!!



கவிஞர் ரஜிதா அரிச்சந்திரன்

வல்லாரை

வல்லமூளை இல்லார் வளமாக்க நாளுமே
வல்லாரை தேடி வறுப்பாரே அல்லாரோ
கல்லான மூளை கனமாகி போகவே
இல்லாராய் பாரிலலை வார்

நல்லார் தினமும் நயமாக நோக்கியே
அல்லார்க்கு ஆலோ சனையுடனே நெல்லியும்
வல்லாரை யும்வழங்கி வல்லவர் ஆக்கவே
ஒல்கியவர் தேறுவார் பார்

சொல்லும் செயலும் ஒருமித் தெழஇங்கே
செல்லும் இடமும் சிறக்குமே நல்லசிந்தை
வல்லபுத்தி சேர தரணிமீதில் எல்லாமும்
நல்லஉண வைதருமே இங்கு.



எதார்த்த நடையில் சுந்தரிமணியனின் ‘கட்டாக்காலி’ சிறுகதை – ஒரு பார்வை

திரு.சமயக்கண்ணு, மதுரை

பனிமலர் உச்சி வெயில் நேரம் துவரம்பருப்பை அதன் அற்புத ருசியைத் துளையிட்டு உண்டு மகிழும் ஒருவகை வண்டை நீக்கிக் கொண்டு இருந்தாள். அந்த வண்டைக் கையால் தொட்டு எடுக்கும்போது அது மயக்கம் கொள்வதையும்.... ஆகா மயங்கி இறந்து விட்டது என்று எடுத்துக் கீழே போட்டதும் அது உயிருடன் நகர்ந்து ஓடுவதையும் நன்குணர்ந்த அவள், இறைவன் அந்த வண்டுக்குக்கூட எவ்வளவு சாமர்த்திய புத்தியை கொடுத்துள்ளான் என்று அதன் பிறப்பு அருமையை எண்ணி மகிழ்ந்த அவள்...

ஆறு அறிவு படைத்த சில மனிதனுக்கு ஏனோ அப்படியொரு சமயோசித புத்தி இல்லாமல் போகிறது என்று எண்ணிக்கொண்டே...

வாசல்படியில் வந்து வந்து பார்த்து விட்டு, "என்னடா இந்த மனுஷன் ஆபீஸ் மீட்டிங் என்று மூன்று நாளைக்கு முன்பே போனவரை இன்னும் காணோம்" என்ற ஆதங்கம் ஒரு பக்கம் இருக்க, கோபமும் "கிர்" என்று உச்சிக்கு ஏறிய நிலையில் "சரி. நாமாவது சாப்பிடுவோம்" என்று எண்ணத்தில் அடுப்படிக்குள் நுழைந்தாள்.

அப்போதும் அவளுக்கு அவனைப் பற்றிய நினைவே ஆட்கொண்டது.

ஆம்! சிந்து பைரவி என்ற படத்தில் ஜனகராஜ் என்பவர் குணாதிசயத்தில் ஒன்று ஆச்சர்யம் தருவதாகும். அதாவது அவன் தனக்குத் தெரிந்ததை ஏதாவது நாலு பேரிடமாவது வலியச் சென்று உளராவிட்டால் அன்றைய பொழுது அவனுக்கு விடிந்ததாக இருக்காது என்பது மட்டுமல்ல தன் தலையே வெடித்துவிடும் போலிருக்குமாம். "ஒரு மனைவி தான் சாப்பிடும் முன்பு தன் கணவன் வருகையை எதிர்பார்த்துச் சாப்பிட எவ்வளவு அக்கறையுடன் வழி மேல் விழி வைத்தபடி இருந்தாள்" என்பதை ஒரு மனைவியின் கலாச்சார மகிமையை ஆசிரியர் இங்கே சுட்டிக்காட்டி இருப்பது இந்தச் சிறுகதையின் முக்கிய மணிமகுடக் கருத்து என்றால் அது மிகையாகாது அன்றோ?!

செழியன் - பனிமலர் திருமணம் ஆகி ஏழாண்டு ஓடி விட்டது.

ஆனால் தன் மனைவியிடம் கூறாமல் எந்த ஒரு உறவினர் வீட்டுக்கோ வெளி நண்பர்கள் வீட்டுக்கோ செல்லும் பழக்க வழக்கம் செழியனிடம் இன்னும் இருக்கிறது என்பதையும் அந்த அவலட்சணப் போக்கு இன்னும் மாறவில்லை என்ற கவலையில் பனிமலர் இருந்தாள் என்பதிலிருந்து, மனைவி என்பவள் தன் கணவன் எப்படி ஒரு குணசீலனாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறாள் என்பதை ஆசிரியர் செழியன் மனைவி பனிமலர் அபிலாசைகள் மூலம் எவ்வளவு அருமையாகப் படம் பிடித்துக்காட்டுவதை யாரும் பாராட்டி மகிழாமல் இருக்க முடியாது.

ஏற்கனவே செழியன் ஆச்சி கூட தன் பேரனின் நடைமுறை சரியில்லை என்றும் அவனை நீ தான் அன்பால் ஆற்றலால் கட்டுக்குள் வைக்கவேண்டும் என்றும் எச்சரிக்கை செய்திருக்கிறாள்..

எனினும் எதையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று அப்பவே நடவடிக்கை எடுக்கவேண்டாம் சிறிது விட்டுப் பிடிப்போம் என்று எண்ணிய பனிமலருக்கு ஏமாற்றம் மட்டுமே காத்திருந்தது. இப்படி எண்ண அலைகளை நீந்திக்கொண்டே உணவு உண்ணத் தயாரானாள். பெண்ணரசி சொன்னால் பேய் கூட அவள் நாவின் இனிமையில் பெட்டிப்பாம்பெனப் போய்ப் படுத்துவிடும் என்று கேள்விப்பட்ட பனிமலரின் அறிவுரைப் பாடத்திற்குச் செழியன் செவிசாய்க்கவில்லை!

அவன் தாய் தந்தை கூட அரசாங்க ஊதியம் பெற்ற பேர்வழிகள் தான் என்றாலும் அவர்களின் நடைமுறைச் செயல்பாடுகள் மகனின் போக்கிலும் எட்டிப்பார்த்ததை ஆசிரியர் இங்கே நாசுக்காக இது வளர்ப்புமுறையில் வந்த அநாகரீகம் என்பதையும் கிராமத்தில் சொல்வதைப்போல் தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை என்பதையும் மனம் விரும்பிக் கோடிட்டுக் காட்டுவதை யாரும் புறக்கணித்து விடமுடியாது.

மேலும் தன் மனைவியிடம் சொல்ல வந்த எந்த ஒரு செய்தியைக்கூட தானே சொல்லாமல் அதை செல்போனில் குறுஞ்செய்தி ஆக்கி தன் அன்பு மகள் மலர்விழி மூலம் மனைவிக்குத் தெரிவிக்கச்சொல்லி ஆணையிடும்போது மகளும் அந்த ஆணையை ஏற்று "சரிப்பா" என்ற ஒற்றை வார்த்தையில் ஆமோதிப்பதையும் பார்த்தால், கணவன் மனைவிக்கு இடையே எவ்வளவு ஒற்றுமை அற்ற உணர்வு உதிரத்தோடு ஒன்றிக்கிடக்கிறது என்பதை ஆசிரியர் அழகுபடக் காட்டுகிறார்.

ஒரு முறை பனிமலர் உடல்நலமில்லாது காய்ச்சலால் படுத்துவிட்டாள். அரவணைத்து அணைத்து மருத்துவ உதவி செய்ய வேண்டிய கணவன் எதையும் செய்யவில்லை..ஊர் சுற்றப் போய்விட்டான். இரவு வந்ததும் மகள் மலர்விழியைப் பார்த்து, "அம்மா சாப்பிட்டாளா?" என்று செழியன் கேட்டதைச் செவிமடுத்த பனிமலர் பொங்கி எழுந்து, "ஏன்? நான் இருக்கேனா? செத்தேனா? என்று பார்க்க வந்தீர்களா?" என்று கேட்டதிலிருந்து....ஆசிரியர் இங்கே ஒரு கணவன் மனைவி இடையே உள்ள எதார்த்தமான குடும்ப விரிசல் எத்தகைய நீண்ட விரோத மனப்போக்கை உருவாக்குகிறது என்பதை இங்கே தெளிவாய் உணரவைக்கிறார்.

ஊர் சுற்றிக் கணவன் தான் என்றாலும் பிள்ளைகள் மீது செழியன் காட்டும் அன்பும் அக்கறையும் பனிமலர் மனதை வேதனைகளில் இருந்து குளிர வைப்பதுண்டு.

பனிமலர் தன் குடும்பக் குழறுபடியாலும் கவலை எல்லை தாண்டியதாலும் அவளது அழகு மேனி வர வர மெலிய

ஆரம்பித்தது. அவளது கை வளையல்கள் கூட தானே கழன்று விழத்தவறவில்லை! சங்க இலக்கியம் படித்த அவளுக்கு சில உண்மைகள் மனதில் பிரதிபலித்தது.

அதாவது கணவன் அருகில் இல்லாத போது அவள் அவன் அன்பை நினைத்து உருகிப் போய் உடல் வற்றிப் போவதும் மேலும் அவன் மீது கொண்ட தொடர் ஆசாபாசத்தாலும் அவளது உடம்பில் ஒருவித பசலை நோய் படர்வதுண்டு என்று படித்திருக்கிறாள். ஆனால் இப்போது அவள் வளையல் கழன்று விழும் அளவுக்கு வாடியதற்குக் காரணம் குடும்பத்தில் ஏற்பட்ட குதர்க்கம் மற்றும் சண்டை சச்சரவு என்பதில் ஐயமில்லை அன்றோ? ஆசிரியர் இந்தக் கட்டத்தில் காட்டும் சங்க இலக்கியரசம் கதை படிக்கும் அனைவருக்கும் கரும்பாய் இனிக்கிறது அன்றோ?

ஒரு நாள் பனிமலர் மற்றும் செழியனிடையே ஏற்பட்ட சண்டை பனிமலர் மனதை கோபத்தில் புரட்டிப்போட்டது.. கோபம் தன்னையே அழித்துவிடும் என்று வள்ளுவப் பெருந்தகையும் வர்ணிக்கிறார் அன்றோ? கோபத்தில் பனிமலர் தன் வீட்டில் இருந்த ‘‘பினாயில்’’ முழுதும் குடித்து விட்டாள்.

செய்வதறியாது குழம்பிய அவள் தன் கணவனிடம் தான் செய்த காரியத்தையும் கூறிவிட்டாள். கல் ஆனாலும் கணவன் புல் ஆனாலும் புருஷன் என்பார்கள் அல்லவா? பனிமலர் செய்த காரியம் கேட்டுத் துவண்டு போனான்.

உடனடியாக உள்ளூர் மருத்துவமனையில் சேர்த்து அவள் குடித்த பினாயில் முழுதும் வாந்தி மூலம் எடுக்க வைத்து நலம் பெற்றிட வைத்தான். ஏதோ ஒன்று ஆகி இருந்தால் தன் இளம் பிஞ்சுப் பிள்ளைகள் கதி என்ன ஆகியிருக்கும் என்று எண்ணிக் கலங்கினாள். ஆனால் கோபம் தன்னையும் தன்னைச் சார்ந்தவரையும் பாதிக்க வைக்கும் என்பதை ஆசிரியர் பனிமலரின் சீரற்ற செயல் மூலம் அருமையாய் விளக்குகிறார் அன்றோ?

அந்த நேரம் செழியன் பனிமலர் செயலுக்கு மிகவும் வருந்தி ஆறுதல் கூறுகிறான். என்றாலும் அவனது ஊர் சுற்றும் பழக்கம் ஓய்ந்த பாடில்லை. கட்டாக்காலி (மாடு) பழக்க தோஷத்தால் என்றும் கட்டுப்பட்டு கட்டுத்துறை வராது. அது ஊர் சுற்றிக் கொண்டே இருக்கும். இந்தக் கதை மூலம் வாழ்வில் ஊர் சுற்றிச் சுழன்று சுற்றி வரும் பல கட்டாக்காலிகளைப் படம் பிடித்துக் காட்டிய பெருமைக்குரிய ஆசிரியர் அவர்களைப் பாராட்டிப் புகழ்ந்து போற்றுகிறேன்.

வட்டக்கச்சி வினோத்

கார்த்திகை காலம்

ஈரக் காற்றின் இறுக்கத்தோடு
ஈரமாகிக் கிடக்கும் கண்கள்
ஒற்றை மணியோசை
எங்கள் ஒப்பாரியாக ஒலிக்கும்
ஒளிரும் தீபத்தின்
முன்னே தேசத்தை சுமந்தாவர் கனவுதெரியும்

நீருண்டு திரண்ட மேகங்கள் போல
கந்தக மேனியர் நினைவுகள் அலைமோதும்
வெடிக்கும் மின்னல் பேராளியாய்
அந்தச் சுமைகள் மாரிடிக்கும்

திரும்பி வராதவர்களை
காண திரும்பத் திரும்ப நாங்கள் நாடும்
நினைவாலயம் திறந்திருக்கும்

செங்காந்தள் ஊர் தெரிய
சிவப்பு மஞ்சள் கொடிகட்டும்
மேனி புல்லரிக்க கீதம் ஒலிக்கும்
யார் தடுத்தாலும் கண்ணீர் ஊற்றெடுக்கும்

ஒரு நிமிட அகவணக்கத்தில்
எம் தேச மாந்தரின் முகம் மலரும்
அவர் நேசித்த நாடும் மலரும்
நாங்கள் பூசித்த புதல்வர்கள் வாசம் வீசும்

பேச்சு விக்கும் வரிகள் தடக்கும்
நா வறண்டு போகும்
கண்ணீர் மட்டும் கண்ணத்தில் கோடு பதிக்கும்
இது கார்த்திகை காலம்.

வில்வரசன் கவிதைகள்

போகித்தீ

தூசிபடியும் எல்லாவற்றையும்
தீயில் எறிந்து
சுவாலையின் புன்னகைக்கு லாகுவாய்க்
கையசைக்கிறாள் சிறுமி.

பழைய காகிதம்,
உடைந்த பொம்மை,
எப்போதோ முறிந்த மஞ்சள் குடை
பயன்படுத்தாமலே உக்கிப்போன
தாத்தாவின் பிரம்பென
புன்னகையுடன் குதூகலித்து அவளெறியும்
எல்லாவற்றையும் தின்று சுடர்கிறது
போகியின் சொரூபம்.

அப்பா !
எதாவது கொடுங்களென? வாஞ்சையுடன்
கைகளை நீட்டும் குழந்தையிடம்
கொடுக்கவே முடிவதில்லை
நெஞ்சுக்குள்
வலைபின்னும் நினைவுகளை மட்டும்.

⊙



காடு திரும்பும் கடவுள்

முடிந்தது வனவாசம்,
மிதிலை திரும்புகிறான் இராமன்.
தெருவில்,
ஆற்றுமணலை அள்ளிக்கொண்டு
வேகமாய் நகரம் திரும்புகின்றன
ஜனகனின் டிப்பர்கள்.

காட்டுமரங்களை வெட்டிக்
குதிரையில் ஏற்றுகின்றனர்
குகனின் வீரர்கள்.
காணுமிடமெல்லாம் தவறணைகள் திறந்து கட்சி
நடத்துகிறான்
பரதனின் புதல்வன்.

கல்லூரி போன அங்கதனின்
மகன் கஞ்சா புகையில் தவம் செய்கிறான்.
தேடுவாரற்ற தசரதனின்
நினைவுத் தூபியில்
டிட்டொக் செய்கின்றன பேரக்குழந்தைகள்.

விருதுக்காக பண மூட்டையோடு கூட்டமொன்று
காத்திருக்கிறது வஸிட்டரின் தபோவனத்தில்.

இராமன் அனுப்பிய
இரட்டைச் செருப்புகளும்
தமக்குள் தாமே
அடித்துக் கொண்டதாய்
பாடிப் பறக்கிறது கானகத்துக் குயிலொன்று.

ரா.சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன் (தென்காசி)

இழப்பில் வந்த கழிவிரக்கம்



அதிகாலையிலேயே
எழுபவளிடம் சோம்பலை
கண்டதில்லை நான்!

எனக்கே அறியாத
என் நாவின் ருசி அறியும்
ஞானி அவள்!

இராணுவ உத்தரவுகள் போல
வந்துவிழும் என் சொற்களுக்கு
கட்டுப்படும் காரிகையவள்!

படிப்பில் சுட்டி என் குழந்தையான
பாராட்டும் என் நா மறந்தும்
உச்சரிக்காது காரணம்
அவள் தான் என்று !

ஊரடங்கும் வரை ஓய்வின்றி
உழைப்பவளோடு கலக்கையில் கூட
ஒரு போதும் கேட்டதில்லை
அவளின் விருப்பத்தை

அச்சடித்த காகிதத்தை
கொண்டுவரும் ஆணவத்தால்
அவதனிக்க மறந்து விட்டேன்
காகிதங்கள் பசியாற்றாது என

மரியாதை பற்றி வகுப்பெடுக்கும்
நான்தான் மறந்தும் கொடுத்ததில்லை
அவளுக்கான மரியாதையை!

இறுக அணைத்ததில்லை
கன்னம் சிவக்க கொஞ்சியதில்லை
தோளோடு தோள் உரச நடந்ததில்லை
படுக்கையை தவிர
எதையும் அவளோடு பகிர்ந்ததில்லை!

கடிகார முட்களோடு
போட்டியிட்டு ஓடியவளின்
கால்களை கூட பிடித்ததில்லை

அவளின் அருகாமையில்
என் மீசை கூட நரைக்கவில்லை
அவளை தொலைத்த பின்
ஆசையே துளிர்க்கவில்லை

கற்சுவரை வீடாக்கியவள்
கல்லறைக்குள் குடியேற
வீடானது கல்லறையாக

அவளிருக்கும் வரை அவளை
கொண்டாடாத நான் தான்
அவளின் இழப்புக்கு பின்
புகழாரம் சூட்டுகிறேன்



க. புனிதன்

ஹைக்கூ

புல்லின் பள்ளதாக்கில்
பனி நதியை தாண்டும்
வெட்டுக்கிளி

⊙

உதிர்கிற இலை மேல்
தியானம் செய்யும்
பட்டாம்பூச்சி

⊙

செம்மணலில்
குள்ளான் வீடுகள் செய்யும்
மழைத் துளிகள்

⊙

பண்ணை பூவை கொத்தும்
சேவலின் நினைவில் வாழ்கிறது
இணை இசை நரம்பு

⊙

பொன் வண்டை
ஏற்றி விடுகிறேன்
கொழு கொம்பில் படரும் கொடியில்

⊙

என் எளிய குடிசை வீடிற்கு
பின்னிருக்கும்
அழகிய மலை தொடரை
ஞாபகபடுத்துகிறார் குரு

⊙

முற்றம் இல்லாத
என் எளிய வீட்டை எப்படி
கண்டு கொண்டாரோ
தெரியவில்லை குரு

⊙

தொலைந்து போவதற்கு
வார்த்தை திருவிழா
செய்கிறேன் பனி பூச்சியாய்

⊙

முதியோர்கள் அதிகம் வாழும்
கிராமத்திற்கு திரும்புகிறேன்
அமைதியான சொர்க்கம்.



தமிழில் சிறுகதை : ஒரு வாயில்
சிறுகதை ஒரு நவீன கலை வடிவம்:
தமிழிற்கோ மிக மிக நவமான கலை வடிவம்

அமரர்.செம்பியன் செல்வன் (இலங்கை)

மேனாட்டவரின் ஏகாதிபத்தியப் படை எடுப்பாலும், காலனி ஆதிக்கத்தாலும் – கீழைத் தேசங்களில் ஏற்பட்ட சமூகப் பொருளாதார அரசியல் மாற்றங்களினாலும், ஆங்கிலக் கல்வியி; விருத்தியினாலும் – கீழைத்தேய இலக்கிய வடிவங்களிலும், தன்மைகளிலும் அவற்றின் போக்குகளிலும் பலத்த புத்திருப்ப மாற்றங்கள் ஏற்பட்டதுடன், புதிய புதிய இலக்கிய வகைகளும் அறிமுகமாயின.

மேனாட்டவரின் வருகையும், மதம் பரப்பும் அவாவும் இங்கு அச்சு யந்திரங்களையும், செய்தித்தாள்களையும் மக்களிடையே துரிதகதியில் பரப்பி, மக்களின் அன்றாட வாழ்க்கையின் அத்தியாவசியப் பொருட்களாக மாற்றி விட்டன. இவற்றால், கவிதையின், செய்யுட்களின் முக்கியத்துவம் குறைந்து, உரைநடையின் செல்வாக்கு மிக மிக வளரலாயிற்று.

வாய்மொழியாகவும், ஏடம் எழுத்தாணியுமாக இருந்துவந்த தமிழிலக்கியம் – அச்சின் வருகையினால் புதிய உரு; புதிய கலை; புதிய நடை என மாறத் தொடங்கியது. இத்தகைய மாற்றங்களுக்கு ஆட்சியிலிருந்த அன்னியரின் அரவணைப்பும் உறுதுணையாயிற்று.

கதை எனும் கலை

மனித குலம், உலகின் எந்த ஒரு மூலையில், எப்போ அரும்பத் தொடங்கியதோ, – மக்கள் கூட்டம் கூட்டமாக என்று வாழத் தொடங்கினரோ அன்றே கதை சொல்லும், கதை கேட்கும் பழக்கங்களும் ஆரம்பமாகிவிட்டன எனலாம்.

இப்பழக்கமே நாளடைவில் கதைகளை- பெருங்கதை, நாவல் சிறுகதை என்று தோற்றுவித்தமைக்கு முயற்சிகளாகப் பரிணமித்தன எனவும் கருதலாம். இதற்குதவியாகப் பிரித்தானியாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சி, – அச்சு யந்திர சாதனங்களை வளர்த்து மக்களிடையே கதை கேட்கும் பழக்கத்தை கதை படிக்கும் வடிக்கமாக மாற்றியமைத்தது. இதனால் ஏற்பட்ட உரைநடை வளர்ச்சியும் ஒன்றுடன் ஒன்று இணைந்து வரலாயிற்று.

புதுக்கலையா ? மரபுக்கலையா ?

ஆயினும், இங்கு கதை என்பது – உருவம், உள்ளடக்கம் என்பனபற்றியவரைவிலக்கணங்கட்கு அப்பாற்பட்ட கதை அளத்தலையே குறிக்கும். எம்மொழியிலாயினும் புதிதாகத் தோன்றுகின்ற எந்தக் கலை வடிவமும் பழைய மரபை ஒட்டியோ, தழுவியோ ஏற்படுவது வழக்கம். இதனாற்றான் உண்மை புரியாத பலரும் –

‘சிறுகதை தமிழிற்குப் புதியதல்ல’ என வாதிடுகின்றனர். இதற்குச் சான்றாகச் சங்கப் பாடற் காட்சிகளையும், தொல்காப்பியச் சூத்திரத்தையும் (தொல் : பொருள் : செய்யுளியல்-17) விக்கிரமாதித்தன் கதை, மதனகாமராஜன் கதை, மகாபாரதக்கதை, பாகவதக்கதை, பஞ்சதந்திரக் கதை, இதோபதேசம், வேத உபநிடதக் கதைகள், கதாசாசுரம் புத்த ஜாதகக்கதைகள், இக்குணிக் கதைகள், தென்னாலிராமன் கதைகள் என்பவற்றைச் சுட்டுவர். இவ்வாறு கூறுவதானால் –

மேனாடுகளில் கூட சிறுகதையின் காலம் பின்தள்ளிப் போடப்பட்டுவிடும். அங்கும் ‘விவிலிய நூற்கதைகள், நாட்டுப்புலவர் பாடிய நாடோடிக் கதைகள், ஹோமர் இதிகாசக்கதைகள், ஈசாப் கட்டுக் கதைகள், கவி சாசர் எழுதிய கந்தர்பரிக்கதைகள், மத்திய பிரெஞ்சுக் கதைகள், லாபோர்த்தேர்ண் கதைகள் போன்ற எத்தனையோ காண்கின்றன.’

சிறுகதை வித்து

ஆனால், நாம் இன்றிறயும்படியான கலையுருவம் படைத்த சிறுகதை பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் ஆரம்பமானது. தற்காலத்தில் வழக்கிலிருக்கும், சிறுகதைப் பண்புகளையும் அவற்றின் போக்கினையும் அவதானிக்கும்போது – சிறுகதை ஒரு கலைவடிவமாயினும், அது விஞ்ஞான பூர்வமாக ஒழுங்குபடுத்தப்பட்ட நவீனகலை என்பதும், அது தமிழிற்கு மட்டுமல்லாமல் உலகிற்கே பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே அறிமுகமானதென்பதும் புலனாகின்றது.

இன்றைய சிறுகதையின் தோற்றம் கொகோல் (1809-1852) என்ற ரூஷிய எழுத்தாளர் உக்ரேனியரின் வாழ்க்கையைப் பரிகசித்து யதார்த்தவாதமாக எழுதிய சிறுகதைகளுடன் ஆரம்பமாவதாக இலக்கிய விமர்சகர்கள் கருதுகின்றனர். இவரைத் தொடர்ந்து லியோ டால்ஸ்டாய், ஐவன்துர்க்னேவ், அன்ரன் செகோவ், மாக்ஸிம் கோர்க்கிய் போன்றவர்கள் எழுதி வந்தனர். இச்சிறுகதை இலக்கியம் ரூ~pய நாட்டில் தோன்றியதாயினும்.

இதனை நவீனப்படுத்தி, சிறுகதைக்கலை உருவம் பெறுவதற்குரிய சாத்தியக் கூறுகளையுணர்ந்து, அதற்கு விதிகளமைத்து வளம் படுத்தும் முயற்சியிலீடுபட்டு உழைத்தவர்கள் அமெரிக்கச் சிறுகதை எழுத்தாளர்களே.

அமெரிக்கச் சிறுகதை எழுத்தாளர்களில் முதன்மையானவர்களாக வா~pங்டன் இர்விங் (1783-1859). நதானியலட ஹோர் தோர்ண் (1804-1864), எட்கார் அலன்போ (1809-1849) ஆகிய மூவரைக் குறிப்பிடுவர். சிறுகதையானர் இலக்கியத்தில் நிலையான இடம் பெற்றது. இவர்களினால் என்பர். இவர்கள் எழுதியது புதுரகக் கதைகளாகும். சிறப்பாக 1820ல் வா~pங்டன் இர்விங் தான் வெளியிட்ட ஷஸ்கெச் புக்| என்ற நூலில் கலையம்சம் படைத்த சிறுகதைகளை எழுதியிருந்தார். 1837ல் நதானியல் ஹோர்தோர்னும், 1830ல் எட்கார் அலன்போவும் தத்தம் தொகுப்புகளை வெளியிட்டனர்.

அமெரிக்காவில் இங்ஙனம் உற்பத்தியான சிறுகதை உலகெங்கும் பரந்தது. இங்கிலாந்தில் ஸ்டீவன்சன், கிப்ளிங், காதரைன் மான் ஸ்பீல்ட், கோப்பார்ட், பேட்ஸ் என்போரும்,

பிரான்சில் எமிலி ஜோலா, மாப்பசான், அனத்Nதூல் பிரான்ஸ் ஆகியோரும் இக்கலையை மேன்மேலும் ஆழமும், இலக்கியத்தரமும் மிக்கதாக வளர்த்தனர்.

சிறுகதைப் பண்பு

சிறுகதைத் தொகுப்புகளும், சிறுகதை வரலாறுபற்றி எழுந்த நூல்களும் இன்று இலட்சக்கணக்கில் வெளிவந்துள்ளன. வந்து கொண்டுமிருக்கின்றன. ஆயினும்,

சிறுகதை என்றால் என்ன? அதன் பண்பு என்ன? அதன் வரை விலக்கணங்கள் யாவை? உருவம் என்ன? – என்பது பற்றி முடிந்த முடியாத எந்தவித கருத்துக்களும் இதுவரை ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதுடன், சரியாக வரையறுத்துக் கூறமுடியவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிறுகதையின் மூலபிதா என்று கருதப்படும் எட்கார் அலன்போ கூட, 'அரைமணி நேரம் முதல் இரண்டு மணி நேரம் உள்ள காலம்வரையில் படித்து முடித்து மகிழக் கூடியதாகச் சிறுகதை இருக்கவேண்டும்' – என்று கூறி வாசகனின் வாசிப்பு ஆற்றல், மனநிலைக் காலம், இன்பநுகர்ச்சி என்பனவற்றினடியாக விளக்குகிறாரேயன்றி, சிறுகதைப் பண்பினடியாக விளக்க – முடிய – முயலவில்லை எனலாம்.

'வாழ்க்கையின் சாளரம் சிறுகதை' – என்ற புதுமைப்பித்தனும் – சிறுகதையின் உருவ, உள்ளடக்கப்பண்பின் ஒரு உருகப்பாணியில் கூறமுடிந்தாலும், இவ்விளக்கம் அவரவர் மனோபாவ, விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப பொருள் கொள்ள வாய்;ப்பளிக்கிறதேயன்றி, முடிவாகவோ, தெளிவாகவோ விளக்கத் தவறிவிட்டது என்பது தெளிவு.

பேராசிரியர் வெல்ஸ் – 'பத்தாயிரம் சொற்களுக்கு மேற்போகாமல் சற்றேறக்குறைய அரைமணி நேரத்தில் வாசித்து முடிக்கக் கூடிய தொன்றாக இருக்கவேண்டும்' – என்பது சிறுகதை வாசிப்பின் காலஅளவையும், எழுத்தாளனின் சொல்லாற்றலையும் கொண்ட கருத்தாகும்.

வாசகனின் கவனத்தை ஒரேயொரு சம்பவத்தில் ஒரு முனைப்படுத்தவேண்டும். அதன் மூலம் பாத்திரங்களின் குணாதிசயத்தை வெளிப்படுத்தவேண்டும்... ... ஒரேயொரு ராகத்தை எவ்வளவு விஸ்தாரமாக ஆலாபனம் செய்தாலும், அது ஒரே ராகமாகத்தானிருக்கும் – என்று தி.ஜ.ரங்கநாதன் கூறுவது உள்ளடக்கம் பற்றி விளக்கினாலும், சிறுகதையினளவு, உருவம் பற்றிய நிலையில் பிரச்சினைகளைத் தீர்க்கவில்லை என்று கூறலாம்.

ஆகவே, 'சிறந்த சிறுகதையின் அமைப்பே சிறுகதையின் இலக்கணம் எனலாம்'

தமிழில் சிறுகதை

மேனா:களில் சிறுகதையின் தோற்றம் பற்றி ஆராய்ந்த ஒரு சில அறிஞர்கள் – சமூக அமைப்பின் மகத்தான மாறுதல்களே சிறுகதைக் கலைக்கு வித்திட்டன் எனக்கூறுவர். தொழிற்புரட்சியின் யந்திரமயமான வேகமான இயக்க வாழ்வினாரும், அதனாலேற்பட்ட நிலமானிய அமைப்பின் சிதைவினால் உருவான புதிய வாழ்க்கை முறையினாலும், தனிமனித முக்கியத்துவம் அதிகரித்து இதற்கு முன்பமைந்த குடும்பக் கூட்டு வாழ்க்கை சிதைந்ததினால், தனிமனிதனின் ஒவ்வொரு அம்சங்களும், உணர்ச்சி பேதங்களும். இலக்கியத்தின் முக்கியத்துவமடைந்தன. இதே போன்ற நிலையே ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் தமிழகத்தில் ஏற்பட்டதனால், சிறுகதை தோன்றியது என்பர்.

இன்னும் சிலர், தொழிற்புரட்சியினால் ஏற்பட்ட பரபரப்பான வாழ்க்கை முறையில் – முன்பு போல் நீண்ட கதைகளைக் கேட்கவோ, படிக்கவோ ஏற்ற மன நிலையில் மக்களில்லாததால், சுருங்கிய நேரத்தில் சுவைப்பதற்கேற்ற கதைகளையே மக்கள் விரும்பியதால் தான் சிறுகதை உற்பவித்தது எனவும் கூறுவர்.

எவ்வாறு இருந்தபோதிலும், சிறுகதைக்கலை 19ஆம் நூற்றாண்டின் சமூக அமைப்பில் எழுந்த தவிர்க்கமுடியாததொன்று என்பதனையும் எவரும் மறுத்திலர்.

முதல் மூவர்

தமிழ் நாட்டில், ஆங்கிலேயரின் ஆட்சியின் பயனாக ஏற்பட்ட ஆங்கிலக் கல்வி மக்களின் மனோபாவங்களையும், இலக்கியத் தாகங்களையும் வேறுதிசையில் திருப்பின.

சமுதாயத்தின் மேல்தளத்தில் இருந்தோரே இம் மாற்றங்களினால் பாதிக்கப்பட்டனர். வாழ்க்கை நிலையிலும், கடல் கடந்த படிப்பாலும் இததன்மைமிக்கவராக விளங்கியவர் தான் – தமிழின் சிறுகதையின் தந்தை எனப் புகழப்படும்-

வரசுநேரி வேங்கட சுப்பிரமணிய ஐயர்

இவர் ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம், இந்தி, வங்காளி, இலத்தீன், கிரேக்கம், செருமானியம், பிரெஞ்ச் ஆகிய மொழிகளை நன்கு சுற்றிருந்ததனால், அம்மொழிகளிலெழுந்த இலக்கியங்களின் பண்புகளையும், அவற்றின் போக்குகளையும், அலை சமூகத்தில் கொண்டிருந்த தொடர்பு, செல்வாக்கு, பாதிப்புக்களை நன்கு யம் திரிபற உணர்ந்திருந்தார்.

ஆயினும், 'இவர் சிறுகதை வளர்ச்சிக்குத் தொண்டாற்றியது எதிபாராததொன்று ஏனெனில் ஐயருக்குத் தமிழிலக்கியத்திற்குத் தொண்டாற்றும் எண்ணத்தைவிட தேசபத்தியை, விடுதலையுணர்ச்சியை வளர்ப்பதே மேலோங்கி நின்றது. இதனாற்றான் இவர் பெரும்பாலும் இத்தகைய உணர்ச்சிகளை வளர்க்கும் வரலாற்றுச் சம்பவங்களையும், புராணக்கதைகளையும் தமது சிறுகதைகளின் கருப்பொருளாகக் கொண்டார். அத்துடன் மட்டுமல்லாது ஐயரவர்களுக்குத் தாம் படைப்பது சிறுகதையாக இருந்தாலும்சரி, நீண்ட கதைகளாக இருந்தாலும்சரி தன் எண்ணத்திற்கு ஏற்றதாகக்

கருப்பொருள் இருக்கவேண்டும் என்பதே முக்கய நோக்கமாக இருந்தது. என்பதனை, அவரே தனது நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

'...... தமிழ் நாட்டுச் சரித்திரமனைத்தும் கற்பனைக் கதைகளாகச் செய்ய வேண்டு மென்றிருக்கின்றேன்.....

........தீரயுகம் இங்கு பிறக்க, வழிகாட்டியாக நாம் அமைந்து விடுவோம. இந்த நோக்கத்துடனேயே 'மங்கையர்க்கரசியின் காதல்| முதலிய கதைகளை வெளிப்படுத்தியதோடு லைலி மஜ்னூன், அனார்கலி முதலிய கதைகளும் எழுதிவருகிறேன். நாளாவட்டத்தில் பெரிய சரித்திரத்தை எழுதும் நிலைமைக்கு வரும் என நினைத்தே சிறுகதைகளை எழுதிவருகிறேன்.

இவர் திட்டமிட்டுத் தமிழில் சிறுகதையைக் கலையாக வளர்க்கமுற்படாவிட்டாலும் கூட, இவர்பெற்ற பிறமொழி இலக்கியப் பயிற்சிகளினால், இவரின் சிறுகதைகள் உயர்தரத்தினதாக, சிறந்த கலையுணர்வை எழுப்பியமையாற்றான் புதமைப்பித்தனும், ஷஐயரவர்களின் சிறுகதைகள் மிகவும் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவைகள். அவர் தமது சிரு~;டிகளில் மனிதனின் மேதையை, தெய்வீகத்துயரை, வீரத்தைக் காணப்பதில் களித்தார். அவரின் மனம் இலட்சியத்தைச் சிரு~;டிப்பதில் இலயித்தது என்றார்.

இவரின் மங்கையர்க்கரசியின் காதல் தொகுப்பில் உள்ள கதைகளுக்கு இவர் எழுதியுள்ள சூசிகை சிறுகதைமரபை மீறியதொன்றாகும். எவ்வாறு இருப்பினும் இவரின்கதைகளே தமிழில் தோன்றிய சிறுகதையின் ஆரம்பமாக இருப்பதாலும், இவரின் உரைநடையிலே வடமொழியின் காவியத்தின் காம்பீரியம் மேலெழுந்து நின்று கலையழகைக் கொடுப்பதாலும், சிறுகதையின் தந்தை இவர் எனக் குறிப்பிடுவதில் தவறில்லை என்றே படுகிறது. இதனாற்றான்.

'இக்கதைகளுக்கு முன்பே தமிழில் கதைகள் இல்லாமலில்லை. பரமார்த்தகுரு கதை என்றநூலிலும், வீராசாமிச் செட்டியாரின் விநோதரசமஞ்சரியிலும் சுவையற்ற பலகதைகளுண்டு. சுதாசிந்தாமணி எழுதிய ஈழத்துச் சந்திரவர்ணம்பிள்ளை. அபிநவக்கதைகள் எழுதிய செல்வக்கேசவராயமுதலியார் போன்ற அறிஞர்களும் இத்துறையில் முயன்றதுண்டு. எனினும் சிறுகதை என்னும் புதிய இலக்கிய வகைக்கான உத்திகளின் ஓர்மையுடன் தமிழில் முதன் முதல் எழுந்தவை வ.வே.சு. ஐவரின் கதைகளே7 என்பர்.

இவரைத் தொடர்ந்து அ. மாதவையா, சி. சுப்பிரமணிய பாரதியார், ஸ்ரீராமாநுஜலுநாயுடு போன்றோர் சிறுகதை முயற்சிகளில் ஈடுபட்டனர். அ. மாதவையா 1924-25-ம் ஆண்டுகளில் தாம் பதிப்பித்த ஷபஞ்சாம்ருதம்| பத்திரிகையில் பல சிறுகதைகளை எழுதி வெளியிட்டுள்யளார். ஷஎன்னைமன்னித்து, மறந்துவிடு ஏட்டுச் சுரைக்காய், முரகன், நிலவரி ஒலம், ஆருடம் முதலிய கதைகள் குறிப்பிடத்தக்கவைகளே. இக் கதைகள் ஷகுசிகர் குட்டிக்கதைகள் என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இவரின் கதைகளில் சமூகச் சீர்கேடுகள் உணர்ச்சியுடன் சித்தரிக்கப்பட்டுள்ளதுடன், சிறுகதை உருவமும் நன்கு அமைந்துள்ளது. இதனாற்றான் புதமைப்பித்தனும், ஷதமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் இவர் கதைகளுக்கு முக்கிய இடமுண்டு எனக் கூறியுள்ளார்.

தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், பிரான்சியமொழி இலக்கியங்களைத் திறம்படக்கற்றிருந்த சுப்பிரமணிய பாரதியார், கவிதையில் சிறந்ததுபோல், சிறுகதையில் சிறக்க முடியவில்லையாயினும், 1900-1920-ம் ஆண்டுகளின் சிறுகதை முக்கியத்துவரின் இவரும் ஒருவரே பாரதியார் கதைகள் (இருபாகங்கள்), பாரதியார் மொழிபெர்த்த தாகூரின் சிறுகதைகள் என்பனவே இவரின் சிறுகதைப்பணிகளாகும். தாகூரின் சிறுகதை மொழிபெயர்ப்புகள் அக்கால மக்களின் சிறு கதைப்பயிற்சிக்கும், ஈடுபாட்டிற்கும் பெருந்துணையாயின. உரை நடையில் புதியசோபையையும், கவர்ச்சியையும் கொண்டு, பாரதியார் சிறுகதைகளைச் சமூகக் கண்ணோட்டத்தில் சொந்தமாகப் படைத்தபோதிலும், சிறுகதை உருவ அமைதி சீர்குலைந்தே காணப்படுகின்றது. இதற்கு பாரதியார் இவற்றைக் கதைகளாகக் கருதினதேயன்றி – சந்திரிகையின் கதை – நவீனகலையான சிறுகதைகளாகக் கருதாமையே காரணம் என்றுபடுகிறது.

காந்தீயக் கதைகள்

|1920-ம் ஆண்டுகளில் இந்தியக்காங்கிரசின் இயக்க சக்தியாக காந்திமாறியதும். உப்புச்சத்தியாக்கிரகம் (1930) சட்டமறுப்பு இயக்கம் (1932), ஒத்துழையாமை இயக்கம் – போன்ற அரசியலியக்க உணர்ச்சித்தாக்கங்கள் மக்கள் மனதைப்பெரிதும் பாதித்தன. எனவே, நாட்டுமக்களைப் பல நிலைகளிலும் ஒற்றுமையாக்க இந்திய ஒற்றுமை, தொழிற்சங்க ஒற்றுமை, சாதிஒழிப்பு என்பன முன்னணிக்கு வரவே, எழுத்தாளர்களின் கவனமும் இவற்றின் பால் திரும்பின8| ராஜாஜி, தி.ஜ. ரங்கநாதன், ந. பிச்சமூர்த்தி, கல்கி போன்றோர் இவற்றை அடிப்படையாகக்கொண்டு சிறுகதைகள் எழுதலாயினர். 1935-ல் ராஜாஜி நடாத்திய ஷவிமோசனம் பத்திரிகையில் ராஜாஜியும் கல்கியும் இத்தகைய கதைகளையே நிறைய எழுதினர். ஷராஜாஜி கதைகள் தொகுப்பிலிடம் பெற்றுள்ளகதைகள் ஷவிமோசனத்தில்| வெளிவந்தவையே. இவர்கள் பிற்காலத்தில் சிறந்த சிறுகதைகளை எழுதியுள்ளனர்- (தி.ஜ.ர-வின் சந்தனக்காவடி, நொண்டிக்கிளி- தொகுப்புகள், ந. பிச்சமூர்த்தியின் மோகினி, பதினெட்டாம் பெருக்கு, முள்ளும் ரோஜாவும், காவல், கல்கியின் கேதாரியின் தாயார், ராஜாஜியின் தேவானை – சிறந்த சிறுகதைகளே) ராஜாஜி நீதிக்கதைகளையும், போதனைவிளக்கச்சிறுகதைகளையும் எழுதித் தம்மை சிறு கதைத்துறையினின்றும் மாற்றிக்கொண்டது போலவே, கல்கியும் நீண்டகதைகளை எழுதி, தம்மை

ஒரு நாவலாசிரியராகப் பரிணமித்துக் கொண்டார். எவ்வாறாயினும், தமிழ்மக்களை தமிழ்க் கதைகள் படிக்க வைத்த மாபெரும் தொண்டைச் செய்தவர் கல்கி எனில் மிகையாகாது. இதனாற்றான், 'சிறுகதையின் அகலவளர்ச்சிக்குக் காரணமானவர் கல்வி: ஆழவளர்ச்சிக்குக் காரணமானவர்கள் மணிக்கொடிக்குழுவினர் என்கின்றனர்.

'சிறுகதை – மணிக் கொடி

1933-ம் ஆண்டுப் பிற்பகுதியில், கே. சீனிவாசனும், வ. ராமசாமி ஐயங்காரும் தோற்றுவித்த ஷமணிக்கொடிப் பத்திரிகை காலத்திற்குக் காலம் மறைந்தும், புத்துருக்காட்டியும், புதிய புதிய ஆசிரியர்களைக் கொண்டும் வெளிவந்து, இந்தியத் தமிழிலக்கிய வரலாற்றில் தனக்கொரு தனியிடத்தைப் பிடித்துக்கொண்டது. 1994-ல் டி.எஸ்.சொக்கலிங்கத்தை ஆசிரியராகக் கொண்ட காந்தி என்ற பத்திரிகையையும், தன்னுடன் இணைத்து மணிக்கொடி வெளிவரலாயிற்று. பின்னர் இந்த மணிக்கொடியும் 1936-ல் மறைந்து 937-ல் பி.எஸ். ராமையாவையும் வ ராவையும் ஆசிரியராகக் கொண்டு சிறுகதை மணிக்கொடியாக 1939வரை வெளிவந்தது.

மணிக்கொடி எழுத்தாளர்கள் என்று இன்று சில எழுத்தாளர்களைக் குறிப்பிடுவது வழக்கம். இதனால் இவர்கள் தங்கள் சிறந்த படைப்புக்களை முதன் முதலாக மணிக்கொடியில்தான் வெளியிட்டார்கள். என்றோ, அதிற்றான் எழுத ஆரம்பித்தார்கள் என்றே பொருளில்லை. இவர்களில் பலர் மணிக்கொடி வரமுன்னரே, காந்தி, கலை மகள், ஊழியன் சுதந்திரச்சங்கு, ஆனந்தவிகடன் பத்திரிகைகளில் எழுதித் தமக்கொரு இடத்தை சிறுகதை இலக்கியத்தில் பிடித்துக் கொண்டவர்கள். இவர்களின் தனித்துவம் சுடர்விட்டுப் பிரகாசிக்கவும் இலக்கிய-உரு, உள்ளடக்கப் பரிசீலனை செய்யவும், மணிக்கொடி பெரிதும் பயன்பட்டதாலும். இவ் எழுத்தாளர்கள் ஒன்று கூடித்தமக்குள்ளே விவாதித்தும், குழு முறையில் செயல்பட்டும் வந்தமையினால், பிற்காலத்தில் இவர்களை மணிக்கொடி எழுத்தாளர் என வழங்கினர்.

நவீன இலக்கியச் சிறுகதையின் பரிசோதனைக்களமாக மணிக்கொடி விளங்கியது. புமைப்பித்தன், ந. பிச்சமூர்த்தி, கு.ப. ராஜ கோபாலன், பெ.கோ. சுந்தரராஜன் (சிட்டி), பி.எஸ். ராமையப, மௌனி (எஸ். மணி). கி.ரா.ந. சிதம்பர சுப்பிரமணியம், ஆர். ~ண்முக சுந்தரம், எம். வி.வெங்கட்ராம், சி.அ. செல்லப்பா,பி.எம். கணணன், லா.ச. ராமாமிர்தம், க.நா. சுப்பிரமணியம் என்போரை மணிக்கொடி எழுத்தாளர் எனலாம்.

இவர் எல்லாரும் ஒரே காலத்திலோ, ஒரே தரத்திலோ, ஒரே எண்ணத்திலோ எழுதியவர்களல்லர். ஒவ்வொருவரும் தத்தம் வழியே இலக்கியத்திற்கென பார்வையையும், தனித்துவத்தையும் கொண்டவர்கள். தனித்துவம் மிக்கவர்களின் சேர்க்கையாக மணிக்கொடி பத்திரிகை விளங்கியது. இவர்கள் எல்லாரும் சிறுகதைத்துறையி; ஆழ்ந்து ஈடுபட ஷஅப்போதைய பத்திரிகைகளில் பொறுப்பு ஏற்றிருந்தவர்கள் பத்திரிகைக்கு வேண்டிய அம்சங்களில் ஒன்றாக சிறுகதையைக் கருத முன்வந்ததும். மேனாடுகளில் சுமார் முக்கால் நூற்றாண்டு காலமாக வளம்பெற்றுவந்திருந்த சிறுகதை இலக்கியத்துடன் இவர்களுக்கு இருந்த பரிச்சயமும் இதற்குக் காரணம். இதோடு நம் நாட்டில் தாகூர், பிரேம் சந்த், சிறுகதைகள் தமிழுக்கு அறிமுகம் ஆனதும் சேரும். இவையோடு ஐயரின் சிறுகதை முயற்சிகள்தந்த உந்துதலும் காரணம்.

தமிழ்ச் சிறுகதைத்துறையில் உருவத்திலும், உள்ளடக்கத்திலும் பலவிதமான சோதனைகளை இவ் எழுத்தாளர்கள் நடாத்தி வந்தனர். இவர்களில் சமூகப் பார்வையில் புதமைப்பித்தனும் பால் உணர்ச்சி அடிப்படையில் கு.ப. ராஜகோபாலனும், மனக்குகை ஓவிய வார்ப்பில் மௌனியும் குறிப்பிடத்தக்கவர்கள்.

'பாரதி வனத்தின் மூத்த பிள்ளையான புதமைப்பித்தன் வலுவும் வேகமும் கொண்ட, இழுத்து மடக்கும் நடையில், புதப் புதச் சொல்லாட்சிகளைக் கொண்டு சமுதாயத்தின் பச்சை உண்மைகளை, ஆழமும், பரப்பும் கொண்ட சிறுகதைகளைப் படைத்தார்.

தமிழ்ச் சிறுகதைத்துறைகளில் அதிகம் வெற்றியீட்டினவரெனக் கருதப்படும் கு.ப.ரா. மென்மையான, நளினமா உத்திகள் மூலம் ஆண், பெண் இருபாலருடைய பருவ மன அதிர்வுகளை சிறுகதைகள் மூலம் வெளியிட்டார்.

'சிறுகதையின் திருமூலர் – என புதமைப் பித்தனாலேயே பாராட்டப்பட்ட மௌனி 'கனமான விடயங்களை ஏற்க மறுக்கின்றன மெலிந்த சொற்களில் 'மனப்போக்குகளின் நடப்பியல்புகளை பரிபூரணமாக சித்தரித்துள்ளார். நிகழ்ச்சிகளைச் சிக்களப் படுத்தி மனித நிலைமைகளை சிக்கனச் சொற்களிலே அகண்டாரமாகக் காட்டிவிடும் ஆற்றல் மிக்கவர். தமிழில் ஆழமான கதையம்சத்தின் துணையின்றி சாதாரண கதைகளில் ஒரு காவிய உணர்வைத்தருகிறார். சொற்களுக்கு முக்கியம் கொடுப்பவர். இவர் இவரின் கதைகளைத் தமிழிலேயே படித்து, ஆங்கிலத்தி;ல் இவரின் அத்துவானவெளி என்ற கதையை பிரதக்~pணம்ஷ என்ற தலைப்பில் மொழிபெயர்ந்து வெளியிட்ட அமெரிக்க அறிஞர் அல்பர்ட் பி. பிராங்கிளின் 'மௌனிஒரு மேதை' என நிர்ணயிக்கிறார். அத்துடன் கேரளப் பல்கலைக்கழகத்தில் இலக்கியக் கலாநிதிப் பட்டத்திற்காக, மே. காந்தி என்ற மாணவர் மௌனிகதைகளை (மௌனி மொத்தம் இன்றுவரை இருபத்தி நான்கு கதைகளே எழுதியுள்ளார்) ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பதும் மௌனியின் சிறப்பைப் புலப்படுத்தும்.

ந. பிச்சமூர்த்தி ஆழ்ந்த அனுபவங்களை, தரிசனம் நிறைந்த தத்துவச் சரடுகளில், உவகை மிகுந்த சொற்றொடர்கள் நிறைந்த நடைகளில் சிறுகதைகளை வெளியிட்டார்.

பி.எஸ். ராமையா காந்திய அடிப்படையில், சமுதாயச் சீர்கேடுகளைச் சித்தரிக்கும் கதைகளையே பெரும்பாரும் இக்காலத்தில், எழுதினார். இவர்களுடன் ஈழத்தில் சி. வைத்தியலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தன் ஆகியோரும் எழுதிவந்தனர். கலைமகள், ஈழக்கேசரி என்பன இவர்களுக்கு உதவின.

இவர்களுக்கும். இவர்களைச் சார்ந்த மணிக்கொடி எழுத்தாளர்களுக்கும் தாகூர், பிரேம் சந்த், அன்ரன் செகாவ், டால்ஸ்டாய், ஜேம்ஸ் ஜொய்ஸ், எமிலிஜோலா, மாப்பசான், டி.ஹெச்.லோறன்ஸ், எட்கார் அலன்போ, ஏர்னஸ்ட் ஹெமிங்வே, நட்காம்சன், செல்மா லாகர்லா – போன்ற மேனாட்டு இலக்கியவாணர்கள் முன்மாதிரியக விளங்கினராகத் தெரிகிறது.

எவ்வாறு இருந்தபோதிலும், மணிக்கொடி கால எழுத்தாளர்கள் ஒவ்வொருவரும் தத்தம் தனித்துவத்தையும், பூரணத்துவத்தையும் தாபிக்கமுயன்று ஓரளவு வெற்றியும் பெற்றனர் – எனலாம்.

பல்முனைத் தாக்கங்கள்

இதே வேளைகளில், இத்தமிழ் எழுத்தாளர்களுக்குத் தூண்டுகோலாக பாரதத்தின் பல பாகங்களிலும், பல்லேறு மொழிகளிலும் ஏற்பட்ட இலக்கிய மாற்றங்கள், எழுச்சிகள், மறுமலர்ச்சிகள், புத்வேகம் என்பன பெருந்துணையாக நின்றன.

1936-ம் ஆண்டளவில் பிரேம்சந்த் தலைமையில் ஷஅகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கம்| தோன்றியது. இச்சங்கத்தின் முல்க்ராஜ் ஆனந்த, லிஜ்ஜத்ஸாஹீர், ய~;பால், கே.ஏ. அப்பாஸ் ஆகிய எழுத்தாளர்களின் புதமை இலக்கியங்கள் நாட்டின் சமூக, பொருளாதார, அரசியலடிப்படையில் எழுந்து தமிழ் எழுத்தாளர்களிடையே பெரும் விழிப்புணர்ச்சியையும், துடிப்பையும் எழுப்பின.

இக்கால கட்டத் தமிழ் எழுத்தாளர்கள் பெரும்பாலோர். கல்லூரிகளில் படித்தவர்கள்; தேசிய உணர்ச்சி மிஞ்சியவர்கள்; பழமையின் எதிரிகள்; வாழ்வின் உண்மைகளை நேருக்கு நேர் நின்று தரிசித்து, அவற்றை விமர்சன அடி;படையில் சர்வதெச இலக்கியத்தின் தரத்திற்குக் கலையழகுடன் தமிழில் சிறுகதை எழுதவேண்டுமெனத் துடித்தவர்கள் என்பதனை அவர்களின் படைப்புக்கள் இன்றும் எடுத்துக்காட்டுகின்றன.

1934-35-ல் மஞ்சேரி ஈசுவரன் ளுர்ழுசுவு ளுவுழுசுலு என்ற மாத சஞ்சினையை நடாத்தினார். இதில் லா.ச.ரா. போனறோர் ஈசுவரனுடன் சேர்ந்து எழுதிவந்தனர். சிறுகதை வரலாற்றில் இதற்குத் தனியிடமுண்டு.

மணிக்கொடி மறைவில்

மணிக்கொடி மறைவின்பின் தோன்றிய கிராம ஊழியன், கலாமோகினி, பாரத்தேவி, சூறாவளி போன்ற பத்திரிகைகள், மணிக்கொடிப் பாதையில் முன்னேறின. இப்பத்திரிகைகளில் மணிக்கொடி எழுத்தாளர் பலரும், வல்லிக் கண்ணன், தி, ஜானகிராமன் போன்றாரும் எழுதிவந்தனர். இவர்களுடன் ஈழத்து எழுத்தாள முதல்வர்களும் எழுதிவந்தனர். இக்காலத்திற்கு முன்னரே தோன்றி இயங்கிவந்த ஈழகேசரியை விட, மறுமலர்ச்சி என்ற பத்திரிகை 1945-ல் தோன்றி ஈழத்து எழுத்தாளர்களுக்கு பெரும் ஊக்கம் அளித்து வந்தது. இவ்வேட்டினால் வரதர், அ.செ. முரகானந்தம், அ. ந. கந்தசாமி, சு. இராஜநாயகன், சொக்கன், வ.அ.இராசரத்தினம், சு.வே.கனக, செந்திநாதன் போன்றோர் முன்னணிக்கு வந்தனர்.

சுதந்திர இலக்கியங்கள்

1947-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி பாரத நாடு சுதந்திரம் பெற்றபின், இலக்கியப் போக்குக்கள் மாற்றமடையத் தொடங்கின. ஆட்சிப் பொறுப்பு அன்னியரின் கையிலிருந்து, சுதெசிகளின் கையில்வந்ததும், நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக உணர்வுகள் மாற்றம் பெறலாயின. ஒற்றுமையுணர்ச்சி கன்றி, பிரதேச உணர்ச்சி வலுவடையவே, தமிழ்நாட்டில் தமிழுணர்ச்சி ஓங்கி தனித்தமிழ் இயக்கம், திராவிட நாடுதோரும் திராவிட முன்னேற்றக் கழகம் என்பன தோன்றி – சிறுகதைபிரச்சார இலக்கியமாகியது.

இத்தகைய கதைகளை தி.மு. கழகத்தினரே எழுதினர். பெரும் போராட்டத்தின்பின், மக்களிடையே ஏற்பட்ட ஓய்வுக்குகந்த கதைகளை ஆனந்தவிகடன், கல்கி போனற பத்திரிகைகள் வெளியிடலாயின. இதேவேளையில் சமூகச்சீர்திருத்த எண்ணங்கொண்ட பொதுவுடமைக்கட்சியிலிருந்த பழைய எழுத்தாளர்களும், இவ்வணியில் புதிதாகச் சேர்ந்து கொண்ட எழுத்தாளர்களும் முற்போக்குக் கதைகளை எழுதலாயினர். 1948-ல் எம்.வி. வெங்கட் ராமனை ஆசிரியராகக் கொண்டு வெளி வந்த ஷதேன்| தி. ஜானகிராமன், கரிச்சான் குஞ்சு ஆகியோரைச் சிறப்பாக அறிமுகம் செய்தது.

1950-ன் பின் ஏற்பட்ட, மனிதன், சாந்தி, சரஸ்வதி, தாமரை போன்ற பொதுவுடமைச் சார்புள்ள பத்திரிகை மூலம், – விந்தன், கு. அழகிரிசாமி, சுந்தர. ராமசாமி, ஜெயகாந்தன் போன்ற நல்ல பல சிறுகதை எழுத்தாளர்கள் தோன்றினர். இதே போன்றே இலங்கையிலும், முற்போக்கு எண்ணம் கொண்ட பாட்டாளி, பாரதி முதலிய தீவிர ஏடுகள் தோன்றி கே. ராமநாதன், கே. கணே~;, எம்.பி. பாரதி போன்ற எழுத்தாளர்களை நல்கின.

1948 – 2 – 4ல் இலங்கை சுதந்திரமடைந்த பின் ஏற்பட்ட இலவசக் கல்வித்திட்டத்தினாலும், 1956-ல் ஏற்பட்ட சமூகப் புரட்சியினாலும், இலங்கைத் தமிழரிடையே தேசிய உணர்ச்சி பிறந்ததுடன், வர்க்க உணர்வுகள் தீர்க்கமடைந்தன. தேசிய விழிப்பும், வர்க்கப் போராட்டங்களும் சுதந்திரத்தின் பின் மக்களிடையே

பெரியதொரு சிந்தனை மறுமலர்ச்சியை ஏற்படுத்தவே, இலக்கியமும் அவ்வழியே திசைதிரும்பிற்று. நாட்டின் பிரச்சினைகளை இலக்கியங்கள் முன்னிறுத்த வேண்டும் என்ற துடிப்பில் தேசிய இலக்கியக் கொள்கை தீவிரமடைந்தது. இப்பின்னணியை நன்குணர்ந்தவரான, க. கைலாசபதி 1957-ல் தினகரன் ஆசிரியராக விளங்கியபோது இவ் எழுச்சியைத் தூண்டிவளர்த்தார். புதியதொரு எழுத்தாளபரம்பரையையும் தோற்றுவித்தார். இக்காலகட்டத்தில் எஸ். பொன்னுத்துரை, கே. டானியல், செ. கணேசலிங்கன், என்,கே. ரகுநாதன், காவலூர் ராசதுரை, டொமினிக் ஜீவா போன்றவர்கள் தரமான சிறுகதைகளைப் படைத்தனர். இதே போன்று, இக்காலகட்டத்தில் தென்னி;ந்தியாவில் எழுதத் தொடங்கிய ஆர். சூடாமணி கி. ராஜநாராயணன், கிரு~;ணன் நம்பி போன்றோரும் தரமான சிறுகதைகளைப் படைக்கத் தொடங்கி, இன்றும் நல்ல சிறுகதைகளை எழுதி வருகின்றனர்.

பல்கலைக் கழக எழுத்தாளர்

ஷ190 தொடக்கம் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி தாய் மொழிமூலம் போதிக்கப்படலாயிற்று. சிறப்பாகக்கலைத்துறைப் பாடங்கள் தமிழிலும், சிங்களத்திலும் கற்பிக்கப்படவே, பல்கலைக்கழக மாணவர்கள் பலர் பிறமொழிச் சிறுகதைகளையும், அவற்றின் ஆய்வுகளையும் படித்ததோடமையாது தாமும் எழுத ஆரம்பித்தனர். மலையாளம், ரு~pய, வங்காள நவீன எழுத்துக்களுடன், தமிழகச் சிற்சில நவீனத்துவப் போக்குகளும் இவர்களுக்கு ஊக்கியாக அமைந்தன. இவர்களில் செ. யோகநாதன், செ. கதிர்காமநாதன், செம்பியன் செல்வன், செங்கை ஆழியான், துருவன், குந்தலை, மு. பொன்னம்பலம் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இப் பல்கலைக்கழக எழுத்தாளர்களுக்கு – இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனையின் தமிழ்ச் சங்கத்தினரால் வெளியிடப்படும் ஆண்டுச் சஞ்சிகையான இளங்கதிர், மாணவர் சங்க ஆண்டுச் சஞ்சிகையாக மும்மொழிகளில் வெளியாகும். ளுவுருனுநுNவுளு ஊழுருNஊஐடு ஆயுபுயுணுஐNநு – என்பன பெருமளவிற்குதவின.

பல்கலை வெளியீடு

இவை மட்டுமன்றி, இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றிலேயே முதன் முதலாக பல்கலைக்கழக எழுத்தாளர்களிள் சிறுகதைகளை வெளியிடும் தனியார்தாபனம் ஒன்றை ஷபல்கலைவெளியீடு| என்ற பெயரில், அப்போது பட்டதாரி மாணவர்களாக பயின்றுகொண்டிருந்த செங்கைஆழியான், க.நவசோதி, செம்பியன்செல்வன் ஆகியோர் அமைத்து, தங்கள் பயிற்சிக் காலங்களில் ஆண்டொன்றிற்கு ஒரு சிறுகதைக் கோவையாக மூன்று தொகுதிகளை வெளியிட்டமை ஈழத்து இலக்கிய வரலாற்று முக்கியத்தும் பெற்ற சம்பவங்களே. ஷசெங்கை ஆழியான் – நவசோதி, தொகுத்த ஷகதைப்பூங்கா| ஷசெம்பியன்செல்வன் தொகுத்த ஷவிண்ணும் மண்ணும் கலா பரமேஸ்வரன் தொகுத்த ஷகாலத்தின் குரல்கள் இமையவன் தொகுத்த ஷயுகம்| என்பன பல்கலை வெளியீடுகளே. ஈழத்துப் பெரிய பதிப்பகங்களோ – தாபனங்களோ – துணிந்து முதலிட்டுச் செய்ய முடியாத ஒரு தொண்டை பல்கலைக்கழக மாணவர் ஒரு சிலர் மட்டுமே – (பல்கலை வெளியீடு தாபகர்களும், பின் இரு நூல்களின் அதன் தொகுப்பாசிரியர்கள் இருவரும்) மூலதனமிட்டுச் செய்தார்கள் என்றால் அதற்கு அவர்களின் இலக்கிய ஆர்வமும், நிகழ்கால வாழ்வின் சத்திய தரிசனமுமே காரணங்கள் எனலாம். இவ்வாறு இவர்கள் எழுந்தமையால் தான், இப் பல்கலை, வெளியீட்டில் எழுதியவர்களில் பலர் இன்று ஈழத்தின் புதிய யுகத்தின் பூபாளராக எழுத்தாளர்களாக விளங்க முடிகின்றது என்பதும் விமர்சன உண்மையாகும்.

மூன்று நிகழ்ச்சிகள்

1960ஆம் ஆண்டைத் தொடர்ந்து, தென்னகத்திலிருந்து ஈழம் வந்த முக்கிய எழுத்தாளர்கள தெரிவித்த கருத்துக்கள், ஈழத்து எழுத்தாளரின் தன்மான உணர்ச்சியையும், இலக்கிய ஆற்றலையும் கிளர்ந்தெரியச் செய்தன. 1960-ல் இலங்கைவந்த – ஷகங்கை (தற்போது சத்யகங்கை) ஆசிரியர் பகீரதன். ஷஈழம் – இலக்கிய வளர்ச்சியில் தமிழகத்தினைவிட இருபத்தைந்து வருடங்கள் பின் தங்கியுள்ளது – என்ற அறியாமை நிரம்பிய கருத்தை வெளியிட்டதும், அதன்பின் 1961-ல் ஈழம் வந்த இன்றைய தீபம் ஆசிரியர் நா. பார்த்தசாரதி ஷதரத்தின் அடிப்படையில் தமிழகப் பத்திரிகைகளில் ஈழத்து எழுத்தாளர் இடம் கேட்பது நல்லது – என்று தெரிவித்த ஆணவமான ஆலொசனையும், 1966 அளவில் வந்துபோன கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் ஷஈழத்து எழுத்துகளுக்கு அடிக்குறிப்புத் தேவை – என்ற பாமரத்தனமாக கருத்தும் ஈழத்திலே பெரிய இலக்கியச் சூறாவளியைக் கிளப்பிவிட்டது.

புத்துணர்ச்சியையும், எழுச்சியையும் இதனால் பெற்ற ஈழத்து எழுத்தாளர் – உண்மை இலக்கியம் எது? எங்கேயிருக்கிறது அது? – என்பதனை தென்னகத்தாருக்குப் புலப்படுத்தும் வண்ணம் எழுதத் தொடங்கியதும் இக்காலகட்டத்தில் தான். இந்தப் பரபரப்பான சூழலில் – தனது இலக்கியப் பத்திரிகையான ஷசரஸ்வதி|க்கு சந்தா திரட்டவும், ஆதரவு தேடவும் ஈழத்திற்கு வந்திருந்த வ. விஜய பாஸ்கரன் ஈழத்தின் இலக்கியப் போக்கை நன்குணர்ந்து, ஷஈழத்து இலக்கியமே சரியான தடம்பிடித்துச் செல்கிறது என்று கூறியதோடமையாது, தனது சரஸ்வதியி; ஈழத்துப் படைப்புகளுக்கு முக்கிய இடம் கொடுத்தும், ஈழத்து எழுத்தாளர்களின் புகைப்படங்களை அட்டைப்படத்திலிட்டும் கௌரவித்தார்.

ஈழ – மலையகம்

தன்க்கொருவாழ்க்கைமுறை, மொழிவழக்கு, பொருளாதார அமைப்பு எனக்கொண்டு, ஒரு நூற்றாண்டுக்குமேலாக

மனிதத்துவமில்லா நிலையில் வஞ்சிக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் வாழ்ந்த மலையகத்திலும், பற்பல எழுத்தாளர்கள், ஒடுக்கப்பட்டும் வாழ்ந்த மலையகத்திலும், பற்பல எழுத்தாளர்கள் அவ்வப்போது இனம்; காட்டி வந்தாலும், ஷசிறுகதை, கவிதை, நாவல், கட்டுரை ஆகிய இலக்கியத் துறைகளில் மலையக எழுத்தாளர்கள் 1950-ம் ஆண்டிற்குப் பின்னர் காலடி எடுத்துவைத்தனர். என்றாலும் மலையகம் என்ற பிராந்திய பிரக்ஞையோடும், ஒருவகை உத்வேகத்துடனும் எழுதத் தொடங்கியது 1960-ம் ஆண்டுக்குப் பின்னரேயாகும்.

என்.எஸ்.எம்.ராமையா, தெளிவத்தையோசப், சாரல் நாடன், திருச்செந்தூரன், நூரளை சண்முகநாதன், மாத்தளை சோமு, மல்லிகை சி. குமார், பூரணி என்போர் தரமான மலையகச் சிறுகதைகளைப் படைத்துள்ளனர். மலையகத்தில் அவ்வப்போது தோன்றிய சிற்றேடுகளும் இவர்களின் ஆக்க முயற்சிக்கு பெரும் துணைபுரிந்தன. மலைமுரசு, சாரல், செய்தி – பத்திரிகைகளின் தொண்டு குறிப்பிடத்தக்கது. வீரகேசரித்தாபனம் வெளியிட்ட ஷகதைக்கனிகள் சிறுகதைத் தொகுப்பு மலைநாட்டைச் சிறப்பாக பிரதிநிதித்துவப்படுத்தியது.

முந்தாய்ப்பு

தற்காலத்தில், தமிழகத்திலும் ஈழத்திலும் புதிய எண்ணங்களும், புதிய பார்வைகளும் கொண்ட புதிய புதிய எழுத்தாளர்கள் தோன்றிவருகிறார்கள். பலபுதியவர்கள் பழையவர்களைக்காட்டிலும் ஆழமானசிந்தனைகளிலும், அவற்றின் கலாபூர்வமான வெளியீடுகளிலும் சிறந்துவிளங்குகின்றனர். புதிய தலைமுறையினர் மாக்ஸிய லெகிகிசதத்துவார்த்த அடிப்படைகளில் தங்கள் படைப்புக்களை வெளிக்கொணரமுனைகின்றனர்.

தமிழகத்தில் – நீலபத்மனாதன், அசோகமித்திரன், ஆ. மாதவன், பூமணி, சர்ணன், கே. ராமசாமி, ஆதவன், ந. முத்துச்சாமி, சா. கந்தசாமி, அம்பை, ஆர். ராசேந்திரச்சோழன், ராமகிரு~;ணன், நா. சேதுராமன் போன்றோரும் ஈழத்தில் எஸ். பொன்னுத்துரை, டானியல், செ. யோகநாதனட, டொமினிக் ஜீவா, தெணியான், குப்பிளான், ஐ. சண்முகம், சாந்தன், நல்லை, க. பேரன், செங்கை ஆழியான், கே.வி. நடராஜன், மு. பொன்னம்பலம் செம்பியன் செல்வன் போன்றோரும் – தரமான சிறுகதைகளைப்படைப்பதில் பெரிதும் பாடுபட்டுவருகின்றனர்.

– நன்றி: ஈழத் தமிழ்ச் சிறுகதை மணிகள், முதற் பதிப்பு: ஜூலை 1973,

முன்னோடிகள் கலை இலக்கிய விமர்சகர் குழு

சிறுகதை.கொம்

கீழை.நிலாபாரதி

நீள் தனிமை

நினைக்கவே சற்று
பயமாகத்தான் இருக்கிறது..
எப்போதும் தனிமையை கண்டு
பயம் கொள்கிறவன் நான்..
ஆனால் அந்த
தனிமைக்குள் கிடத்தத்தான்
ஒருநாள் என்னையும்
கொண்டு போவார்கள்..
அது நிரந்தர தனிமை
நான் அழுதால் யாருக்கும்
கேட்காத தனிமை..
நான் உதவிக்கேட்டால்
யாரும் முன்வராத தனிமை..
எனக்கு தாகமென்றாலும்
யாரும் தந்து உதவாத தனிமை..
தாயின் கர்ப்பக் கிரகத்தில்
தானாய் முண்டி முண்டி
மேலும் கீழும் கை கால்களை
நானாய் உதைக்கும்போது
என்னை சுற்றியிருந்த
அந்த தனிமை போன்றதல்ல...
இது முற்றிலும் நிராகரிப்பானது...

புறப்படுகிறாள்

பிரான்சிஸ் திமோதிஸ் (இலங்கை – மலைநாடு)

ஊசிமலையின் உச்சியிலிருந்து மெல்ல மெல்ல கீழிறங்கிக்கொண்டிருந்தது பனி. மாதா கோவில் மணியோசை ஊரெங்கும் ஒலித்தது. சாணத்தால் மெழுகிய தரைதனில் கண்தளர்ந்து துயில்விட்டெழுந்தவள் இளஞ்சூடான தேநீரை குடித்துவிட்டு அவசரவசரமாக வீட்டு வேலைகளை தொடங்கினாள்.

ஏம்மா மேரி... சாயந்தண்ணி கொஞ்சம் ஊத்தம்மா... மாட்டுக்கு பில்லு வெட்ட போகனும், நேரமாயிருச்சி...

பள்ளிக்கூடம் போகும் வயசிலேயே தன் அப்பாவையும் அம்மாவையும் இழந்தவள் மேரி. இருவரும் கொழுந்து பறித்துக்கொண்டிருக்கையில்

குளவி கொட்டி இறந்து விட்டார்கள். மேரி தன் பாட்டி சகாயம்மாவின் பாதுகாப்பில் வளர்ந்தாள். மேரிக்கு நல்ல மதிப்பெண்களை பெருமளவுக்கு படிப்புத் திறமையும் இருந்தது. ஆயினும் படிப்பைத் தொடர முடியாமல் தன் குடும்ப வறுமைச் சுமையை சுமக்க மலைக்குப் புறப்பட்டாள். சகாயம்மா கஸ்ட்டப்பட்டு வயித்தைகட்டி வாயைக்கட்டி சிறுகச் சிறுக சேகரித்த பணத்தில் தன் தூரத்துச் சொந்தகாரப் பையன் பீட்டருக்கு மேரியை கரம்பிடித்துக்கொடுத்துவிட்டு கண் மூடினாள்.

என்னங்க... சாயந்தண்ணி ஊத்திட்டேன். குடிச்சிடுங்க, சூடு ஆறிட போகுது.

பீட்டர் 200/ என்னும் இலக்கமிடப்பட்ட லயத்தில் கடைசி காம்புராவில் வசிக்கிறான். பீட்டர் தோட்டப்பாடசாலையில் எட்டாம் வகுப்பு வரை படித்தவன். அதுக்கு மேல் படிக்க இருபது கிலோமீட்டர் தொலைவில் உள்ள டவுன் பாடசாலைக்கு தான் செல்ல வேண்டும். தினமும் அவ்வளவு தூரம் சென்று படிக்க பணம் இல்லாத காரணத்தினால் படிப்பை பாதியிலேயே நிறுத்தி சுயமாக மாடு வளர்ப்பு தொழில் செய்கிறான். பீட்டரின் அப்பா அந்தோணி ஒரு மொடா குடிகாரன். பட்டப்பகலில் குடித்துவிட்டு கூத்தடிக்கின்றவன். குடித்துக் குடித்து குடல் வெந்து மண்ணோடு மண்ணாகினான். பீட்டரை அவனின் அம்மா எழுத வாசிக்கின்ற அளவிற்கு படிக்க வைத்துவிட்டாள்.

ஏம்மா மேரி... நான் பில்லுக்கு போறேன். சின்னவன அனுப்பு, போகிற வழியில ஸ்கூல்ல விட்டுட்டு போறேன்.

பீட்டருக்கு இரண்டு பிள்ளைகள் மூத்தவள் ஜெனி இளையவன் ரெஜி. இருவரும் தோட்டப் பாடசாலையில் படிக்கிறார்கள். இருவருமே அம்மா மேரியைப்போல படிப்பில் கெட்டிக்காரர்கள்தான்.

பீட்டர் அவன் மகன் ரெஜியை தூக்கி தன் தோள்மீது அமரவைத்து நடந்தான். ஊசிமலை உச்சியில் இருந்து கீழிறங்கிய பனி அவர்களின் உதடுகளில் படிந்தது. உடல் சிலிர்த்தது. மயிரத் துவாரங்கள் மூடிக்கொண்டன. தோல்மீது அமர்ந்திருந்த தன் மகனை தன் மார்போடு அள்ளியணைத்துக் கொண்டு விரைந்து நடந்தான் பீட்டர். தூரத்தில் தெரியும் பாடசாலை முற்றத்தில் உள்ளங்கைகளை உரசி சூடேற்றி கன்னத்தில் வைத்து வெய்யிலில் உலரும் மாணவர்களைக் கண்டதும் பீட்டர் தன் வேகத்தை கூட்டினான். இந்த பாலாய்போன மார்கழி எப்போதுதான் முடியுமோ தெரியலை... என்று சலிப்புடன் காலநிலையை கடிந்துக்கொண்டு, பாடசாலை முற்றத்தை அடைந்து தன் மகனை வெய்யிலில் நிறுத்தி அங்கிருந்து நகர்ந்தான். சூரிய ஒளிக்கதிர்கள் பனியை ஊடுருவி அந்த மழலைத் தென்றலின் தேகத்தில் ஒன்றெனக் கலந்தன.

மேரி..... ஏ புள்ள மேரி... இன்னைக்கு எந்த மலை..?

வாடி ராசாத்தி. ஏன் இப்படி காலில சுடுதண்ணீய ஊத்திகிட்டு பறக்குற..? பக்கத்து மலைதான்.

வாடி வெரசா. அந்த ஆளு மன்சூர் கங்கானி லேட்டா போனால் கத்துவது.

மேரி வீட்டு வேலைகளை முடித்துவிட்டு, ஜெனியையும் பாடசாலைக்கு அனுப்பிவிட்டு அவளது சினேகிதி ராசாத்தியுடன் பெரட்டுக் களத்திற்கு விரைந்தாள். பெரட்டுக்களத்தில் சலசலப்புடன் கூட்டம் குழுமியிருந்தது. என்னவென்று யூகிக்க முடியாதவர்களாக போய்ச்சேர்ந்தவர்களுக்கு இதயத்தில் இடி வந்து விழுந்தது. கம்பனி நஷ்டத்தில் இருப்பதாக கூறி பேருக்கு இருபது கிலோ எடுக்கவேண்டுமென்று தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களை பணித்துக்கொண்டிருந்தது தோட்ட நிர்வாகத்தின் அராஜகத்தையும் அவர்களின் சர்வாதிகாரத்தையும் தோட்ட தலைவரும் கட்சித்தலைவரும் பார்த்து வழக்கம் போலவே வாய்பொத்திக்கொண்டு இருந்தார்கள். அருகிலிருந்த கொடிக்கம்பத்தின் உச்சியில் கட்சிக்கொடியும் எப்போதும்போல காற்றடிக்கும் திசையில் பறந்துக் கொண்டிருந்தது.

நாள் சம்பளம் ஆயிரம் ரூபா கேட்கிறோம் அதை கொடுக்க மாட்டேன்றானுங்க. பேருக்கு அத்தனை கிலோ வேணும் இத்தனை கிலோ வேணும்னு மட்டும் வந்திடுவானுங்க. அட்டைக்கடியில கொட்டும் மழையில் காடு, மலை என ஏறி இறங்கி நாங்க படுற வேதனையெல்லாம் இந்த பாலாய்போனவனுங்களுக்கு எங்க விளங்க போகுது. மாசத்துல இருபது நாள்தான் வேலை வருது. அதுல எடுக்குற சம்பளத்துல பாதியை அதுக்கு இதுக்குனு வெட்டிகிறானுங்க. மிச்சம் ஐயாயிரம் பத்தாயிரம் தான் மிஞ்சுது. அதுல எப்படித்தான் குடும்பம் நடத்துறது. நமக்கெல்லாம் ஒரு விடிவு காலமே பிறக்காதா..! என்று புலம்பியபடி மேரி மலையேறினாள். அவளோடு மலையேறிய எல்லா தொழிலாளர்களின் புலம்பலும் அதுவாகவே இருந்தது.

தொழிலாளர்களின் வெடித்துப்பிளந்த பாதங்களின் நடைச்சத்தம் கேட்டு தேயிலைச்செடி அடிவாரச் சருகுகளிலிருந்து மெல்ல மெல்ல எட்டு வைத்து எழுந்தன அட்டைப்புழுக்கள்.

ஏபுள்ள ராசாத்தி, பதினெட்டு கிலோ இருபது கிலோனு ஏழைகளோட ரத்தத்தை குடிக்கிறதே இந்த கம்பனி காரனுங்களோட வேலையா போயிருச்சிடி. இதெல்லாம் எவனும் தட்டிக்கேட்க மாட்டானுங்க, மாசமாசம் சந்தா பணத்தை மட்டும் சரியா எடுத்துக்குவானுங்க. எதிர்த்து நாம எதுசரி கேட்டால் தாட்டு பூட்டுனு சிங்களதுலையும் இரங்கிலீஷினையும் பேசி நம்பளோட வாயை அடைச்சிடுவானுங்க. இந்த நிலைமையெல்லாம் எப்போது மாறுமோ..?

இந்த நிலைமையில இருந்து நமக்கெல்லாம் விடுதலை கிடைக்கிறதுக்கு நம்ப மலையக சமூகம் படிக்கனும்.

லயத்து காம்புராவில இருந்து டீச்சர், வக்கீல், டாக்டர் மேனேஜர்னு நம்ப புள்ளைங்க உருவாகி வரனும். நாமதான் படிக்க வசதி இல்லாம பாதியிலேயே படிப்ப விட்டுட்டோம். நம்ப புள்ளைங்கள கஸ்ட்டப்பட்டாவது படிக்க வைச்சிடனும். அதிகாரம் பண்ணுறவங்கள எதிர்த்து பேசாம இப்படியே கொத்தடிமைகளா இருநூறு வருசம் கடந்தாச்சி. இனியும் இப்படி வாழ கூடாது. நம்ப புள்ளைகளுக்கு இந்த நிலைமை வந்திரகூடாதுடி மேரி.

என்னா... அங்க ஒரே கதையா இருக்கு..? என்று கண்களை அகல விரித்து பல்லைக்கடித்துக்கொண்டு மேரியையும் ராசாத்தியையும் பார்த்து கடிந்துவிட்டு , தோட்ட அதிகாரி ரவுண்ஸ் வருகிறார் என்பதை அறிந்த மன்சூர் கங்காணி ஆண் தொழிலாளர்களைக்கொண்டு நடைப்பாதைகளை செப்பனிடும் வேலையில் மும்முரமாக இருந்தார்.

பொழுது நண்பகலை நெருங்கியது. முதலாவது நிறுவைக்கு மடுவத்தில் பெண் தொழிலாளர்கள் கூடினார்கள்.

ஏய் கிழவி இவளோ நேரத்துக்கு ஏழு கிலோதான் எடுத்திருக்கியா..? நீயெல்லாம் வேலைக்கு வந்து எதுக்கு எங்க உயிர வாங்குற..? போ... போ... என்று ராசம்மாவை உரத்த குரலில் வயசு வித்தியாசமின்றி வஞ்சித்து விரட்டினார் சூப்பர்வைசர்.

ராசம்மாள் கனவன் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் என வாழ்ந்தவள். ஆறு மாதங்களுக்கு முன்பு கடும்மழையினால் ஏற்பட்ட மண்சரிவில் தன் குடும்பத்தில் எல்லோரையும் ஒரே நேரத்தில் பறிகொடுத்து ஓர் அனாதையைப்போல இன்றுவரை தனிமரமாகவே வாழ்கிறாள். வயது ஐம்பத்து எட்டு. அவளது உயிர் உடலைவிட்டு போகும்வரை உழைத்து சாப்பிட வேண்டும் என்று அனுதினமும் மலையேறுகின்றாள். மண்சரிவு அச்சுறுத்தலான இடங்களில் குடியிருப்புகளை அமைத்துக்கொடுத்து இப்படி எத்தனையோ ராசம்மாக்களை உருவாக்கிவிட்டு மனிதாபிமானமின்றி நடந்து கொள்கிறது இந்த தோட்ட நிர்வாக அட்டைகள்.

முதலாவது நிறுவையை நிறைவு செய்த தொழிலாளர்கள் மீண்டும் மலையேறினார்கள். பொழுது சாய்வதற்குள் இருபது கிலோ எடுத்துவிட வேண்டும் என்கின்ற பயம் அவர்களின் இதயத்துடிப்பைக் கூட்டியது. அவசரவசமாக கொழுந்தைக் கொய்து தன் கூடைக்குள் நிரப்பிக்கொண்டிருந்த மேரி தன் மனவேதனைகளை ராசாத்தியிடம் கொட்டினாள்.

ராசாத்தி நம்ப ஊரு பிள்ளைகள் எல்லாம் நல்லா படிக்கிறாங்க. நம்ப துரதிஷ்டம் தோட்டத்து ஸ்கூலில் எட்டாம் வகுப்பு வரைதான் படிக்க முடியும். அதுக்கப்புறம் டவுன் ஸ்கூல்க்கு தான் அனுப்பனும். இந்த வருசத்தோட ஜெனி எட்டாம் வகுப்பு முடிச்சிருவாள். அவள படிக்க வைச்சி பெரிய ஆளா உருவாக்கனும். டவுன் ஸ்கூல்க்கு அனுப்ப நெறைய செலவாகும். இந்த மலையில வேகாத வெய்யிலில அஞ்சிக்கும் பத்துக்கும் வேலை கொடுக்குறானுங்க. இதுல நம்ப புள்ளைகல எப்படி படிக்க வைக்கிறது..? இந்த தோட்ட கம்பனி காரனுங்க நம்ப சமூகத்தையே படிக்கவிட கூடாதுனு இவ்வளவு கஸ்டங்கல நமக்கு கொடுக்குறானுங்க.

இவ்வாறு, மேரி தன் குழந்தைகளின் எதிர்காலத்தை தன் மூளைக்கண்களில் பார்த்துப் பேசிக்கொண்டிருக்கையில் கீழ் வானம் சிவந்து ஒருவழியாக பொழுது சாய்ந்தது. இரண்டாவது நிறுவையை முடித்துவிட்டு லயத்துக்குருவிகள் தன் கூட்டை அடைந்து வயிற்றுப்பசிக்கு மிளாரு குச்சிகளை உடைத்து அடுப்பை மூட்டின. மேரி வழக்கம்போல அட்டைகள் கடித்த காயங்களுக்கு எரிந்த விறகின் சாம்பலை பூசிக்கொண்டிருந்தாள். பீட்டர் டிம்பர் காட்டிலிருந்து சுமந்து வந்த விறகுக்கட்டினை தரைமீது தள்ளி பெருமூச்சை உள் இழுத்து ஊதி ஸ்தோப்புக்காம்புராச் சுவரில் மெல்ல சாய்ந்தான். ஜெனி... தன் தம்பிக்கு எழுத்துக்களையும் எண்களையும் எழுதப்பழக்கினாள்.

ஏம்மா ஜெனி... கொஞ்சம் சாயந்தண்ணி ஊத்துமா. களைப்பா இருக்கு...

என்னங்க படிக்கிற புள்ளைகிட்ட வேலை சொல்லிட்டு இருக்கிங்க.! நீ படிடா பொண்ணு. நான் ஊத்திக் கொடுக்கிறேன் என்றவள், கால் விரலிடுக்கில் இரத்தம் வழியும் காயத்தோடு அடுப்பங்கரையை அடைந்தாள் மேரி.

அப்பா... அப்பா... நான் ஒன்பதாம் வகுப்புக்கு வகுப்பேற்றப்பட்டுவிட்டேன். அடுத்து டவுன் ஸ்கூலுக்கு தான் போகனும். நான் நிறைய படிக்கனும். வக்கீல் ஆகனும். உங்களையும் அம்மாவையும் தம்பியையும் சந்தோசமா பார்த்துக்கனும். என்னை டவுன் ஸ்கூல்ல சேர்த்து விடுவீர்களா அப்பா... என்றாள் ஜெனி. இதே போன்றதொரு நிலைமையில் தன் படிப்பைத் தொடர முடியாமல் படிப்பை இடையில் கைவிட்டதை ஒருகனம் சிந்தித்து பீட்டர் தன் உடல்களைப்பை உதறித்தள்ளி எழுந்து தன் மகளை அள்ளியனைத்து முத்தமிட்டு அப்பா நான் உன்னை படிக்க வைக்கிறேன்டா என் செல்வமே..! நீ ஆசைப்பட்டதைபோல டவுன் ஸ்கூல்க்கு போகலாம். படிச்சு பெரிய வக்கீல் ஆகலாம் என்று நம்பிக்கை மொழியில் பேசினான்.

அப்பாவின் வார்த்தையில் உள்ளம் நெகிழ்ந்தவள், இயேசுசாமி படத்திற்கு விளக்கேற்றி ஜெபிக்கத்தொடங்கினாள்.

மாதா கோவில் மணியோசை ஒலித்தது.

நாளை, லயத்துக்காம்புராவிலிருந்து வக்கீலாக நிச்சயமாக புறப்படுவாள் மூத்தவள் ஜெனி...

எழுதுவதில் அயராதவனாக அடுத்தப்பக்கத்தை புரட்டினான் இளையவன்.



ஒளியின் விழியோரம்

டீன் கபூர்

ஆசிரியர் பாடசாலையின் கூட்ட மண்டபத்தின் அருகில் நின்று கொண்டிருந்தார். இரவு வேளையில் மெல்ல மங்கும் மின் விளக்குகள் மாணவர்களைச் சுற்றியிருந்தன. சில விளக்குகள் ஒளிர, மற்றவை மங்கியிருந்தன. மாணவர்கள் குழப்பத்துடன் ஒரே கேள்வி கேட்டனர்.

“ஏன் விளக்குகள் எல்லாம் ஒரே நேரத்தில் ஒளிரவில்லை?”

ஆசிரியர் ஒரு புன்னகையுடன் மெல்லிய குரலில் சொன்னார்:

“ஒவ்வொரு விளக்கும், உங்கள் உள்ளத்தின் பிரதிபலிப்பே. ஒவ்வொருவரின் ஒளியும் வெவ்வேறு சுடராக இருக்கும்.”

மாணவர்கள் இதைக் கேட்டு, தங்கள் உள்ளத்தில் ஒரு சுழல்நிலை உண்டாயிற்று. அப்பொழுது, ஆசிரியர் கையில் வண்ணக் காகிதங்களை எடுத்துக் காட்டி, அவர்களிடம் கொடுத்தார்.

“இந்தக் காகிதங்களில் உங்கள் ஒளியைத் தேடுங்கள்,” என்று கூறி மாறாக அவர்களை சவால் செய்தார்.

மாணவர்கள் தங்கள் காகிதங்களைப் பார்த்து சிந்திக்க ஆரம்பித்தனர். சிலர் அதில் ஓவியங்களை வரைந்தனர், சிலர் சொற்களை எழுதினர். சில மாணவர்கள் அப்போதைக்கு ஒன்றும் செய்யாமல் வெறுமனே காகிதத்தைப் பிடித்திருந்தனர்.

அந்த சமயத்தில், அஸ்மத் என்ற மாணவன் மட்டும் அசரீர் போலவே இருந்தான். அவன் காகிதத்தை வெறுமனே பிடித்துவைத்திருந்தான்.

“அஸ்மத், உன் ஒளி எங்கே?” என்று ஆசிரியர் கேட்டார்.

அஸ்மத், தலையசைத்துவிட்டு, மெல்ல சொன்னான்.

“என்னால் எனது ஒளியை கண்டுபிடிக்க முடியவில்லை, சேர். என் உள்ளம் வெறுமையாகத்தான் தெரிகிறது.”

அந்த முறை, ஆசிரியர் தனியாக அஸ்மத்திடம் நெருங்கினார். “ஒளி வெறுமையில் இருந்து பிறக்கிறது,” என்று மெல்ல சொன்னார். “உன்னுடைய வெறுமையே ஒரு கருவி. அதைப் பயன்படுத்திக்கொள். உன் உள்ளத்தின் ஆழத்தை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, நீயே உன் ஒளியை கண்டுபிடிப்பாய்.”

அஸ்மத் மௌனமாய் தன் காகிதத்தை நோக்கி இருந்தான். திடீரென்று அவன் மனதின் ஆழத்தில் இருந்து மாயத் திரைகள் அவனைச் சுற்றி மறைக்க ஆரம்பித்தன. அவனுக்கு அந்த மாயம் வழியாக, வானத்தில் பிரகாசமாக வெளிவரும் நட்சத்திரங்கள், நீல நிற மேகங்கள், மற்றும் தூரத்திலிருந்து ஒளிபரக்கும் நிலா தோன்றின.

அஸ்மத் வண்ணக் காகிதத்தில் தனது கற்பனையை வரையத் தொடங்கினான். ஒவ்வொரு வரையலிலும் மாயம் இருந்தது. நட்சத்திரங்கள் சுடர் விட்டன, நிலா அந்த காகிதத்தின் விளிம்பில் சுழலியது, மேலும் அஸ்மத்தின் கையில் ஒரு சிறிய ஒளிச்சுடர் தோன்றியது.

மற்ற மாணவர்கள் அந்த காகிதத்தை பார்த்து மயங்கினர். “இது மெய்ம்மயக்கமா?” என்று ஒரு மாணவன் கேட்டான்.

ஆசிரியர் அதற்கு மட்டும் சிரித்தார். “மெய்யாக இருக்க வேண்டிய அவசியமில்லை. உங்கள் மனதில் உணர்த்தும் ஒன்றின் விளைவு தான் இது.”

அஸ்மத்தின் காகிதத்தை விளக்கில் ஒட்டிய போது, அதிலிருந்து வெளிச்சம் மட்டும் அல்ல, ஆனால் நட்சத்திரங்களின் சிறிய ஒளிப்பின்னல்கள் நேரடியாக மாணவர்களின் முகத்தில் விழுந்தன.

மாற்றி மாற்றி, ஒவ்வொரு மாணவனும், தங்கள் தனித்துவத்தை மீண்டும் கண்டு கொண்டனர். அவர்களின் காகிதங்களில் அவர்கள் ஒளியின் வடிவங்களை வெளிப்படுத்தினர் – சிலர் கலைக் காட்சிகளாக, சிலர் கதைகளாக, சிலர் புன்னகைகளின் சுடர்களாகவும்.

ஆசிரியர் மெல்ல நிமிர்ந்து கூறினார்:

“ஒளி என்பது வெறும் தனிமை அல்ல. அது மாயத்தின் நுழைவாயில். நீங்கள் அனைவரும் உங்கள் ஒளியை மீட்டுக்கொண்டால், உங்களுடைய உலகம் இன்னும் பிரகாசமாகும்.”

அஸ்மத் மட்டும் ஆழமாக சிந்தித்தான். “ஆனால், இது நிஜமாக எத்தனை நாளைக்கு இருக்கப் போகிறது?”

ஆசிரியர் சிறிது மௌனமாக இருந்தார். பின்னர் கூறினார்:

“ஒளி தங்கியிருக்காது. ஆனால் நீங்கள் அதனோடு வாழ்ந்ததனால், அதன் மாயத்தன்மை உங்களை என்றும் தொடரும்.”

அந்த நாளின் முடிவில், விளக்குகள் முழுவதும் ஒளிர்ந்தன. ஆனால் ஒளியின் எழுச்சியிலும், அந்த மாயத் திரைகள் மட்டும் மாணவர்களின் மனதில் ஒரு இரகசியமாகவே நின்றன.

அதிலிருந்து, ஒவ்வொரு மாணவரும் தங்கள் வாழ்க்கையின் சுடர்விளக்குகளை, அவர்களது மாயத்தன்மையை பகிர்ந்து கொண்டனர். அவர்களது ஒளி ஒருவரை ஒருவர் இணைத்தது, மேலும் அவர்கள் வாழும் உலகத்தை ஒளிமயமாக மாற்றியது.

ஆசிரியர் மாணவர்களின் காகிதங்களைச் சேகரிக்கும்போது, அவற்றின் நிறங்களில் ஒரு தனித்துவமான தாளம் உணர்ந்தார். ஒவ்வொரு காகிதமும் வெவ்வேறு குரலில் பேசுவது

போல, அவற்றின் தனித்துவத்தைப் போலவே, ஒளியின் ஏற்றத்தாழ்வும் வெளிப்பட்டது. அஸ்மத்தின் காகிதத்தில் ஒரு ஒளி பரந்து சென்று மற்ற காகிதங்களை இணைத்தது. அது பாடசாலையின் தரையில் ஒரு மாயவட்டத்தை உருவாக்கியது. அந்த வட்டத்தின் மையத்தில் மாணவர்கள் ஒரு திகைப்பையும் மகிழ்ச்சியையும் கொண்டிருந்தனர்.

அஸ்மத் தனது காகிதத்தை மீண்டும் நோக்கினார். காகிதத்தின் குறுகிய ஓரங்களில் விலகி ஒளி உள்வாங்கியது போல இருந்தது. அவன் தன் உள்ளத்தின் ஆழத்துக்குள் ஒளியின் துளிகளை காண முயன்றான். அவனுடைய மனதில் சிறு சிறு நினைவுகள் ஒளிர்ந்தன – ஒரு மழைநாள், தாய் தரிசித்த மயிலைப் பார்த்தது, ஒரு காற்றில் பறந்த மஞ்சள் இலை – அவனது கற்பனைகளின் வெளிச்சம் மெதுவாகக் காகிதத்தில் பரவியது.

மறுநாள், பாடசாலை முழுவதும் மாறியது போல தோன்றியது. ஒவ்வொரு மரத்திலும் சிறு விளக்குகள் தொங்கின. அவை ஒளி துளிகளை வெளியேற்றிச் சிறு கோலங்களாக காட்சியளித்தன. மாணவர்கள் இவற்றை நோக்க, ஒளி அவர்களது சிந்தனைகளைப் போல மாறி விளங்கியது. ஒளியின் மெல்லிய அலைகளில் தங்கள் வாழ்க்கையின் பிரதிபலிப்புகளை மாணவர்கள் கண்டனர்.

ஆசிரியர் அந்த ஒளியை அடக்கிய கலைஞனின் கண்மூடித்தனமாக மெல்ல மாறிக்கொண்டிருந்தார். "ஒளி என்பது உங்கள் உள்ளத்திலிருந்து வந்தது; அதை வெளியில் கொண்டு வருவதில் உங்கள் கற்பனையின் ஆழம் உணர்ச்சியாய் மாறுகிறது," என்று அவர் மெதுவாக சொன்னார்.

அந்த மாலை, ஒளி மங்கியபோது, அஸ்மத் வானத்தை நோக்கிக் கொண்டிருந்தான். அவனுடைய காகிதத்தில் எழுந்த ஒளியின் விளிம்புகள் காற்றில் கலந்து, ஒரு நட்சத்திரத்தை போன்று மின்னின. அவன் மனதுக்குள், அந்த ஒளியுடன் இருந்த யாரோ ஒருவர் சொன்னார்: "இது உன்னுடையதுதான்; ஆனால் உன்னை விட்டு உலகை ஒளிமயமாக்க இது போகிறது."

மாணவர்கள் ஒளியின் ஆழம் முழுமையாக புரிந்து கொண்டதுபோல, ஒவ்வொருவரும் தங்கள் காகிதங்களை எடுத்து மீண்டும் தொலைவில் உட்கார்ந்தனர். ஒளியின் சிறு புள்ளிகள் ஒவ்வொரு காகிதத்திலும் ஒளிர, அவர்கள் உலகத்தின் மாயமான முழுமையை உணர்ந்தனர்.

அந்த ஒளி விழி அவர்கள் வாழ்க்கையின் ஒரு பக்கம் மாறி, அவர்களது தனித்துவத்தையும் ஒற்றுமையையும் பிணைக்கும் ஒளிக்கோவையாக வாழ்ந்தது. ஒளியின் வழியெங்கும் பரந்த மாயம், ஒவ்வொரு மனதிலும் ஒரு புதிய அத்தியாயமாக எழுதப்பட்டது.

ஸ்ரீவாரி மஞ்சு, திண்டுக்கல்

அதீத ஆழத்தில்
தரைத் தொட்டாலும்
கரையேறும் வெளிச்சப் புள்ளியின்
தொடக்கப்புள்ளியிட்ட வாழ்க்கைக்கு...
எத்தனை பல்லாங்குழிகளில்
புளியங்கொட்டையாய்
குழிகளில் மாற்றி மாற்றி
போராட வைப்பது...
தூரத்தில் பயணிக்கும்
என் முகத்தை
வலுக்கட்டாயமாக என்னிடம்
அழைக்கிறேன்
நிரப்பிட இயலாத இடைவெளிக்குள்
நானும் என் முகமும்....

இதோ...

உள் அறையின்
ஊமை இருள் தட்டுகிறது
சாளரத்தை மட்டுமே
மெதுவாக திறக்கிறேன்...
ஒளிச் சுடரில்
மெது மெதுவாய்
இருள் கரைய
அகண்டவெளியின்
பிரமாண்டத்தில்
நான் ஒரு வெளிச்சப் புள்ளியின்
தொடக்கப்புள்ளியாகுகிறேன்
மீண்டும்
அண்டத்தில்...

சா.நாகூர் பிச்சை, துபாய்

எதார்த்தம்

பறித்தப் பூக்களுக்கே உள்ளப் பாங்கு;
உதிர்த்தப் பூக்களுக்கும்,
உதிர்ந்தப் பூக்களுக்கும் இல்லை என்பதே
எதார்த்தம்!

காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஆவணி - 2022


கார்த்திகை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
கவிதைச் சிறப்பிதழ்

மாசி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்

காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
புரட்டாசி : 2024

முந்தைய இதழ்கள்

காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
பங்குனி - 2024
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்

காற்றுவெளி
ஆடி - 2024
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மார்கழி - 2023
சொக்கன் சிறப்பிதழ்

காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
தை - 2023